

# வெல்வோம், அதற்காக...!

சீலன்

முன்னணி வெளியீடு -01

படிப்பகம்

சீலன்

# வெல்வோம்.., அதற்காக..!

முன்னணி வெளியீடு

படிப்பகம்

பதிப்புரிமையும் வெளியீடும்
முன்னணி வெளியீட்டகம்
முதற் பதிப்பு: ஐப்பசி 2014

தொடர்புகளுக்கு
munnanee@gmail.com

Copyright
Munnani publisher
First Edition: October 2014

munnanee@gmail.com

படிப்பகம்

## முன்னுரை:

### மரணத்தின் வெளிகளில் வாழ்ந்த ஒரு போராளியின் பதிவுகள்!!

எண்பத்துமூன்று ஆடி இனக்கலவரம்.., இனவெறி அரசின் காடைத்தனம்.., கண்டு பொங்கி எழுகிறார்கள், இனி இது பொறுப்பதற்கில்லை என்று ஆண்களும், பெண்களும் வீடுகளை விட்டு வீதிக்கு வருகிறார்கள். மக்களிற்காக, மண்ணிற்காக மரணத்தையும் எதிர்கொள்வோம் என்று அலை அலையாக எழுந்தார்கள். பெற்ற தாய், தந்தையரை விட்டு, காதலுக்குரியவர்களை விட்டு, கைக்குழந்தைகளைக் கூட விட்டுவிட்டு இனி ஒரு விதி செய்வோம் என்று விண்ணதிர வந்தார்கள். பாசம் அறுத்து, நேசம் மறந்து, ஆசை துறந்து நம்தேசம் மீட்போம் என்று வெஞ்சமர் புரிய வந்தார்கள்.

சிங்கள பெருந்தேசியவாதிகளின் கொலைகளையும், சித்திரவதைகளையும் எதிர்த்து இயக்கங்களில் சேர்ந்தவர்களை அந்த இயக்கத்தலைவர்களே மரணத்தின் இருள்வெளிகளிற்கு மறுபடி தள்ளினார்கள். இயக்கத்தலைமைகளின் அராஜகத்தை, ஜனநாயக மறுப்பை எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டனர். மக்கள் போராட்டத்தை நம்பாமல் ஆயுதங்களையும், அந்நிய சக்திகளையும் சார்ந்திருப்பதை கேள்வி கேட்டவர்கள் சிறை வைக்கப்பட்டனர். இன்னொரு தமிழ் இயக்கத்தின் ஆதரவாளனாக, உளவாளியாக இருக்கலாம் என்ற ஒரு சிறு சந்தேகமே பல அப்பாவிகளின் உயிரைப் பறித்தது. எல்லா உயிரினதும் ஆதார உணர்ச்சியான காதல் மனதில் மலர்ந்தது என்ற காரணத்திற்காகவே மண்ணிற்குள்ளே பலர் புதைக்கப்பட்டார்கள்

மனதில் தமிழ்மக்களின் விடுதலைக்கனல் கொழுந்து விட்டெரிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேரும் சீலன் ஆயுதப்பயிற்சிக்காக தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறார். பயிற்சி முகாமில் சித்திரவதைகளை கண்முன்னே காண்கிறார். பயிற்சிக்கு வந்த ஒருவரை உளவாளி என்று சந்தேகப்பட்டு சித்திரவதை செய்கிறார்கள். அவரது கையைக் கீறி அந்த வெட்டுக்காயத்திற்குள் வெடிமருந்தை நிரப்பி தீ வைக்கிறார்கள். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் உமாமகேஸ்வரனுடன் சேர்ந்து லெபனானில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சி எடுத்த விச்சு என்பவர் உமாமகேஸ்வரனுடன் முரண்பட்டதால் சீலன் இருந்த முகாமில் சிறை வைக்கப்படுகிறார். சிறையில் இருந்து

தப்பி பட்டுக்கோட்டையில் ஒரு பண்ணையார் வீட்டில் அடைக்கலம் புகுகிறார். விச்சுவை பிடிக்கப்போன உமாமகேஸ்வரனின் அடியாட்களை தடுத்த பண்ணை யாரை சுட்டுக் கொல்கிறார்கள். தமக்கு தளமாக இருந்த தமிழ் நாட்டில் வைத்து தமிழ்நாட்டு குடிமகனையே சுட்டுக் கொல்லுமளவிற்கு அராஜகம் செய்கிறார்கள்.

அவரது இயல்பான நேர்மையும், தோழர் தங்கராசா போன்ற தோழர்கள் மூலம் கற்றுக் கொண்ட விடுதலை அரசியலான பொதுவுடமை தத்துவமும் அவரை சித்திரவதைகள், ஜனநாயக மறுப்பு போன்றவைகளிற்கு எதிராக போரிட வைக்கிறது. அவரும் அவரை ஒத்த கருத்து கொண்டவர்களும் சேர்ந்து அறிக்கை ஒன்றை தலைமைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அமைப்பிற்குள் ஜனநாயகம் வேண்டும், போராளிகளிற்கு அரசியல் கல்வி அளிக்கப்பட வேண்டும், அமைப்பின் தலைமை நீண்டகாலமாக தமிழ்நாட்டில் இருப்பதால் போராட்டத்திலிருந்தும், மக்களிடமிருந்தும் அன்னியப்பட்டிருப்பது குறித்து விவாதிக்கப்பட வேண்டும், ஒரு போராட்ட அமைப்பின் இராணுவப்பிரிவு அரசியல்மயப்படுத்தப்பட்டதாகவே இருக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அந்த அறிக்கையில் வைக்கிறார்கள்.

சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் என்பதை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொள்கையாக சொல்லித் திரிந்த உமாமகேஸ்வரனும், அவரது அடியாட்களும் போராட்டத்தை அரசியல்மயப்படுத்த வேண்டும் என்றும், அமைபினுள் இருக்கும் அடக்குமுறைகளிற்கு தீர்வு காணப்பட வேண்டும் எழுந்த குரல்களை வன்முறை மூலம் அடக்க முற்பட்டார்கள். தம்முடன் முரண்பட்டவர்களை கொலை செய்வதை தான் போராட்டம் என்று சொல்லி வந்த கொலைகாரர்களாகத் தான் எல்லா இயக்கங்களும் இருந்தன. "மக்களிற்கு அரசியல் பேச்சுரிமைகளைக் கொடுத்தால் நாம் அரசியல் அநாதைகளாகி விடுவோம்" என்று அறிக்கை விடுமளவிற்கு "அரசியல் அறிவு" உள்ளவர்களாகவே இயக்கங்கள் இருந்தன.

ஆனால் அவர்கள் எதிர் கொண்ட வன்முறைகள் அவர்களை மேலும்மேலும் உறுதி கொண்டவர்களாக வளர்த்து விடுகிறது. மிக இளம் வயதில் சிறு அளவில் கற்றுக் கொண்ட அரசியற் கல்வியுடன் அவர்கள் போராடும் போது நீண்ட கால போராட்ட அனுபவமும் அரசியல் முதிர்ச்சியும் கொண்ட சில தோழர்கள் இயக்கத் தலைமைகளுடன் சேர்ந்து நின்றார்கள். சிலர் எந்தவித எதிர்ப்பையும் காட்டாது தாம் மட்டும் தப்பி போனார்கள் என்கின்ற விமர்சனத்தை சீலன் முன் வைக்கின்றார். அவர் சொல்வது போல சிலர் இருந்தார்கள். சில தோழர்கள் தம்

உயிரிலும் மேலாக நேசித்த மக்களின் விடுதலையையும், தாம் கட்டி வளர்த்த போராட்ட அமைப்புகளையும் உடைவுகள் பலவீனப்படுத்தி விடும் என்று பயந்து எதிர்க்காமல் இருந்தனர். ஆனால் அவ்வாறு இருந்த மக்களிற்காகவே வாழ்ந்த பல போராளிகளும் கூட இந்த கொலைகாரர்களால் கொல்லப்பட்டனர்.

மக்களை நம்பாமல், சக தோழர்களை நம்பாமல், விடுதலையின் அரசியல் கல்வியான பொதுவுடமை தத்துவங்களை நம்பாமல்.., ஆயுதங்களையும், வெளிநாட்டு கொள்ளையர்களையும் நம்பியவர்கள் இறுதியில் தாங்களும் அழிந்து மக்களையும் பலி கொடுத்தார்கள். இவ்வளவு அழிவின் பின்பு கூட மறுபடியும் மற்றவர்கள் வந்து மக்களை மீட்பார்கள் என்று ஏமாற்றுகிறார்கள். இந்த நேரத்தில் சீலன் போன்றவர்களின் போராட்ட அனுபவங்கள் எமது போராட்டங்கள் எந்தப் பாதையில் போக வேண்டும் என்பதை தீர்மானிக்க உதவி செய்கின்றன. அவரது இந்த பதிவுகளில் முரண்பாடுகள் இருக்கலாம். சில நகர்வுகளை வேறு விதமாக எடுத்திருக்கலாம் என்று தோன்றலாம். சில தோழர்களைப் பற்றிய விமர்சனங்களிற்கு வேறு பக்கங்களும் இருக்கக்கூடும். ஆனால் அவரது பதிவுகளும், அவர் போன்ற மக்களை நேசித்த தோழர்களின் பதிவுகளும் தமிழ்மக்களின் வருங்காலம் செல்ல வேண்டிய திசையை காட்டி நிற்கின்றன.

இயக்கங்களால் செய்யப்பட்ட கொலைகளும், சித்திரவதைகளும் தமிழ்மக்களின் வரலாற்றில் வெட்கித் தலை குனிய வைக்கும் பக்கங்கள். ஆனால் இந்த கொலையாளிகளிற்கு அஞ்சாமல் சீலன் போன்ற போரளிகள் எல்லா இயக்கங்களிலும் இருந்தார்கள். அராஜகங்களை எதிர்த்து குரல் கொடுத்தார்கள். மரணம் வரும் என்று தெரிந்தும் போராட்டத்தில் உறுதி யோடு நின்றார்கள். அந்தக் குரல்களின், போராட்டங்களின்.., தொடர்ச்சியாகத் தான் இலங்கையின் இன்றைய இருள்வெளிகளிற்குள்ளும் மின்மினியின் மினுங்கலாய் என்றாலும் விளக்குகள் எரிகின்றன.

கல் நிறைந்த பாதையில் கால்கள் களைத்தாலும் காற்றில் அசைந்தாடும்
செங்கொடிகளை கைகள் ஏந்தியிருக்கின்றன.
குரல்வளைகளை நெரிக்கும் கரங்களை மீறி நட்சத்திரங்களை
வாரி இறைக்கும் வானம் எங்கும் எழுகிறது....

— விடுதலையின் பாடல்.

படிப்பகம்

## உள்ளே...


1. தாம் மட்டும் தப்பித்தால் போதும் என நினைத்த தீப்பொறியினர்
2. 1983 இல் இயக்கத்தில் இருப்பதென்பது கதாநாயகத்தனமாகும்
3. மூன்றே மாதத்தில் பயிற்சியை முடித்துக் கொள்ளும் கனவுடன்
4. தண்டனை முகாமை எல்லோரும் நாலாம் மாடி என்பார்கள்
5. தேச விடுதலை என்றும், பாட்டாளி வர்க்கப்புரட்சி என்றும் பேசியபடி
6. நான் தோழர் சந்ததியரைச் சந்தித்தேன்
7. சாதிக்குடாகவே தீர்வைக் காணும் வழிமுறையை நாடிய தலைமை
8. மகஜர் அனுப்பி தலைமையுடன் போராட்டம்
9. புளட் அமைப்பை விமர்சித்த எங்களை புலி என்றனர், துரோகி என்றனர்
10. எம்மில் யாராவது உயிருடன் தப்பித்தால், எமக்கு நடந்ததை மற்றவர்களுக்கு கூறும்படியும்
11. அடியில் மயங்கினேன், சிறுநீர் இரத்தமாகவே சென்றது
12. மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டால் என்னை அறியாது மலசலம் வரும்
13. சந்ததியாரின் வழிகாட்டுதலின் பேரிலேயே இது நடந்தது என்று எழுதித் தருமாறு கூறினர்
14. எம்மை புதைக்க, நாம் வெட்டிய குழி
15. காந்தன் தப்பியோட, நாம் அடிவாங்குகின்றோம்
16. தங்கள் கடந்த காலத்தை சுயவிமர்சனம் செய்யாத தீப்பொறி
17. உமாமகேஸ்வரன் விசுவாசிகள் போன்று நடிக்கக் கோரினர், நடித்தோம்
18. நம்பிக்கைக்குரிய ஆளாக நடிக்க, சுந்தரத்தினதும் உமாமகேஸ்வரனினதும் படத்தை கழுத்தில் தொங்கவிட்டேன்
19. பெண் போராளிகளை அச்சுறுத்தி மிரட்டிய ரிவால்வர் ரீற்றா
20. தளத்துக்கு திரும்பியது, தலைமைக்கோ அன்றி அனைத்து முகாம் பொறுப்பாளருக்கோ தெரியாது

# 1

# தாம் மட்டும் தப்பித்தால் போதும் என நினைத்த தீப்பொறியினர்...

இனவாத அரசாலும் குறுந்தேசியவாதிகளாலும் உருவாக்கப்பட்ட தமிழ் குறுந்தேசியவாத யுத்தத்தில் பங்குகொண்ட போராளிகளில் நானும் ஒருவன். அந்த வகையில் நான் எனது அனுபவத்தையும், எனக்கு அறிந்த விடையங்களையும் இங்கே ஒரு பதிவாகத் தரமுற்படுகின்றேன். அதன் பால் நான் அறிந்த விடையங்களைப் பலருடன் உரையாடி அதன் உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்திய பின் இப்பதிவை வெளிக்கொண்டு வர முற்படுகின்றேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது 1983களில் ஒரு பாரிய பாச்சலை முன்னெடுத்தது. இதனால் தமிழ் பகுதிகளில் பெரும்பாலான இளைஞர்களையும் யுவதி களையும் ஏதோ ஒருவிதத்தில் அப்போராட்டம் தனக்குள் உள்வாங்கிக் கொண்டது. ஒரே இலட்சியத்திற்காகப் போராடப் பல அமைப்புகள் உருவாகின. அவற்றில் அதில் ஒன்றிரண்டைத் தவிர அனைத்தும் குறுந்தேசியவாதத்தின் அடிப்படையில் பதவிமோகம், அதிகார வேட்கை, உட்கட்சி முரண்பாடுகளின் அடிப்படையில் பிரிந்து உருவாகின. இதனால் ஒரு கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அண்ணளவாக 37 இயக்கங்கள் இருந்தன.

படிப்பகம்

அவைகள் பின்வருமாறு:

A List of active Tamil Militant Groups:

| | | |
|---|---|---|
| 1. | LTTE | Libration Tigers of Tamil Eelam |
| 2. | PLOT | People|s Libration Organisation of Tamil Eelam |
| 3. | TELO | Tamil Eelam Libration Organization |
| 4. | TELA | Tamil Eelam Libration Army |
| 5. | TEA | Tamil Eelam Army |
| 6. | EROS | Eelam Revolutionary Organization |
| 7. | EPRLF | Eelam People|s Revolutionary Libration Front |
| 8. | TELE | Tamil Eelam Libration Extremists |
| 9. | TERO | Tamil Eelam Revolutionary Organization |
| 10. | TERPLA | Tamil Eelam Revolutionary People| Libration Army |
| 11. | RFTE | Red Front of Tamil Eelamists |
| 12. | TELG | Tamil Eelam Libration Guerrillas |
| 13. | NLFT | Nation Libration Front of Tamil Eelam |
| 14. | PLFT | People|s Libration Front of Tamil Eelam |
| 15. | IFTA | Ilankai Freedom Tamil Army |
| 16. | TEDF | Tamil Eelam Defence Front |
| 17. | TENA | Tamil Eelam National Army |
| 18. | TPSO | Tamil People|s Security Organization |
| 19. | TPSF | Tamil People|s Security Front |
| 20. | TEC | Tamil Eelam Commando |
| 21. | TELF | Tamil Eelam Libration Front |
| 22. | TEEF | Tamil Eelam Eagles Front |
| 23. | GATE | Guerrilla Army of Tamil Eelam |
| 24. | RCG | Red Crescent Guerrillas |
| 25. | EM | Eagle Movement |
| 26. | SRSL | Socialist Revolutionary Social Libration |
| 27. | TEBM | Tamil Eelam Blood Movement |
| 28. | TPCU | Tamil People|s Command Unit |
| 29. | ELT | Eelam Libration Tigers |
| 30. | TLDF | Tamil Libration Defence Front |
| 31. | RELO | Revolutionary Eelam Libration Organization |
| 32. | TESS | Tamil Eelam Security Service |
| 33. | PLP | People Libration Party |
| 34. | TPDF | Tamil People|s Democratic Front |
| 35. | TELC | Tamil Eelam Libration Cobras |
| 36. | TS | Three Stars |
| 37. | ENDLF | Eelam National Democratic Libration Front |

இவ்வியக்கங்களில் கணிசமான அளவு போராளிகள் இருந்தனர். அவர்களிற் பலருக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான கசப்பான அனுபவங்களும், அவர்கள் சார்ந்த அமைப்புகள் மீதான விமர்சனங்களும் இருந்தவண்ணமே இருந்த போதும், தொடர்ந்தும் அவ்வமைப்புகளில் இயங்கியவர்கள் பலர். இவர்களை விட

படிப்பகம்

தலைமையில் இருந்த படி அமைப்புகளை நாசமாக்கித் தமது சுகபோகத்தை அனுபவித்தவர்களும் பலர். ஆனால் அமைப்புகளின் மீதான விமர்சனங்களையோ அல்லது தாம் கொண்ட அனுபவத்தையே இவர்களில் எத்தனைபேர் ஆவணமாகவோ அல்லது விமர்சனமாகவோ பதிவு செய்துள்ளனர்?

கணேசன் ஐயரினால் (ஆரம்பகால தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்) அவரது போராட்ட வரலாறு எழுதத் தொடங்கிய பிற்பாடு பலருக்கு தமது விமர்சனத்தையும் அதிருப்தியையும் எழுதமுடியும் என்று முணுமுணுக்க ஆரம்பித்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது. இயக்கங்களில் இருந்த பலர் தமது இயங்கங்களின் உள்முரண்பாடுகளின் காரணமாகவும், புலிகளின் சகோதரப் படுகொலைகள் காரணமாகவும் ஒதுங்கியவர்கள், இன்று தமக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்றாற் போல மௌனித்தும் ஒதுங்கியும் வாழ்ந்து வருகின்றனர். இது ஒருபுறமிருக்க இன்னும் சிலர் 80–களின் பிற்பகுதியில் இருந்து சஞ்சிகைகளை வெளிக்கொண்டு வந்தனர். இதில் பல சஞ்சிகைகள் ஒரே பாணியில் இருந்தன. இவற்றை விட இலக்கியச் சந்திப்பு என்றும், மூன்றாவது பாதை என்றும், இன்னும் ஒரு படி முன்னேறி ஒரு கூட்டு வேலைமுறையை நோக்கி நகர முற்பட்டனர். ஆனால் அவைகள் அனைத்தும் சிதறிச் சின்னாபின்னமாகின. ஐரோப்பாவில் இருந்து தமிழீழக் கட்சி என்றும், இந்தியாவில் இருந்து தேசபக்த முன்னணியினர் கழகம் என்ற இரண்டும் மட்டுமே முன்பு சஞ்சிகைகளாக இருந்தவர்களில் கணிசமானோரை உள்வாங்கிக் கொண்டது. தமிழீழக் கட்சியை புலிகள் தமக்குள் உள்வாங்கிக் கொள்ள, தேசபக்தன் செயற்பாட்டை நிறுத்தியது. இவ்வாறு இவ்விரு அமைப்பும் செயலற்றுப் போக இணையத்தளங்கள் உருவாகின. இவற்றின் வளர்ச்சியில் இன்று சிறு சிறுகுழுக்களாக பலர் ஒன்று திரண்டு வருகின்றனர். இருந்த போதும் இதில் பல குழுக்கள் முள்ளிவாய்க்காலுடன் முடிந்துபோன எமது போராட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தாது, எங்கு முடிந்ததோ அங்கிருந்தே ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறான நிலையில், மீண்டும் தமிழ் மக்கள் மீது தமது நலன் சார்ந்த பலரால் உருவாக்கப்படும் புதிய அமைப்புகளில்

அடாவடித்தனமும், நேர்மையற்ற அரசியல் போக்கையும் கட்டவிழ்த்து விட வழிவகுக்கும். இதனடிப்படையிலேயே நான் எனக்கு நடந்த அனுபவத்தை, எழுத்துருவில் கொண்டுவர முயற்சிக்கின்றேன்.

இந்த வகையில் நான் அங்கத்துவம் வகித்த தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், மார்க்சியம் பேசிக்கொண்டு எவ்வாறு மக்கள் விரோதப் போக்கை கொண்டிருந்தது என்பதை உணர்த்த முனைகின்றேன். மக்கள் விடுதலையை விரும்பி பயிற்சிக்கு சென்றவர்களை, எவ்வாறு நடத்தியது என்பதை கவனத்தில் கொண்டு வரமுனைகின்றேன். அதேவேளையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் நடந்த உட்படுகொலைகளுக்கும், ஒட்டு மொத்தத்தில் உமாமகேஸ்வரனை பழிமுடித்து விட்டு தாம் தப்பித்துக் கொள்ளும் பலரை, அவர்களின் இயக்கப் பெயர்களுடன் அம்பலப்படுத்தும் வகையில் இதை எழுத முற்படுகின்றேன். இங்கு கவனிக்க வேண்டியது நான் உமாமகேஸ்வரனை நல்லவர் என்றோ அல்லது அவர் கொலை செய்யவில்லை என்றோ இங்கு கூறவரவில்லை. அத்தோடு நடந்த அத்தனை கொலைகளுக்கும் கழகத்தின் செயலதிபர் என்ற நிலையில் அவர் மீது குற்றம் சுமத்தினாலும், இதில் பல கொலைகள் அவருக்கு தெரியாமேலே நடந்தேறின என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அதுமட்டுமல்லாது இன்று தம்மை புரட்சியாளர்களாகவும் முற்போக்குவாதிகளாகவும் காட்டிவரும் பலர், இச்சம்பவங்களுடன் மறைமுகமாக சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை வெளிக்கொணரும் முகமாகவும் , எனக்கு தெரிந்தவற்றை எழுத முற்படுகின்றேன்.

இவர்கள் பலர் தம்மை பற்றிய எந்தவித சுயவிமர்சனங்களும் இன்றி, மக்களுக்கு மீண்டும் ஏதோ ஒருவகை யில் தீங்கிழைக்க முற்படுகின்றனர். இதைக் கருத்தில் கொண்டும் எமது போராட்டமானது மக்கள் சார்பில் எவ்வாறு நிலைகொள்ள வேண்டும் என்பதையும், மக்கள் இவர்கள் மத்தியில் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தவே, எனக்குக் கிடைத்த கசப்பான அனுபவங்களினுடாக மீளாய்வினைச் செய்ய முற்படுகின்றேன்.

அத்துடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உட்படுகொலைகள் பற்றியும், அதன் அராஜகப் போக்குகள் பற்றியும் தோழர் கேசவனால் (புளட்டின் மத்திய குழு உறுப்பினர் பின் தீப்பொறி மத்திய குழு உறுப்பினர். புலிகளால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டவர்) எழுதப்பட்ட புதியதோர் உலகம் என்ற நூலில் அடங்காத பல விடையங்களை இங்கு ஆராய முற்படுகின்றேன். இதில் புதியதோர் உலகம் தீப்பொறி (புளட்டில் இருந்து பிரிந்த அமைப்பு) என்ற அமைப்பால் வெளியிடப்பட்டபோதும், அவ்வமைப்பையும் எனது பாதையில் விமர்சனத்துக்குள்ளாக்குகின்றேன். தீப்பொறி அமைப்பானது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இருந்து இடைநடுவில் பிரிந்து சென்ற பலரை, உள்வாங்கிய ஒரு அமைப்பாக இருந்தது. இதில் பலர் நடந்த உட்படுகொலைக்கு பதில் கூறவேண்டியவர்களாக இருந்த போதும், புதியதோர் உலகம் என்ற நூலின் மூலம் தமக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை என நிறுவித் தப்பித்தனர். எனவே அந்நூலுக்கு அப்பால் நடந்தது என்ன என்பதையும், எவ்வாறு தீப்பொறியினர் மற்றைய போராளிகளை விட்டுவிட்டு, தமது உயிரை பாதுகாத்துக் கொண்டனர் என்பதையும் விமர்சனத்துக்குள்ளாக்க வேண்டியுள்ளது. தீப்பொறியினர் பிரிந்து செல்வதற்கு முன்பே, இந்தியாவில் முகாம் ஒன்றில் நடந்த உட்கட்சிப் போராட்டம் தொடர் பாக அவர்கள் எதையும் கருத்தில் கொள்ளாது, தாம் மட்டும் தப்பித்தால் போதும் என நினைத்த பலரையும் இங்கு பார்வைக்குட்படுத்துகின்றேன்.

# 2

# 1983 இல் இயக்கத்தில் இருப்பதென்பது கீரோத்தனமாகும்...

எனது பெயர் சீலன். நான் இன்று ஐரோப்பாவில், எனக்கான முகவரிகள் தொலைந்தவனாய் வாழ்ந்துவரும் ஒரு தமிழன். வடக்கே எனது பிறப்பிடமாகும். எனது இளம் பராயத்தைப் பற்றி பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. அதனால் அவற்றை ஒருபுறம் வைத்துவிடுவோம். இனி எனது போராளி வாழ்க்கையில், நான் நோயாளியாகிப் போராடித் தொலைத்த போராளியின் வாழ்க்கைக்குள் போவோம்.

ஏதோ ஏகாந்தமான, அதிமிதவாத அரசியலாற் பொருமி வீங்கத் தொடங்கிய காலமான 1983 இல், எனது இளமைக் காலம் இயக்க கதாநாயகத்தனத்தை நாடியது. ஈழ மண்ணின் விடுதலைக்கான ஆயுதப் போராட்ட வடிவங்களுக்குள் நாம் கவரப்பட்டோம். சிறிய பாடசாலை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை வகைதொகையின்றி, இயக்கத்தில் இணைய ஆரம்பித்த காலம் அது. அக்காலத்திலேயே நான் தமிழீழ மக்கள் விடுத லைக் கழகம் என்ற அமைப்பில், என்னையும் இணைத்துக் கொண்டேன். உண்மையைச் சொல்லப்போனால், எனக்குள் தமிழ் தேசிய விடுதலை உணர்வுகள் அன்று இருந்ததென்று சொல்லமாட்டேன். மாறாக ஏதோ போராடவேண்டும் என்ற உணர்ச்சி வேட்கையே என்னுள் இருந்தது. அதாவது சிங்களவர் என்றாலே அவர்கள் மீது ஒருவித காழ்ப்புணர்ச்சி என்னிடம் இருந்தது. அது என்னை என்னவோ செய்தது. அதற்கான காரணங்களும், எனது ஆழ்மனதில் பதிவாகிக் கிடந்தது.

படிப்பகம்

அன்றைய காலத்தில் எனது தந்தை இலங்கைக் காவல்துறையில் கடமையாற்றினார். அவருக்கு தொலை தூர இடங்களுக்கான மாற்றங்கள் வரும்போது, அவரோடு வீட்டாரும் சேர்ந்து செல்லவேண்டிய நிலை. அப்படித்தான் ஒருமுறை அப்பாவிற்கு புதிய இடமாற்றம் வந்தது. அது 1976ஆம் ஆண்டு. திருகோணமலைக்கு இடம் மாறினோம். எனக்கு அப்போது 10வயது கொண்ட சிறுவன்.

அந்தக் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்தோர், திருகோணமலை முத்தவெளியில் பெரிய அளவிலான கூட்டத்தைக் கூட்டினர். அதற்காகப் பல கூட்டணிப் பிரமுகர்கள், பேச்சாளர்கள் வருகை தந்தனர். அவர்களைத் திருமலை இளைஞர்கள், மாலை சூட்டி வரவேற்றனர். அதன் முன்னணியில் நின்ற சிலர் ஏதோ முறுக்கெடுப்பவராகவும், உணர்ச்சி வசப்பட்டவர்களாகவும் எனக்குத் தெரிந்தது. நானும் வைத்த கண் வாங்காமல் அவர்களையே பார்த்தேன். சிறு கணப்பொழுதில் அவர்கள் தமது கைகளை தாமே சவரத் தகடுகளால் வெட்டிக் காயப்படுத்தினர். சிலரது கைகளில் மிக ஆழமாக வெட்டுப்பட்டதால் நரம்புகள் அறுபட்டு, அவர்களின் இரத்தம் அந்த மண்ணில் நீராய் ஓடியது. அந்தப் பிரமுகர்கள் ஒரு வகையான திகைப்பு கலந்த புன்சிரிப்புடன் ஏறிட்டு நின்றனர். இவர்களோ ஒருவகை ஆவேசத்துடன் அங்கே வருகை தந்த பிரமுகர்களின் நெற்றிகளில் அந்த இரத்தங்களைத் தொட்டுத் தொட்டு பொட்டுப் பொட்டாய் திலகமிட்டனர். ஏதோ ஏதோ கோசங்கள் வேறு. இதுவோ என்மனதிலில் ஆழப் பதிந்துபோனது. அன்று அவர்களின் மிடக்கும், அவர்களின் வசீகரமான வீரியப் பேச்சுகளும் இணைந்து, என்னைக் கவர்ந்தது. எங்கள் தமிழினத்தை தினமும் அழிக்கின்ற சிங்கள அரசை உடைக்கவேண்டும் அழிக்க வேண்டும் என்று அவர்கள் அறைகூவினர். இது எதிரிச் சிங்களரை எதிர்த்துத் தாக்கவேண்டும், அழிக்கவேண்டும் என்ற உந்துதலை, என்னுள் ஏற்படுத்தி என்னை எரியவைத்தது.

1983 முற்பகுதியில் இயங்கங்களின் செயற்பாடுகள் ஓரளவு துரிதமடைந்த காலகட்டம். அக்காலத்தில் தான் பல இயக்கப் புத்தகங்கள், பத்திரிகைகள் எனது

கையில் கிடைக்கப்பெற்றன. அவற்றை வாசிக்கும் போது உணர்சிகள் தானகவே வரும். அதுமட்டுமின்றி யாழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டமும், இதற்கு பாடசாலைகளிலும், ஊர் மக்கள் மத்தியிலிருந்தும் அதிக வரவேற்பு கிடைத்தது. இதை வழிபட்ட எமக்கு, போராட்டப் புத்தகங்களையோ அல்லது பத்திரிகைகளையே தருபவர்களை, ஏதோ ஒரு கதாநாய கர்களாகவே தெரிந்தார்கள். இப்படி எல்லோரும் அவர் களை பார்த்தனர். அப்படி பார்க்க வைத்தனர். அன்றைய காலகட்டத்தில், இயக்கத்தில் இருப்பதென்பது ஒருவகை கீரோத்தனமாகும். அது அன்றைய சூழலாகவும் இருந்தது. அவ்வாறுதான் அன்றைய இயக்கங்களில் இருந்தவர்களும், தம்மை தாம் காட்டிக் கொண்டனர். மக்களோடு மக்களாக நின்று மக்களை அணிதிரட்ட வேண்டியவர்கள், தம்மை ஒரு மேதாவிகள் போல் காட்டி நடந்தனர். மக்கள் மத்தியில் தாம் உயர் நிலையில் உள்ளவர்கள் போலவுமே, காட்டிக் கொண்டனர். இதன் விளைவுகளாலேயே மக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை விளங்கமறுத்தனர். ஏன், பலர் இன்றும் கூட "இயக்கங்கள் மக்கள் மத்தியில் வேலை செய்தன" என்று கூறவரலாம். ஆம், இயங்கள் மக்கள் மத்தியில் வேலை செய்தன தான். ஆனால், அவ்வேலைகள் மக்கள் விடுதலை சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக, அவர்களின் வேலை முறை, மக்களை போராட்டத்திற்கு ஏற்ப வளர்த்து எடுக்காது, உணர்ச்சிகளின் அடிப்படையில் மக்களை திரட்ட முற்பட்டதேயாகும்.

அக்காலகட்த்தில் தான், எனது உறவினரில் ஒரு வரான சுகந்தன் என்பர் தமிழீழ மக்கள் விடுத லைக் கழகத்தில் வேலைசெய்தார். அவர் மூலம் என்னைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் பெயர்ப் பதிவற்ற அடிநிலை உறுப்பினராக இணைத்துக் கொண்டேன். ஒரு கொஞ்சக் காலம் எனது ஊரிலேயே துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் சென்று மக்களிடம் பரப்புகின்ற ஆரம்ப வேலைகளை செய்துவந்தேன். அத்துடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் நடத்தப்படும் பொதுக் கூட்டங்களைப் பற்றிய தகவல்களை மக்கள் மத்தியில் பரப்புவதுடன், அக்கூட்டங்களிலும் நான் தவறாது கலந்து கொண்டேன்.

அத்துடன் ஆரம்பப் போராளிகளுக்காக நடைபெறும் பாசறைகளிலும் கலந்துகொண்டேன்.

இங்கு முக்கியமாக பாசறை பற்றி எனது அனுபவத்தை கூறமுனைகின்றேன். பாசறை என்பது ஆரம்ப தோழர்களுக்கு நடத்தப்படும் அரசியல் வகுப்பாகவே இருந்தது. இதில் ஆரம்பமட்ட உறுப்பினர்களை அணிதிரட்டி, அரசியல் முதிர்ச்சி பெற்ற ஒருவரால் அரசியல் வகுப்பு நடத்தப்படும். அங்கு மார்க்சியம், லெனினியம், தேசிய இனப்பிரச்னை, போன்ற விடையங்கள் விவாதிக்கப்பட்டாலும், பெரும்பான்மையான சந்தர்ப்பங் களில் மற்றைய இயக்கங்களை குறைகூறுவது தான் அதி கமாக அரசியல் வகுப்புகளின் உள்ளடக்கமாகவிருந்தது. இதில் தேசிய இனப்பிரச்சனை குறித்து இன்றைய எனது பார்வையின் அடிப்படையில், அன்று வகுப்பு நடத்தியவர்களுக்கு வரலாற்று அடிப்படையிலானதோ அல்லது கோட்பாட்டு அடிப்படையிலான புரிந்துணர்வோ விளக்கமோ இருக்கவில்லை. ஒருவகை குறுந்தேசிய இனவாத அடிப்படையில் சிங்கள அரசுக்கு எதிராக போராடவேண்டும் என்ற உணர்வூட்டப்பட்டதுடன், மற்றைய இயக்கங்களின் இருந்து நாம் எவ்வாறு அதி சிறந்த முறையில் வித்தியாசப்படுகிறோம் என்பதே பாசறை வகுப்புகளில் நாம் கற்றுக்கொண்டது.

தேசியவாதமானது ஒரு முதலாளித்துவத்தின் அடிப் படையிலான கோரிக்கை என்பதை மறுத்து, அதை சோசலிச கொள்கைகளுடன் போட்டுக் குழப்பினார்கள். மார்க்சியம் என்றால் என்ன என்பதற்கு பதிலாக, தாம் தம் இயக்கத்துக்கு ஏற்ப எதை மார்க்சியமாக கற்றனரோ, அதை அப்படியே அடிமட்டத் தோழர்களான எங்களுக்கு முன்வைத்தனர். எனக்கு இவர்களின் இச் சொற்பதங்கள் எதுவுமே விளங்கவில்லை. உதாரணத்திற்கு குட்டி பூர்சுவா, லும்பன், போன்ற பாதங்கள். இவற்றை என்னவென்று விளக்கம் கேட்கவும் முடியாது. இப்பாசறை என்பது இரண்டு மூன்று நாட்கள் நடக்கும். சில, ஒரு வாரத்திற்கு மேலாகவும் நடக்கும். இந்த ஒரு வாரத்திலேயே பலர் தமக்கு அரசியல் அறிவு வந்து விட்டது என்று நினைத்தவாறு,

பிரச்சாரத்திற்கு புறப்பட்டுவிடுவார்கள். என்ன பிரச்சாரம் என்றால், தமது கொள்கைகளை விளக்குவதை விடவும், மற்றைய இயக்கங்களை குறைகூறுவதே பிரச்சாரமாக இருந்தது. பிற்காலத்தில் பாசறை என்ற பெயரால் பல தில்லுமுல்லுக்கள் நடத்ததாக, கொக்குவிலைச் சேர்ந்த ஐயுப் என்ற நண்பர் பின்தளத்திற்கு வந்த போது பலரிடம் குறிப்பிட்டார்.

படிப்பகம்

# 3

## மூன்றே மாதத்தில் பயிற்சியை முடித்துக் கொள்ளும் கனவுடன்...

*1984 ஆரம்பப் பகுதியிலேயே இராணுவப் பயிற்சி எடுப்பதற்காக இந்தியாவிற்குச் (பின்தளம்) செல்ல விரும்பினேன். ஆனால் அன்றை சந்தர்ப்பத்தில் முடியவில்லை. அப்போதுதான் என்னுடன் ஒன்றாக ஒரே வகுப்பில் கல்விகற்ற மாணவர்கள் அனைவரும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில் இணைந்து இராணுவப் பயிற்சி எடுப்பதற்காக இந்தியா சென்றனர். நானும் அவர்களுடன் செல்ல முற்பட்ட போது, என்னை நிற்கும்படியும் தாம் சென்ற பின்னர் வரும்படியும் எனது வகுப்பு மாணவர்கள் கூறிச் சென்றனர்.*

*சில மாதங்கள் கழித்து 19.04.1984 அன்று எனக்கு இராணு வப் பயிற்சி எடுக்க இந்தியாவிற்கு செல்ல வாய்புக் கிட்டியது. என்றும் இல்லாதவாறு அன்று என் மனதில் பல சந்தோசக் கனவுகள், படங்களாக வந்து போயின. என்ன, ஒரு மூன்றே மாதத்திலேயே பயிற்சியை முடித்துக்கொண்டு இலங்கைக்கு (தளத்திற்கு), அதாவது சொந்த மண்ணுக்குத் திரும்பிவிடலாம், என்ற எண்ணங்களுடன் எனது ஆயுதப் பயிற்சிக்கான பயணம் ஆரம்பித்தது.*

*அன்று என்னை சுகந்தன் என்பவர் எனது ஊரில் இருந்து மானிப்பாய்க்கு கூட்டிச்சென்றார் அங்கு எமக்காகக் காத்திருந்த நேசனிடம் எம்மை ஒப்படைத்தார். அவர்*

படிப்பகம்

என்னையும் என்னுடன் வந்த முரளி அழகன் என்பவரையும் இளவாலைக்கு அழைத்துச் சென்றார். என்னைப் போலவே வேறு சில தோழர்களும் இளவாலைக்கு வந்திருந்திருந்தார்கள். ஆனால், எங்களை அன்றிரவு தமிழ் நாட்டுக்கு படகில் ஏற்றவில்லை. காரணம் இலங்கை கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் அதிகமாகவிருந்தது. அதனால் மறுநாள் எம்மை படகில் ஏற்றினார்கள். நாங்கள் தமிழ் நாட்டுக்கு பயணிக்கின்றோம். எங்களுக்கு ஓட்டியாக வந்தவர் தோழர் பாண்டி. அன்று நாம் பயணித்த போது கடலில் பலத்த கொந்தளிப்பு. அதனால் குறித்த நேரத்திற்கு கோடியாக் கரையை (கோடிக்கரை) எங்களால் அடைய முடியவில்லை. இரவு முழுவதும் படகை கடலிலேயே தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. படகு அலையின் கொந்தழிப்பால் அங்குமிங்குமாக அலைந்து ஆட்டங்காட்டியது. நாம் கடலுக்குள் மூழ்கப் போகிறோமென என் மனதில் எண்ணங்கள் அலை பாய்ந்தது. எமது வாழ்க்கை முழு மையாக முடிந்துவிட்டது போன்றதொரு பயம் என்னை ஆட்கொண்டது. என்ன செய்வதென்று புரியாமல் அந்தப் படகின் ஓர் ஓரத்தில் முடங்கினேன். அழுகை தானாக வந்தது. கடல் அவ்வப்போது எங்களை நனைத்துக்கொண்டது. கண்களும் கரித்தது. அது கடல் நீரா, கண்ணீரா என்பதைப் புரியாத நிலையில் ஏதோ நாவிலும் உவர்த்தது. அந்தக் கடல் அலையின் எழுற்சியும், உப்புக் காற்றும், படகின் பயங்கர ஆட்டமும் கலந்து ஏற்படுத்திய மனக் குழப்பத்தால் எனக்கு வயிற்றைக் குமட்டி, வாந்தி எடுக்கத் தொடங்கினேன். வாந்தி எடுப்பது எனக்கு பெருந்தொல்லை தந்தது. அந்த அசதி காரணமாக இருக்கலாம், நான் என்னையும் அறியாமல் ஆழ்ந்து உறங்கிவிட்டேன்.

மறுநாள் காலை, தோழர் பாண்டி எங்களை ஒரு கடற்கரையில் இறக்கினார். அந்தக் கரையோர மக்கள் எங்களைக் கண்டதும், ஆமா நீங்க விடுதலைப்புலிங்களா! என விசாரிக்க ஆரம்பித்தனர். நாம் ஒன்றுமே பேசாது நின்றோம். தோழர் பாண்டியே அவர்களுடன் கதைத்தார். அந்தக் கதைகளெல்லாம் என் காதிலும் விழுந்தது. இங்கு எல்லோரையுமே விடுதலைப்புலிகள் என்றுதான் அழைக்கிறார்கள் என்பதனை அப்போதுதான் எனக்குப் புரிந்தது. ஆனால் அதில் ஒருவரிடம் பாண்டி

கூறினார், நாம் "முகுந்தன் பார்ட்டி"..., இவ்வாறு சம்பாசனைகள் நடைபெற்றது. அப்படியே அந்தக் கடற்கரையில் நேரம் கழிந்தது. மதியம்போல் எம்மை அழைத்துச் செல்ல ஒரு வண்டி வந்தது. அதில் எல்லோரையும் ஏறும்படி கூறினார்கள். நாமும் ஏறினோம். இரண்டு அல்லது மூன்று மணிநேர ஓட்டத்தின் பின்னர், ஒரு சிறிய ஊரை அடைந்தோம். அங்கிருந்து பஸ்வண்டி மூலம் எம்மை பட்டுக்கோட்டை என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அது ஒரு நகரம். அங்கிருந்து மீண்டும் தஞ்சாவூர் நோக்கிச் செல்லும் பஸ்வண்டியில் ஏற்றினார்கள். அந்தப் பயணத்தின் இடையில் நாம் இறக்கப்பட்டோம். அங்கிருந்து சிறுதூரம் நடந்து ஒரு வீட்டை அடைந்தோம். அது இயக்கத்தின் ஒபீஸ் (காரியாலயம்) என்றார்கள். அங்கு எம்மைப்போன்று பலர் இருந்தனர். அவர்களும் இராணுவப்பயிற்சிக்காக வந்தவர்கள் என்பதை என்னால் உணர முடிந்தது.

ஆனால் எம்மை அழைத்து வந்தவர் எவருடனும் கதைக்க வேண்டாம் என்று கூறியபடி எம்மை உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே சென்றதும் எம்மை தனிமைப்படுத்தினர். அப்போது அங்கு வந்த ஒருவர், உங்கள் சொந்தப் பெயர்களை இனி நீங்கள் பாவிக்க முடியாது, புனை பெயர்களைத்தான் பாவிக்கவேணும் என்றார். அப்போது ஒவ்வொருவரும் தங்களின் உறவினர், காதலி, நண்பன் என அவர்களின் பெயர்களை தமது புனை பெயராக வைத்தனர். எனக்கோ எந்தவித அபிப்பிராயமும் இல்லாததால், நான் காந்தன் என்று வைக்க உத்தேசித்தேன். சிறிது நேரம் கழித்து, தனித்தனியாக எம்மை ஒரு அறைக்குள் வரச்சொன்னார்கள். அதன்படி ஒவ்வொருவராக உள்ளே சென்று வந்தனர். நானும் உள்ளே சென்றேன். அங்கே எனது சொந்தப் பெயர், ஊர், வீட்டுவிலாசம் என்பவற்றைப் பதிந்தார்கள். எனக்கு சுட்டிலக்கமும் தரப்பட்டது. எனது இலக்கம் 1825 என்றும், எனது புனைபெயர் காந்தன் என்றும், இனி இந்தப் பெயர்தான் பாவிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. அன்று இரவு அங்கேயே தங்கினோம். மறுநாள் காலை எழுந்ததும், ஒருவர் எம்மை அழைத்தார். இன்று பயிற்சி முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் எனக் கூறினார். மதியமளவில் ஒவ்வொருவருக்கும் ஒரு

அலுமினியக் குவளை, தட்டு, காற்சட்டை, பெனியன் மற்றும் போர்வையுடன், படுப்பதற்காக இருவருக்கு ஒரு பாய் எனச்சொல்லி தந்தார்கள்.

பிற்பகல் ஒரு லொறியில் எம்மை ஏறச்சொன்னார்கள். நாம் அதில் ஏறும்போது எமது உடமைகளுடனேயே ஏறினோம். அந்த வண்டியில் சமையலுக்கான பொருட்கள் இருந்தன. அவற்றை கண்டதும் என் மனதில் முதல் குழப்பம் ஏற்பட்டது. வண்டி புறப்பட்டு அரை மணிநேர ஓட்டத்தின் பின்பு, ஒரு சவுக்கு மரக்காட்டை நோக்கி திரும்பியது. அப்படியே சற்று நேரம் ஓட திடீரென ஒரு இடத்தில் வண்டியை நிறுத்து, கையை உயர்த்து (STOP, Hands up) என்றதும் எனக்கு பயம்பிடித்தது. சற்று நேரத்தில், வாகனச் செலுத்துனரும், நிறுத்தக் கூறியவரும் தமிழில் உரையாடத் தொடங்கியதும் எனது பயம் தணிந்தது. அவர்கள் எமது வண்டியை அனுமதிக்க, வண்டி முகாமிற்குள் நுழைந்தது. நாம் சென்றது இரவு என்பதால் எனக்கு எங்கிருந்து எங்கு வந்துள்ளோம் என்பது சரியாக தெரியாத நிலை யில் எனக்கு எல்லாமே ஒரு விசித்திரமாகவும், பயமாகவும் மனதிற்பட்டது.

அங்கு எம்மை வரவேற்க முகாமின் பொறுப்பாளர் மதன் மற்றும் உதவிப் பொறுப்பாளர் பாண்டியும் அங்கு நின்று கொண்டிருந்தனர் . இவர்களில் பாண்டி ஜேர்மனியில் இருந்து இராணுவ பயிற்சிக்காக வந்து பதவி உயர்வு பெற்றவர். நாம் வண்டியால் இறக்கப்பட்டதும் ஓர் இடத்தில் அமரும்படி கூறினார்கள். வண்டியில் இருந்த பொருட்களை இறக்கிய பின்னர் வண்டி புறப்பட்டது. அதன் பின்பு முகாமின் பொறுப்பாளர் தன்னை அறிமுகம் செய்தார். தனது பெயர் மதன் என்றும், மற்றவரைக்காட்டி இவர் தோழர் பாண்டி என்றும் கூறினார். அதன் பின்பு இரவுப் படுக்கைக்கான வசதிகளையும் செய்து தந்தனர். எல்லோருக்கும் போலவே எனக்கும் தளத்தில் இருந்து வந்த பிரயாணக் களைப்பு இருந்தது. அன்றிரவு நான் நன்றாகவே உறங்கிவிட்டேன். மறுநாள் காலை எழுந்து பார்த்தேன். முகாமில் அதிகமானோரைக் காணவில்லை. முகாம் பொறுப்பாளர் எம்மை நோக்கி வந்தார். நீங்கள் காலைக் கடனை முடித்துவிட்டு வாருங்கள் எனக் கூறினார். எமக்கு

உதவிக்காக ஒரு தோழரையும் அனுப்பினார். அவர் சவுக்கம் காட்டைக் காட்டி, அங்கு மலம் கழித்துவிட்டு வாருங்கள் என்றார். எனக்கோ என்ன செய்வதென்று தெரியாத குழப்ப நிலை. என்னை போல் அனைவரும் திகைத்துப் போய் நின்றார்கள். சற்று நேரத்தின் பின், சிறிது தூரம் நடந்தபின், ஒரு குளாய் கிணற்றைக் காட்டி.., அங்கே முகம் கழுவிவிட்டு வாருங்கள் என்றார். அவ்வாறே செய்து முகாம் நோக்கி திரும்பினோம்.

அவ்வேளையில் காலைப் பயிற்சி முடித்துத் திரும்பிய தோழர்கள், முகாமின் முற்றத்தில் வரிசையாக நின்றார்கள். அப்போது அங்கு முகாமின் மையப்பகுதியில் நின்ற கொடிக் கம்பத்தில், கழகக் கொடி ஏற்றப்பட்டது. அதன் பின்பு சற்று நேரம் உரையாடினார்கள். திடீரென விசில் அடித்தது. எல்லோரும் கலைந்து சென்றார்கள். மீண்டும் ஒரு விசில் கேட்டது. தட்டு மற்றும் குவளையுடன் எல்லோரும் ஓடிச்சென்று சமையல் பகுதிக்கு முன்னாக வரிசையில் நின்றனர். நாமும் சென்றோம். முகாமின் பொறுப்பாளர் அங்கு வந்து, எமக்கே இன்று முதலிடம், உணவை எமக்கு முதல் பரிமாறும் படி கூறினார். அவித்த கடலையும் தேனீரும் தந்தனர்.

# 4

## தண்டனை முகாமை எல்லோரும் "நாலாம் மாடி" என்பார்கள்...

*எனக்கு முன்பாகவே இராணுவப் பயிற்சிக்கு வந்திருந்த, என்னைத் தெரிந்தவர்களும், என்னுடன் கல்விகற்றவர்களும் எனதருகில் வந்தனர். தமது உறவினர்கள் பற்றி விசாரிக்கத் தொடங்கினர். பலர் தமது தாய் தந்தை சகோதரர் களையே விசாரித்தனர். சிலர் தமது காதலிகளைப் பற்றியும் விசாரித்தனர். இதற்கு அடிப்படைக் காரணம் இவர்களில் பலர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பால் உந்தப்பட்டோ, விடுதலை விரும்பியோ இராணு வப் பயிற்சிக்கு வரவில்லை. மாறாகப் பலர் காதலில் தோல்வியுற்ற உணர்வாலும், பெற்றோருடன் கோவித்துக் கொண்டும் இயக்கத்திற்கு வந்தவர்கள். அல்லது தன்னைத் தனது சமுதாயத்தில் அடையாளப்படுத்துவதற்காக கவர்ச்சி வாதத்தால் உந்தப்பட்டே வந்தவர்களாவார். இதனால் அவர்களிடம் எந்தவித அரசியல் தெளிவும் இருக்கவில்லை ஏன் மக்கள், சமூகம் பற்றிய பார்வை கூட சரியாக இருக்கவில்லை. மாறாக தாம் இராணுவப் பயிற்சிக்கு வந்த இடத்தில் தமது திறமைகளைக் காட்டுவதும், முகாம் பொறுப்பாளர்களுக்கு விசுவாசமாக இருப்பதுவுமே முக்கியமானதாகக் கருதினர் .*

*10.30 மணியளவில் விசில் சத்தம் கேட்டது. எல்லோரும் மைதானத்தில் அணிதிரண்டோம். அங்கே ஒருவர் சத்தம்*

படிப்பகம்

போட்டவாறு அணிவகுப்பிற்கான ஒழுங்குகளைச் செய்தார். தோழர் லெனின் என்ற முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி, அணிவகுத்து நின்றோருக்கு பயிற்சிகளை ஆரம்பித்தார். நாம் அதைப் பார்த்தபடி இருக்கும்போது, என்னுடன் வந்தவர்களில் சிலர் மனம் நொந்தவர்களாக முகத்தை முகம் பார்த்தனர். அப்படியே பலதும் பத்துமாக மெதுவாகக் கதைக்க ஆரம்பித்தோம். நீங்கள் இப்பிடிக் கதைக்க வேண்டாமென, எங்களுக்கு உதவிகள் செய்யவதற்காக அங்கே நின்ற தோழர் சொன்னார். ஏதாவது தவறாகவோ அல்லது நக்கலாகவோ கதைத்தால் தண்டனை கிடைக்கும் என்றார். எனக்கு அப்போ இந்தத் தண்டனை என்றால் என்னவென்று விளங்கவேயில்லை. சற்று தூரத்தில் ஒரு தோழர் மைதானத்தைச் சுற்றி குத்துக்கரணம் அடித்துக் கொண்டிருந்தார். அவரைக் காட்டி, இதுதான் தண்டனை (பணிஸ்மன்ற்) என்றதும் எனக்கு பயம் பிடித்தது.

பின்னர் மதியம் உணவிற்கு விசில் அடிக்க எல்லோரும் வரிசையாக நின்றனர். உணவு பரிமாறப்பட்டது. சிலர் மிக விரைவாக உண்டனர். ஏனென்று அன்று எனக்குப் புரியவில்லை. அதற்கு காரணம் உணவு உண்டு கொண்டிருக்கும் வேளையில் திடீர் என அபாய ஒலி எழுப்புவார்கள். உடனேயே உணவை வைத்துவிட்டு, தமக்கு என கொடுக்கப்பட்ட இடங்களில் போய் பதுங்கி இருத்தல் வேண்டும். அபாய ஒலி எழுப்பிய பின்னர் யாராவது தொடர்ந்து உணவு உண்டாலோ அல்லது ஓடும் போது உணவு தட்டுகளை கவனித்து விலத்தி ஓடினாலே அவர்களுக்கும் தண்டனை தான். இது பயிற்சியின் ஒரு பகுதியாக இருந்தது. எனவே தான் எல்லோரும் உணவை விரைவில் உட்கொண்டனர்.

உண்டவர்கள் தமது முகாமிற்குள் (கொட்டிலிற்குள்) சென்று உறங்க முற்பட்டனர். அவ்வேளை முன்பு வந்தவர்கள் சில புத்தகங்களை எடுத்து வாசித்தனர். இங்கு இருந்த புத்தகங்களைப் பற்றி குறிப்பிட வேண்டும். அதாவது மொஸ்கோ பதிப்பக புத்தகங்கள், இடதுசாரியப் புத்தகங்கள் தான் அதிகமாக காணப்பட்டது. அதைவிட உள்நாட்டு பத்திரிகைகளும், வேறு சில புத்தகங்களும் இருந்தன. இதில் எடுத்து படிப்பவர்கள், மொஸ்கோ பதிப்பக புத்தகங்களை

படிப்பது கிடையாது. மாறாக உள்நாட்டு செய்தித் தாள்களையும், கதைப் புத்தகங்களையுமே வாசித்தனர்.

இதற்கு அடிப்படைக் காரணம், அங்கு பயிற்சியில் ஈட்டவர்களுக்கு அரசியல் வகுப்பு எடுக்கப்படாமையே. அரசியல் அற்ற சுத்த இந்திய இராணுவ முறையி லான பயிற்சியாகவே இருந்தது. இந்த இராணுவப் பயிற்சி முகாமில் அரசியல் வகுப்பு எடுப்பதற்கு என ஒரு நபர் கூட இருக்கவில்லை. அங்கு பயிற்சி கொடுத்த மதன், பாண்டி என இருவரும் இந்திய இராணுவத்தினரால் உத்தரப்பிரதேசத்தில் வைத்து பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள் என்பதுடன், அன்றைய அனைத்து முகாம்களின் பொறுப்பாளராக இருந்தவர் பரந்தன் ராஜன். இவர்களுக்கோ அல்லது அன்று மத்திய குழுவில் இருந்தவர்களுக்கோ, அரசியல் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை. ஆனாலும் பின்னாளில் தேனீ மற்றும் புதுக்கோட்டை முகாம்களில் அரசியல் கற்பிக்கப்பட்டதாக அறிந்தேன். அது எந்தளவு உண்மை என்பது எனக்குத் தெரியாது. நான் இங்கு குறிப்பிட்ட முகாம், பீ காம். இது 400க்கு மேற்பட்ட தோழர்களை கொண்டிருந்தது. இதில் எமக்கு ஐந்து மாதங்களுக்கு முன்வந்தவர்கள் உட்பட, ஒவ்வொரு நாளும் வரும் புதியவர்களும் இணைக்கப்பட்டனர். தளத்தில் இருந்து வந்தவர்களுக்கு அரசியல் வகுப்புக்கள் எடுத்து, அதன் பின்னர் ஆயுதப் பயிற்சியை கொடுத்திருந்தால் அரசியல் அறிவு கலந்த ஒரு ஆயுதக் குழுவை உருவாக்கியிருக்க முடியும். மாறாக தளத்தில் முதல் நாள் அடிமட்ட உறுப்பினராக சேர்ந்தவரைக்கூட, இங்கு அனுப்பி வைத்தார்கள். தளத்தில் இயக்கத்திற்காக வேலை செய்தவர்கள் தாம் அரசியல் அறிவு ஊட்டப்பட்டவர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்ட போதும், அமைப்புக்கு இணையும் தோழர்களுக்கு அரசியல் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று இவர்களில் எவரும் எண்ணியதாகத் தெரியவில்லை.

அன்றைய காலகட்டத்தில் யார் எந்த இயக்கத்துக்கு போவது என்பதைக் காட்டிலும், எந்த இயக்கத்திலாவது போய் பயிற்சி எடுத்து வரவேண்டும் என்ற ஆர்வம்தான் பல இளைஞர்களிடம் காணப்பட்டது. ஒரு நாள் ஒரு இயக்கம் அவரை ஏற்க மறுத்தால், மறுநாள் மற்ற இயக்கம் அவரை

*பயிற்சிக்கு இந்தியாவிற்கு அனுப்பிவிடும். எனவே தளத்தில் விடுதலை இயக்கத்திற்கு ஆட்சேகரிப்பு என்பதிலும் பார்க்க, சும்மா போனவன் வந்தவனை எல்லாம் அனுப்பினர். எந்த அமைப்பில், அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் இருக்கின்றனர் என்று காட்ட முயன்றார்கள். இதன் விளைவே பிற்காலத்தில் எமது போராட்டம் சிதைவடைந்த நிலைக்குப் போனதற்கான காரணிகளில் ஒன்றாகும் .*

*மதியத்துக்கு பின்பாக எல்லோரையும் குளிக்க அனுமதித்தனர். எல்லோரும் சென்று குளித்தனர். மாலை 6 மணிக்கு ஒரு விசில். எல்லோரும் மீண்டும் மைதானத்தில் சாரத்துடன் அணி திரண்டனர். அங்கு ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த கலை இலக்கிய வடிவங்களைச் செய்து காட்டினர். அதன் பின்பு இரவு உணவு. அனைவரும் நித்திரைக்கு சென்றனர். அப்போது என்னுடன் ஒன்றாகப் படித்த நண்பர்கள் சிலர் என்னைச் சந்தித்து, தங்கள் மனந்திறந்து மெதுவாகக் கதைத்தனர். அவர்கள் தமது அனுபவத்தை ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்ல, எனது மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. அவர்கள் என்னைப் பார்த்து, நீ எதற்கும் வாயைத் திறக்காதே என்றனர். ஏனென்று பின்பு ஆறுதலாகக் கதைக்கலாம் எனச் சொல்லி, நித்திரைக்குச் சென்றனர். அன்று நான் தூங்கவில்லை. காரணம் பயம். அடுத்தது அப்போது தான் முதற் தடவையாக வீட்டாரைப் பிரிந்துவந்த கவலை, என்னைப் பெரிதும் வாட்ட ஆரம்பித்தது.*

*மறுநாள் காலை 4.30 மணிக்கு விசில் சத்தம் கேட்டது. என்னையும் எழுப்பினர். நானும் மற்றவர்களைப் பார்த்து, அவர்கள் என்ன செய்கின்றனரோ அதையே செய்தேன். காலைக்கடன் முடித்து தேனீர் அருந்தியதும் மைதானத்தில் அணிவகுக்கும்படி கூறினார்கள். நாமும் நின்றோம். இன்று உங்களுக்கு பயிற்சி ஆரம்பமாகிறது எனக்கூறி எம்மை மற்றவர்களின் பின்னால் வரும்படி கூறினர். நாமும் அவர்களைப் பின் தொடர்ந்தோம். சற்றுத் தூரம் சவுக்குமரக் காட்டிற்குள்ளால் சென்ற பின்னர், ஒரு திறந்தவெளி மைதானத்தை அடைந்தோம். அங்கே பயிற்றுனர் காத்திருந்தார். அவர் அந்த மைதானத்தைச் சுற்றி ஓடும்படி உத்தரவிட்டார். ஒரு சுற்று ஓடியதும் என்னால்*

முடியவில்லை. ஒருவாறு இரண்டாம் சுற்றும் ஓடினேன். அதன்பின்பு நான் களைத்து நிற்க, இன்று சரி நாளை ஓடவேண்டும் என பயிற்றுனர் கூறினார். அவரது தமிழ் எனக்கு சரியாக விளங்கவில்லை.

நான் பயிற்சி இடைவேளையின் போது எனது நண்பனைக் கேட்டேன், "யார் இவர் எனக்கு இவரது கதை விளங்கவில்லையே" என்றேன். இவர் தமிழ் நாட்டுக்காரர். இந்திய இராணுவத்தில் முன்பு பணிபுரிந்தவர். இவரது புனை பெயர் லெனின் என்றான். இதனை அடுத்து நாம் பயிற்சியை ஆரம்பித்தோம். இவ்வாறு ஒருசில நாட்கள் கடந்தன. அப்போது ஒரு தோழர் மொட்டை அடிக்கப்பட்ட நிலை யில் முகாமைச் சுற்றி குத்துக்கரணம் அடித்தபடி இருந்தார். ஏனென்று எனக்கு தெரியவில்லை. உனக்குத் தெரியுமா என, ஒரு நண்பனை விசாரித்தேன். அவன் பயிற்சிக்கு வந்து முகாமை விட்டுத் தப்பிச் சென்றவன். அவனை எமது கழகத்தினர் பிடித்துவந்துள்ளனர். இப்படிப்பட்டவர்களுக்கு தண்டனை இது என்றும் கூறினான். இயக்கப் பயிற்சிக்கு என்று வந்து மனம் சலித்து, பல காரணங்களால் தப்பிச் சென்றாவர்களுக்கு இதுதான் தண்டனை. இதுவே பிற் காலத்தில் மரணதண்டனையாக மாற்றப்பட்டது. மொட்டையடிக்கப்பட்ட அந்தத் தோழர், அவரின் தண்டனை முடியமுன்னரேயே களைத்து விழுந்துவிட்டார். இவ்வாறான தண்டனையைத் தீர்மானிக்கும் பொறுப்பில் அன்று இயக்கத்தின் தண்டனை முகாமிற்கு பொறுப்பான மூர்த்தி அல்லது மொட்டை மூர்த்தி என்பவன் இருந்தான்.

அப்போது இயக்கத்திற்கு மூன்றே மூன்று முகாம்கள் மட்டுமே இருந்தது. அவையாவன தேனீகாம், புதுக்கோட்டைக் காம், பீ–காம். நான் இருந்தது பீ–காம்பில். இங்குதான் தண்டனைக் கைதிகளும் இருந்தனர். ஆனால் அது வேறு ஒரு பகுதியில் இருந்ததால், நீண்ட நாட்களின் பின்புதான் எனக்கு அது பற்றித் தெரியவந்தது. அப்போது பீ–காம்பில் பயிற்சி தருபவர்கள் மதன், பாண்டி என்ற ஊத்தைப்பாண்டி, சங்கர், சாணாக்கியன், மற்றுமொருவரின் பெயர் ஞாபகத்தில் இல்லை. இவர்களுடன் இந்திய இராணுவ அதிகாரியான லெனின். அத்துடன் தண்டனை முகாமிற்கு பொறுப்பாக இருந்தவர் மொட்டை மூர்த்தி. இந்த மொட்டை மூர்த்திக்கு

உதவியாளராக கண்ணாடிச் சீலன் இயங்கினார். இவர் பிற்காலத்தில் அமைப்பால் படுகொலை செய்யப்பட்டார். அத்துடன் சித்திரவதை செய்வதற்கு என்று இடியமீன், சவுதி, என்ற இருவருடன் வேறு சிலரும் அம்முகாமில் இருந்தனர் .

தண்டனை முகாமை எல்லோரும் நாலாம் மாடி என்பார்கள். இதைப்பற்றியும் சற்று கவனிக்க வேண்டும். காரணம் இங்குதான் பல கொலைகள் நடந்தேறின. இயக்கத்திற்கு பயிற்சிக்காக வரும் தோழர்கள் பலர் கொன்று குவிக்கப்பட்ட இடம் இதுதான். கழகத்தின் தலைமை உறுப்பினர்களில் சொந்த விருப்பு வெறுப்பிற்கு ஏற்றாற்போல கொலைகள் நடந்தேறின. இதை நடத்தியவர்களில் முன்னணி வகித்தவர் வாமதேவனே. இவரை பொறுத்தவரையில், ஒரு போராளி என்ற சொல்லுக்கே அருகதையற்றவர். ஏன் சாதாரண மனிதப்பண்புகளே இல்லாத ஒருவர். "நாலாம் மாடி" யில் தான் சித்திரவதைகள் நடத்தப்படும். சித்திரவதை என்றவுடன் பலரும் சிறிலங்கா இராணுவத்தின் சித்திரவதையை நினைப்பீர்கள். ஆனால் அதைவிட பலமடங்கு வக்கிரமானது.

அவற்றின் விபரம்:

1. தாம் களைக்கும்வரை ஒருவரை அடிப்பது. குறிப்பாக குதிக்கால் மற்றும் முதுகொலும்புப் பகுதியில்
2. கண்ணுக்குள் மிளகாய் தூள் போடுவது
3. ஒரு கோப்பை பச்சை முழகாயைச் சாப்பிடச் சொல்லது. இல்லையேன்றால் மயங்கும் வரை அடி, அதன் பின்னரும் சாப்பிடவே வேண்டும்.
4. நிர்வாணமாக்கி தலைகீழாக தொங்கவிட்டு தலையில் காலால் உதைவது
5. கைகள் கால்கள் பின்புறமாக கட்டப்பட்ட நிலையில் உளண்றியில் (கப்பியில்) தொங்கவிடுவது
6. விரல் நகங்களைப் பிடுங்குவது
7. கையிலோ தொடையிலோ பிளேட்டால் வெட்டி, அந்தக் காயத்தின் உள் மிளகாய் தூள் போடுவது.
8. அதே காயத்தில் பின்னர் வெடிமருந்து அடைந்து, அதைக் கொழுத்தி விடுவது
9. மலவாயிலினுள் போத்தல் அல்லது தடியை நுழைப்பது

*இவை எனது ஞாபகத்தில் உள்ளவை. இன்னும் பல. இவ்வாறான சித்திரவதைக்கு உள்ளாக்கப் படும்போதே பலர் இறந்து விடுவார்கள். தளத்தில் இருந்து எதையுமே சிந்திக்காது, பலிக்கடாக்களாக இளைஞர் களைச் சேர்த்து அனுப்பும் ஒருகூட்டம் இயங்கியது. இவர்களுக்கு தாம் யாரையாவது பிடித்து அனுப்பிவிட்டால் போதும் என்ற எண்ணத்தில் இயங்கினார்கள். ஆனால் அனுப்பப்பட்டவர்களின் கதி பயங்கரமானதாகவே இருந்தது. பல நூற்றுக்கணக்கானோரை அனுப்பினோம், எல்லோருக்குமா இப்படி நடந்தது என்று சிலர் கேட்கலாம். ஏறத்தாள அனேகமானோர் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்களே.*

5

# தேச விடுதலை என்றும், பாட்டாளி வர்க்க புரட்சி என்றும் பேசியபடி...

எமது பயிற்சியின் ஆரம்பத்ததில் இருந்து பல புதியவிடயங்களைக் கற்றோம். அதேவேளை எனது வீட்டார் தொடர்பான கவலையும் அதிகரித்தது. இப்படி கிட்டத்தட்ட ஒரு 15 நாள் போயிருக்கும், திடீரென ஒரு நாள் முகா மில் பரபரப்பு. பல முக்கிய உறுப்பினர்கள் வழமைக்கு மாறாகவே முகாமிற்கு வந்து போக ஆரம்பித்தனர். எம்மிற் பலருக்கு எம்மைச் சுற்றி என்ன நடக்குதென்று தெரியாததனால், அதை அறிந்து கொள்ள எல்லோருமே விரும்பினோம். அப்போது தான் உமாமகேஸ்வரனுடன் வெளிநாட்டுக்குச் சென்று பி.எல்.ஓ பயிற்சி பெற்ற பி.எல்.ஓ விச்சு என்பவர் கைது செய்யப்பட்டதாகவும், அவர் புளாட்டின் தண்டனை முகாமில் உள்ளார் என்றும் கூறினார்கள். அவரைப் பார்க்க பலரும் விரும்பினர். அதனால் தண்டனை முகாமிற்கு அருகாமையில் காவலுக்குப் போவதற்குப் பலர் விருப்பப்பட்டனர்.

நான் தண்டனை முகாமிற்கு அருகாமையில் காவல் புரியப் பணிக்கப்பட்டேன். அந்த முகாமிலிருந்து ஐயோ... அம்மா... என்ற அலறல்கள் கேட்கும். எனது தோழர்களிடம் என்ன இது, யாரென்று கேட்டேன். அது சிறீலங்கா அரசின் உளவாளி என்றும், அவர் பெயர் மாணிக்கம் என்றும் கூறினர். அவருக்கு இரவு வேளை

படிப்பகம்

களில் சித்திரவதைகள் நடப்பது வழக்கம் என்றனர். அந்தச் சித்திரவதை முகாமில் வேறு பலரும் இருந்திருக்கக் கூடும். ஆனால் எமக்குக் கூறப்பட்டது ஒருசிலரின் பெயர்களையே. சிறிலங்கா அரசின் உளவாளி என்று கூறப்பட்ட மாணிக்கம் அவர்களுக்கு நடந்த சித்திரவதைகள் பற்றி எனக்கு முற்று முழுதாகத் தெரியாவிட்டாலும், எனக்கு தெரிந்தவற்றை இங்கு பதிவு செய்யலாமென நினைக்கிறேன் .

அவரின் கையை பிளேட்டால் வெட்டி அவ்வெட்டுக் காயத்திற்குள் வெடிமருந்தை நிரப்பி அதைக் கொழுத்தி விட்டுருந்தனர். அவரின் சிறுநீரையே அவருக்குக் குடிக்கக் கொடுத்திருந்தனர். ஊஎன்றியில் தலைகீழாக தொங்க விட்டு (இது அதிகம் எல்லோருக்கும் நடக்கும்) அடிப்பார்கள். இதை விட பல வகை. தற்போது இதை நினைவுக்கு கொண்டு வரவே பயமாக இருக்கின்றது. சிறிலங்கா இராணுவத்தினர் எமது தோழர்களையும், தமிழ் மக்களையும் கைது செய்து சித்திரவதை செய்கின்றார்கள் என்று, நாட்டில் பக்கம் பக்கமாக எழுதியும், சுவரொட்டிகளில் ஒட்டியும் இருந்தவர்கள், இங்கு அதையே ஈவிரக்கமின்றி செய்தார்கள். மாணிக்கம் என்பவர் மட்டுமல்ல, அங்கு பலர் இருந்தனர். எனக்கு மற்றவர்களின் பெயர்கள் மறந்துவிட்டது. இதில் ஒரு சிலர் சித்திரவதையால் இறந்திருக்கக் கூடும்.

ஆனால் விச்சுவிற்கு சித்திரவதை நடந்ததாக நான் அறியவில்லை. அவரின் கூடாரத்திற்கு அருகில் காவல் காக்கச் செல்பவர்கள், விச்சுவுடன் கதைக்க கூடாது என்று அறிவுறுத்தப்பட்டனர் . கதைப்பவர்களுக்கு தண்டனை கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் அனேகமானோர் அவருடன் கதைப்பதில்லை. முகாம் பொறுப்பாளர்கள் மட்டுமே அவருடன் கதைத்தனர். அதிலும் குறிப்பாக மதன் என்பவரே அவருடன் கதைத்தார்.

திடீரென ஒருநாள் நள்ளிரவு முகாமின் பாதுகாவலர் களால், பாதுகாப்பு மணி ஒலிக்கப்பட்டது. எல்லோரும் எழுந்து முகாமின் பாதுகாப்பு வலையத்திற்குச் சென்று முகாமுக்கான பாதுகாப்பில் ஈடுபட்டோம். வழமையாக பாதுகாப்பு மணி ஒலிக்க வைக்கப்படுவது பயிற்சியாக நடத்தப்படுவது வழக்கம், அவ்வாறாயின் சற்று நேரத்தில்

எம்மை மைதானத்திற்கு அழைத்து பின்னர் முகாமிற்கு அனுப்புவார்கள். அன்று வழமைக்கு மாறாக, நீண்ட நேரமாகியும், எம்மை எழுந்து செல்ல அனுமதிக்கவில்லை. எல்லாத் தோழர் மத்தியிலும் கேள்வி எழ ஆரம்பித்தது. எல்லோருமே மெதுமெதுவாக கதைக்க ஆரம்பித்தனர். அவ்வேளை காவற் கடமையில் நின்ற தோழர்களை சிலர் அழைத்து காரணம் கேட்டனர். அதற்கு புலிகள் எங்கள் முகாமைத் தாக்க முற்பட்டனர் என்றும், அதனாலேயே இது நடக்கிறது என்றும் கூறப்பட்டது. ஆனால் இது கட்டுக்கதை என்பதை பின்னர் அறிந்து கொண்டோம்.

இவ்வாறு தான் மாற்று இயக்கங்கள் மீது, வெறுப்பையும் விரோதத்தையும் வளர்க்க ஆரம்பித்தனர். புலிகள் மட்டுமல்ல மற்றைய இயக்கங்களுடனும், இவர்கள் பகை உணர்வையே கொண்டிருந்தனர். இதையே பயிற்சி முகாமில் உள்ளவர்களுக்கும் சொல்லிக் கொடுத்தனர். இதனாற் பலர் மற்றைய இயக்கங்களை விரோதிகளாகவும் பார்க்கலானார்கள். இதன் விளைவு தான் பிற்காலத்தில் சங்கிலியுடன் இணைந்து செயற்பட்ட, இடியமீன் போன்றவர்களை உருவாக்கியது.

அதிகாலையாகி வெளிச்சம் வர ஆரம்பித்தது. எம்மை மைதானத்திற்கு அழைத்தனர். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, விரைவாக வருமாறு கட்டளை பிறப்பித்தனர். எல்லோரும் கலைந்து சென்றவாறே, மெதுவாகக் கதைக்க ஆரம்பித்தோம். காரணம் எம்மை கண்காணிப்பதற்கும், மாட்டிவிடுவதற்கும் எமக்குள்ளேயே ஒற்றர்கள் இருக்கின்றனர் என்ற சந்தேகமே ஆகும். சில விபரங்களை அறிந்தவர் என்ற வகையில் எமக்கு நம்பிக்கைக்குரிய ஒருவரிடம், என்ன நடந்தது எனக் கேட்டேன். பி. எல். ஒ விச்சுவை மதன் என்பவர் காப்பாற்றி, அவருடன் தப்பிச் சென்று விட்டாராம் என்று கூறினார். எனக்குப் பயம் தொட்டது. காரணம் முகாம் பொறுப்பாளரே இப்படி என்றால்.., என்ற பயம் தான் அது.

எத்தனை நாட்கள் கடந்து போயின என்பது எனக்குத் தெரியாது. முகாம்களின் அன்றைய பொறுப்பாளர் பரந்தன்

ராஜன் திடீரென ஒருநாள் முகாமின் ஆரம்ப தோழர்கள் ஒருசிலரையும், மொட்டை மூர்த்தியின் சகாக்கள் என பலரையும் அழைத்து, ஜீப் வண்டியில் ஏற்றிச் சென்றார். அவர்களை எதற்காக, எங்கே கொண்டு சென்றார்கள் என்ற விபரம் ஏதும் தெரியவில்லை. மறுநாள் காலை நாம் பயிற்சி முடிந்து மைதானத்தில் கூடி நிற்கும் போது, திடீரென மூர்த்தியுடன் வேறு சிலருமாக மதனின் கைகளைப் பிணைத்து விலங்கிட்டு கொட்டனால் அடித்தபடியே இழுத்து வந்தனர். இவன் ஒரு துரோகி, இவனுக்கு அடியுங்கள். எல்லோரையும் பார்த்துக் கைநீட்டிச் சொன்னார். அதை சிலர் ஏற்கவில்லை. வேறு சிலரோ, கைகள் விலங்கிடப்பட்ட மதனை பாய்ந்து பாய்ந்து அடித்தனர்.

ஐயோ அம்மா என்ற கதறலோடு, இரத்தம் உடலால் சீறிப்பாய்ந்தது. ஒரு மனிதனை ஈவிரக்கமின்றி, அடிமேல் அடித்த அந்தச் சம்பவம் என் மனதை பெரிதாகவே பாதித்துவிட்டது. அதனால் எனக்குள் ஒருவித பயமும் ஏற்பட ஆரம்பித்தது. இதில் முக்கியமான விடையம் ஒன்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

சித்திரவதை முகாமிலிருந்து தப்பித்த மதனும் விச்சுவும் பட்டுக்கோட்டையில் உள்ள ஒரு பண்ணையார் வீட்டில் மறைந்திருந்தனர். அவர்களைக் கைது செய்ய முற்பட்டபோது பண்ணையாரும், அவரின் ஆட்களும் தடுக்க முயன்றனர். அப்போது, பண்ணையாரை பரந்தன் ராஜன் சுட்டுக் கொன்றான். இக்கொலை பற்றிய தகவல்கள் அன்றைய தமிழ் நாட்டு வானொலிச் செய்தியிலும் ஒலிபரப்பப்பட்டது . நாம் பயிற்சி பெற்று வந்த அத் தளத்திலும், எமக்கு அடைக்கலம் தந்த மக்கள் மீதும், தமது அராஜகத்தையும் தமது பிற்போக்குத் தனத்தையும் பிரயோகித்தது பிளாட் தலைமை . தங்கள் கொலைகார வக்கிரத்தை காட்டும் முகமாகவே, துப்பாக்கி பிரயோகம் நடத்தினர். இவ்வாறான ஒரு இயக்கமா இது, என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்தது. தமக்கும் இதே நிலமை ஏற்படலாம் என்று பயத்தால், அங்கிருந்தவர்கள் மௌனமாக இருந்தார்கள். இக்காலத்தில் தான், பலர் பயிற்சி முகாமைவிட்டு தப்பிச்செல்ல முயற்சித்தனர். தமது தாயகத்தை மீட்க, தம்மால் அதிகூடிய கொடையாக தங்கள் உயிரையே கொடுக்க கூடிய தோழர்களின்

மனதில், வெறுப்பும் பயமுமே எஞ்சியிருந்தது. அந்த முகாமிற் தங்கிப் பயிற்சி எடுப்பதற்கு எனக்கு கொஞ்சங்கூட விருப்பம் இல்லாமல் போனது. ஒருவாறு நான் எனக்கு சுகயீனம் என்று கூறியதனால், என்னை வைத்தியத்திற்காக ஒரத்தநாட்டிற்கு (இலங்கையிலிருந்து இந்தியா வந்த அன்று நாம் முதற் தடவையாக பயிற்றி முகாமுக்கு வருமுன் சந்தித்த அலுவலகம்) அனுப்பிவைத்தனர். அங்கிருந்து மறுநாள் காலை தஞ்சாவூரில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கே என்னைப் பரிசோதித்த வைத்தியர், மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டும் எனக் கூறினார். அதனால் நான் அங்கிருக்கும் முகாமில் சில நாட்கள் தங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது நாம் உறங்குவது மொட்டைமாடியில் தான்.

அங்கு ஒருவர் மிகவும் நகைச்சுவையாக கதைத்தார் அவர் பெயர் நாகேஸ். யாழ்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் வட இந்தியாவில் இருந்து வந்திருந்தார். தான் அமைப்பின் வெளி உளவுப் பிரிவில் வேலை செய்வதாக முதலில் கூறினார். பின்னர் ஒரு இரவு படுக்கும் போது நகைச்சுவையாக, தனது மலவாயில் பெரியையாவிற்காக பெருத்துவிட்டது (எனது குண்டி ஓட்டை பெரிசாகிவிட்டது, பெரிசுக்காக) எனக் கூறினார். முதலில் எனக்கு இது விளங்கவில்லை. எனது அருகாமையில் இருந்த தோழரிடம் கேட்டேன் அவரும் தனக்கு புரிவில்லை என்றார். எனக்கோ இது என்ன என்ற அறிய ஆவலாக இருந்தது. அங்கு நீண்ட நாட்களாக வேலை செய்த எனது நண்பரிடம் கேட்டேன். அவர் ஒரு சில அமைப்பின் விடயங்களை அறிந்தவர் என்பதால், மிகவும் இரகசியமாக இவர் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர் என்று கூறினார். இதை மற்றவர்கள் அறிந்தால், உனக்கும் எனக்கும் மரணதண்டனை தான் என்றும் கூறினார். இதை கேட்டதும் எனக்கு பயம் பிடிக்க ஆரம்பித்தது.

தேச விடுதலை என்றும், மார்க்சியம் என்றும், பாட்டாளி வர்க்க புரட்சி என்றும், பேசிய இவர்களிடம் இருந்த நடைமுறை என்பது, ஒரு மாபியா இயக்க நடைமுறையே. தளத்திலோ தமது வயிற்றுப் பசிக்காக தம்மால் எதை செய்ய முடியுமோ அதைச் செய்ய புறப்பட்ட பாமர மக்களில் ஒரு சிலர் கள்ளச்சாரயம் (கசிப்பு) விற்றனர். அங்கு அவர்

களை தேடி திரிந்து முதலில் எச்சரித்த கழகத்தினர். அதன் பின்னரும் தமக்கு பிழைப்பில்லாததால், மீண்டும் கசிப்பு விற்கத் தொடங்கவே அவர்களுக்கு மரணதண்டனை வழங்கினர். ஆனால் இவர்களோ பெரியளவில், சர்வ தேச கிரிமினலாக மாறி போதைவஸ்து கடத்துகின்றார்கள். எந்தளவுக்கு இவர்களின் அரசியல் அன்று இருந்தது, என்பதை இது வெளிப்படுத்துகின்றது. ஊருக்கு உபதேசம், உனக்கும் எனக்கும் இல்லை என்பதைப் போலவே, இவர் களின் நடவடிக்கைகள் அமைந்தது.

நான் ஓரத்தநாட்டில் தங்கியிருக்கும் போது தான் தளத்தில் இருந்து மீரான் மாஸ்ரரும் அங்கு வந்திருந்தார். அவரிடம் தள விபரங்களை அறியக்கூடியதாக இருந்தது. அக்காலத்தில் தான் முதல் முறையாக தோழர் தங்கராசாவை சந்தித்தேன். அவர் அனைத்து முகாங்களுக்கும் சென்று தான் அரசியல் வகுப்பு எடுக்க விருப்பதாகக் கூறினார். அவருடன் ஏற்பட்ட உரையாடலே, எனக்கு அரசியல் மீது அதிக ஆர்வம் எற்படக் காரணமாகியது. மேலும் அவர் பல புத்தகங்களைச் சொல்லி அவற்றை முக்கியமாக வாசிக்கும்படி எமக்குக் கூறினார். ஒருசில நாட்கள் கழிய, நான் மீண்டும் பழைய முகாமிற்கு திரும்பினேன். அங்கு சென்றதும் மீண்டும் பயம், பதட்டமென ஏற்பட்ட போதும் ஒருவாறு பயிற்சியை தொடர்ந்தேன்.

ஒரு நாள் மதன் கொல்லப்பட்டார் என அறிந்ததோம். அவரைக் கொலை செய்வதற்கான உத்தரவை, அமைப்பின் மத்திய குழுவே வழங்கியதென, பின்நாளில் அதன் முக்கியஸ்த்தர்களில் ஒருவரான மீரான் மாஸ்டர் கூறினார். திடீரென என்ன செய்வது என்று தெரியாது திகைத்து நின்றேன். எனக்குத் தெரிந்தவரை இதுதான் முதல் உட்படுகொலை என நான் நினைக்கிறேன்.

# 6

## நான் தோழர் சந்ததியரைச் சந்தித்தேன்...

நான் அறிந்தவரை, புளாட் மதனின் படுகொலையுடன் தான் ஆரம்பமாகியது உட்படுகொலைகள். இது அவர்களுக்கு ஒரு புதிய உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுத்தது. இவ்வளவு காலமும் சமூகவிரோதிகள் என்ற பெயரில் படுகொலை செய்தவர்கள், இன்று ஒரே நோக்கத்துக்காக வந்தவர்களையும் கொன்று குவிக்க ஆரம்பித்தனர். இக்காலத்தில் இன்னுமொரு சம்பவமும் நடந்தது. மானிப்பாய் அல்லது அச்சுவேலியில் இருந்து பயிற்சிக்காக வந்தவர்கள் எனக்கு துல்லியமாக அவர்களின் சொந்த இடம் நினைவில் இல்லை ஆறு பேர் மாற்று இயக்கம் ஒன்றில் நாட்டில் இருக்கும் போது வேலை செய்தார்களோ அல்லது மற்றைய இயக்கத்தவர்களுடன் பின்னால் ஒரு அரசியலும் இல்லாமல் திரிந்தவர்களோ தெரியவில்லை.

அவர்கள் எமது முகாமில் வந்து இறங்கி ஒரு சில நாட்களிலேயே வதைமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இதற்கு காரணம் அவர்களுக்கு முதல், அதே ஊரிலிருந்து வந்த ஒரு தோழர் (அவரின் இயக்கப் பெயர் குறிப்பிட விரும்பவில்லை) அவருடன் ஒரு குடிசையில் தங்கியிருந்த சக தோழர் ஒருவருக்கு, டேய், இவங்கள் ஊரில புலிக்குப் பின்னால திரிஞ்சவங்களடா... என்று கூறியதாகும். இதை எவ்வாறோ முகாமினுள் இருந்த உளவாளிகள்

அறிய, அவர்களை விசாரணை என்று வதைமுகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். அப்படிச் சென்றவர்கள் திரும்பவில்லை. ஒரு சில நாட்களில் அவர்கள் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என அறிந்தோம்.

படுகொலைகள் பற்றி அறிய, பயம் அதிகமானது. என்னால் அங்கு பயிற்சி செய்யவோ அல்லது மற்றவர்களுடன் கதைக்கவோ முடியாமல் போனது. இருவர் தொடர்ந்து ஒரு இடத்தில் இருந்து கதைத்தால், உடனே என்ன கதைத்தோம் என விசாரிக்கவும் தொடங்கினார்கள். அதுவே மூவர் அல்லது அதற்கு மேல் என்றால் விசாரணை தான்! மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்றாற் போல, எவர் கூடிக் கதைத்தாலும் இவர்கள் ஏதோ சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்ற எண்ணமே அங்கு காணப்பட்டது. குறிப்பாக நான், அழகன், முரளி ஆகிய மூவரும், ஒரே ஊரில் இருந்து ஒரே நாளில் பின்தளம் வந்தவர்கள். ஆனால் நாம் மூவரும் தனிமையில் இருந்து கதைக்க முடியாது. எமக்கு ஏற்படும் மனச்சஞ்சலங்களைக் கூட பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில், நான் முகாமில் தொடர்ச்சியாக இருக்க முடியாது என எண்ணினேன். அக்காலத்தில் அதிக வெய்யில் ஒவ்வாமை ஏற்பட்டு எனது கண்கள் சிவந்து வீங்கின. அதைக் காரண மாக வைத்து, என்னால் தொடர்ந்து பயிற்சிக்கு வரமுடியா தென அடிக்கடி பயிற்சியில் பங்கு கொள்வதைத் தவிர்த்தேன். இதையடுத்து அப்போது பயிற்சி வழங்கியவர்களில் ஒருவரான சாணாக்கியன் என்பவர் என்னை மீண்டும் ஓரத்தநாட்டுக்கு அனுப்பினார். அவர்கள் என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே என்னைப் பார்வையிட்ட வைத்தியர், என்னை மீண்டும் ஒரு மாதத்தால் வரும்படி கூற, மீண்டும் என்னை பீ முகாமிற்கு திருப்பி அனுப்பினார்கள்.

நான் மறுபடியும் பீ முகாமிற்குச் சென்ற சிலநாட்களில் தோழர் சந்ததியார் அங்கு வந்திருந்தார். அவருடன் ஒவ்வொருவரும் தமது குறைகளை கூறினர். அவருடன் கதைப்பதற்கு எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்னை நாட்டுக்கு திருப்பி அனுப்புமாறு அவரை நான் கேட்டேன். அவரோ, "எனக்குந்தான் நாட்டிற்கு போகவேண்டும் என்று ஆசை. அதனால் தோழரே, நீர் தோழர் முகுந்தனிடம்

எனக்கும் சேர்த்து விண்ணப்பியுங்கள்" என்றார். இதை கேட்ட எனக்கோ என்ன செய்வதென்று புரியவில்லை. அவருடன் நாட்டுக்கு போவது பற்றி தொடர்ந்தும் கதைப்பது அனாவசியமானது என முடிவெடுத்தேன். இருந்தும் எனக்கு பயிற்சி பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளை ஒரு நோயாளியாக விளக்கினேன். அவர் அதை கவனமாகக் கேட்டார். "ஏன் நீர் பயிற்சி எடுக்க முடியாவிட்டால், அரசியல் வகுப்புகளில் பங்கு கொள்ளலாமே" என என்னிடம் கோட்டார். அதற்கு எந்த தயக்கமும் இன்றி சம்மதித்தேன். எனது நோக்கம் இந்த முகாமில் இருந்து வெளியேறுவது தான். அப்போது அவர் அமைப்பு அரசியல் பாசறைகள் நடாத்துவதற்குத் உதேசித்துள்ளது. அவ்வாறு அரசியல் பாசறை நடக்கும் பட்சத்தில், உங்களையும் அதற்கு பரிந்துரைக்கிறேன் என்றார். அத்துடன் எனது போராளிக்கான இலக்கத்தையும் பெயரையும் தனது பதிவேட்டில் குறித்துக்கொண்டார்.

ஒரு மாதத்தின் பின்னர் என்னை வைத்தியர் பார்வை யிட வேண்டும் என்று ஏற்கனவே குறிப்பிட்டதால், அதற்கான திகதி வர நான் மீண்டும் ஒரத்தநாட்டிற்கு சென்றேன். அங்கே பல தோழர்கள் உடல் நலக்குறைவுடன், புதிதாக வந்திருப்பதைக் கண்டேன். எனக்கு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் கண் வைத்தியப் பகுதியில் ஒரு சில பருசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறப்பட்டதன் விளைவாக நான் அங்கு ஒரு சில தினங்கள் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் தோழர் சந்ததியாரும் தோழர் தங்கராசாவும் அங்கே வந்தனர். அவர்கள் இருவரையும் இணைத்து ஒரே சந்தர்ப்பத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனால் அவர் களிடம் எனது உடல்நிலை தொடர்பான பிரச்சினைகளை மீண்டும் கூறினேன். அத்துடன் எனக்கு அரசியலில் உள்ள ஆர்வத்தையும் தோழர் சந்ததியாரிடம் கூறினேன். அதை அவர் ஏற்றுக்கொண்டு, புதிதாக ஆரம்பிக்க விருக்கும் அரசியல் பாசறைக்கு செல்வதற்கு, அப்போது அனைத்து முகாம் பொறுப்பாளராக இருந்த பம்மாத்து வாசுவிடம் அதற்கான அனுமதியைப் பெற்றார். அதன் பின்பு நான் பீ காம்புக்குச் செல்லவில்லை. ஒரத்தநாட்டு முகாமில் நடைபெற்ற அரசியல் வகுப்பில் பயிற்சிபெற ஆரம்பித்தேன்.

# 7

## சாதிக்கூடாகவே தீர்வை காணும் வழிமுறையை நாடிய தலைமை...

ஒரத்தநாடு காரியாலயத்தில் அரசியல் வகுப்பு ஆரம்பித்தது. அப்போது என்னுடன் பலர் இணைந்து கொண்டனர். நோயுற்றவர்களும், அங்கு தங்கியிருந்தவர்களும், அரசியல் வகுப்புகளில் கலந்து கொள்வார்கள். அவர்களில் பலர் அரசியல் வகுப்புகளில் அதிக நாட்டமும் காட்டினார்கள். அப்போ ஒரத்தநாட்டு காரியாலயத்தின் மலக்குழி நிரம்பி, அங்கு மலம் கழிக்க முடியாது போனது. அக்குழியை துப்பரவாக்க வேண்டிய கட்டாயத்தில், காரியாலயப் பொறுப்பாளர்கள் தள்ளப்பட்டனர். அக்குழியை துப்பரவு செய்ய அன்றைய அனைத்து முகாம் பொறுப்பாளரான பம்மாத்து வாசுவும், மற்றைய பலவிவகாரங்களை கவனித்து வந்த பெரிய மென்டிஸ்சு என்ற பாலமோட்டை சிவமும் வழிகாண வேண்டியிருந்தது. அவர்கள் தலித் ஒருவரை அழைத்து வந்தனர். அவர் அதைப் பார்த்த பின் அதற்கான கூலியை பேசிக் கொண்டிருந்தனர். அரசியல் வகுப்பு எடுத்து கொண்டிருந்த தோழர் தங்கராஜ எம்மிடம், ஏன் இதை நாமே செய்யக்கூடாது என்று கேட்டார். அவர்கள் செய்யும் வேலையை நாம் செய்தால் என்ன? இது போன்ற பல கேள்விகளை எம்மை நோக்கி எழுப்பினார். அப்போது எம்முடன் இருந்த ஆனந்தன் என்பவர், நாம் இதைச் செய்வோம் என்றார். இதுவும் ஒருவித பயிற்சி தான் என்றார். பின்னர் என்ன, நாம் எல்லோருமே அதை துப்பரவு செய்தோம். நான் இச்சம்பவத்தை இங்கு குறிப்பிடக்

படிப்பகம்

காரணம், சாதிகள் இல்லை அவற்றை ஒழிக்க நாம் பாடுபடவேண்டும் என்று கூறிய தலைமை உறுப்பினர்கள், என்ன செய்கின்றனர் என்பதை விளக்கத்தான். அவர்கள் தமக்கு இவ்வாறன பிரச்சனைகள் எழுந்தவுடன், அவர் களின் சிந்தனை எங்கு சென்றது. அது சாதிக்கூடாகவே தீர்வு காணும் வழிமுறையை நாடியது.

ஒருசில நாட்களில் காரியாலயத்தில் தங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களுக்கு அரசியல் வகுப்பு எடுப்பதற்கு என்று தனி ஒரு முகாம் அமைப்பது என்று எண்ணம் ஏற்கனவே இருந்ததால், தனி முகாம் அமைக்கப்பட்டது. அம்முகாமிற்கு ஏற்கனவே அரசியல் வகுப்புகளில் பங்கு கொண்ட என் போன்றவர்களே முதலில் அனுப்பப்பட்டனர். அம்முகாமை பலரும் தங்கக் கூடிய வகையில், பக்கத்துக் கிராம மக்களின் உதவியுடன் வடிவமைத்தோம். அந்த முகாமிற்கு அன்ரனி என்பவர், முகாம் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அம் முகாமிற்கு ஏச் முகாம் என பெயர் வைக்கப்பட்டது. பிற்காலத்தில் அதை சி காம் என்றும் அழைத்தார்கள். அங்கே நாம் அனைவருமாக, கிட்டத்தட்ட 70 தோழர்கள் வரை அப்போது இருந்தோம். அத்துடன் நீண்ட நாட்கள் சுகயீனப்பட்டோரையும், பொக்களிப்பான், சின்னமுத்து போன்ற தொற்று நோயுள்ளவர்களையும் எமது முகாமிற்கு மாற்றினார்கள். அவ்வாறு வருபவர் களில் பலர் திரும்பிச் செல்ல மறுத்தனர். அதனால் எமது முகாமின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. எனது நினைவுக்கு எட்டியவரை 112 பேர் வரையில் இறுதியாக ஏச் முகாமில் இருந்தோம்.

இந்திய இராணுவத்தின் உத்தரப் பிரதேச மாநிலத் தளங்களில் யுபியில் பயிற்சி பெற்ற உதயன், ஜிம்மி இருவருமே எமக்கான வெளி வேலைகளைச் செய்தனர். ஓரத்தநாட்டு முகாமுக்கு ஒவ்வொரு நாளும் சென்று வருவது அவர்களின் வழக்கம். இவர்களை எவரும் எதுவும் கேட்க முடியாது. காரணம் தாம் நேரடியாக அனைத்து முகாம் பொறுப்பாளரின் கட்டுப்பாட்டில் இயங்குவதாக கூறுவார்கள். எமது முகாம் பொறுப்பாளராக அன்ரனி இருந்த போதும், எமது முகாமை வழிநடத்துவது தோழர் தங்கராஜா அவர்களே . அவர் எமது முகாமை சுய கட்டுப்பாட்டு முகாமாக மாற்றினார்.

அதாவது சமைத்த சாப்பாட்டை மற்றவர் பரிமாறாது, ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான உணவை தாமே எடுத்து சாப்பிடுவது. இறுதியாக சாப்பிடாத தோழருக்கும் தேவையான உணவு இருக்க வேண்டும் என்றும், உணவு கள் தேவையற்ற முறையில் விரையம் செய்யாத வகையில் பக்குவப்படுத்தையும் ஏற்படுத்தினார். சிலர் தேவையற்று உணவை விரையம் செய்தால், அவர் தாமாகவே அதற்கான சுயவிமர்சனத்தை முன்வைத்து அதற்கான தண்டனையையும் இரவுநேர ஒன்றுகூடலில் செயற்படுத்துவார்கள். இவ்வாறு பல பிரச்சனைகளை விமர்சனம், சுயவிமர்சனம் என்ற வகையில் புதிய முரண்பாடுகள் எழாதவாறு தீர்த்து வைத்து, எங்களுக்கு அரசியல் போதிப்பதையும் அவர் தொடர்ந்தார்.

ஒருமுறை தோழர் சோசலிசம் சிறி, எமது முகாமிற்கு அருகாமையில் வசித்த இந்தியப் பெண்ணைக் காதலித்தார். இது முகாமில் உள்ளவர்களுக்கு தெரியவந்தது, அது தொடர்பான விமர்சனத்தை எமது தோழர்கள் அவரிடம் முன்வைத்ததுடன், அவரின் சுய விமர்சனத்தை கோரினர். அவரும் அதனை ஏற்றுக்கொண்டு சுயவிமர்சனம் செய்த வேளையில் விம்மிவிம்மி அழுதார். அவரின் சுயவிமர்சனத்தை ஏற்றுக்கொண்ட எம்மிடையே, இவ்விடையம் அனைத்து முகாம்களின் பொறுப்பாளருக்கோ அல்லது ஓரத்தநாட்டுக்கோ தெரிய வந்தால் சோசலிசம் சிறி வதைமுகாமிற்கு அனுப்பப்படலாம் என்ற ஐயம் ஏற்பட்டது.

மேலும், வேறு முகாம்களிலிருந்து எமது முகாமிற்கு வரும் தோழர்கள் முகாம்களில் நடக்கும் கொடுமை களைப் பற்றி கூறுவதுடன், தமது முகாம்களில் நடை பெறும் முகாம் பொறுப்பாளர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளையும், தோழர்கள் மீதான அவர்களின் வன்முறைகளையும் எம்மிடம் கூறினர். இது தொடர்பாக நாம் என்ன செய்வது என்ற கேள்வியை, இரவு நேர ஒன்று கூடலில் எழுப்பினர். இவ்வாறான விவாதங்களையும் சோசலிசம் சிறி போன்றவர்களின் விடயங்களையும் நாம் அனைத்து முகாம் பொறுப்பாளருக்கு உடனடியாகத் தெரிவிக்கக் கூடாதென முடிவெடுத்தோம். மாறாக எமது முகாமில் நடக்கின்ற அனைத்து விடயங்களும், நாளுக்கு நாள் ஓரத்தநாட்டு முகாமுக்கு தெரிந்த வண்ணமே இருந்தது.

இந்நிலையில் வல்வெட்டித்துறையில் இலங்கை விமானப் படையால் குண்டுகள் வீசப்பட்டு வருவதை செய்திகள் மூலம் அறிந்து கொண்ட நாம், அதற்கும் நாம் என்ன செய்வது என்ற விவாதத்தைத் தொடங்கினோம். ஏன் பயிற்சி முடிந்து லெபனானில் இருந்து திரும்பியவர்களும், யுபியில் இருந்து திரும்பியவர்கள் உட்படப் பலரும் இங்கு தரித்து நிற்பதை விடுத்து, தளத்தில் இறங்கி போராடினால் என்ன? என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டது. இதன் போது பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்தனர். அதன் முடிவாக நாம் இதனை எதிர்த்து போராட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நாம் அமைப்புள் நடக்கும் பிரச்சனைகள், அமைப்பின் போராட்டத் தளத்தில் இயங்காத தன்மை போன்ற விடையங்களை உள்ளடக்கி ஒரு உள்ளக விமர்சன மகஜர் அறிக்கை எழுதி அனுப்புவதென்று அவ் விவாதத்தின் நிறைவாக முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாறு நாம் விவாதங்களை நடத்தும் வேளை யில், எமது முகாமைத் தவிர்ந்த பல இடங்களில் "ஒரு விடுதலைப் போராட்டத்தில் அரசியலா இராணுவத்தை கட்டுப்படுத்துவது அல்லது இராணுவமா அரசியலைக் கட்டுப்படுத்துவது" என்ற பிரச்சனை எழுந்து நின்றது. இது தொடர்பாகவும் எமது முகாமில் ஒரு நீண்ட விவாதத்தை நடத்தினோம். இதில் என்ன வேடிக்கை என்றால், ஒரு சமூக விடுதலையை இடது சாரியக் கோட்பாட்டு ரீதியாக அங்கீகரித்த விடுதலை இயக்கத்தில், இவ்வாறான பிரச்சனை எழும்பியது என்பதே வெட்கத்துக்குரிய விடயம். ஆனால் பின்தளத்தில் இருந்த பல அரசியல் ஆசான்களும், தத்துவார்த்த விஞ்ஞானிகளும், இவைகளைப் பற்றி கவலைப்படவில்லை. மாறாக இது போன்ற விவாதங்களைத் தடுக்க, சுத்த இராணுவக் கண்ணோட்டத்தில் ஏச் முகாம் தவிர்ந்த மற்றைய முகாம்களில் இருந்த சிவப்புப் புத்தகங்களை அகற்றி, அரசியல் பேசுவதையே தடைசெய்தனர்.

# 8

## மகஜர் அனுப்பி தலைமையுடன் போராட்டம்...

அமைப்புக்குள்ளான பிரச்சனைகளை அறிக்கையாக அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அது எவ்வாறு தயாரிப்பது என்றும், அதை யார் யாருக்கெல்லாம் அனுப்புவது என்ற விவாதமும் ஆரம்பமானது. எனது நினைவுக்கு எட்டியவரை, ஒருநாளில் இவ்விவாதங்கள் முடியவில்லை. பல நாட்கள் விவாதங்கள் தொடர்ந்தன.

இறுதியில் முகாமில் நிரந்தரமாகத் தங்கியவர்கள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அக்குழுக்கள் தமக்குள் விவாதங்களை நடத்தி, தாம் முன்மொழியும் விடயங்களை அறிக்கையாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டது. குழுக்களால் எழுதப்படும் அவ்வறிக்கைகள் குறிப்பிட்ட தினங்களில் முகாமின் ஒன்றுகூடலின் போது வாசிக்கப்பட்டு, அவற்றைத் திருத்தி, அதில் எவை முக்கியமானவை என்று எல்லோராலும் முடிவெடுக்கப்படும் பட்சத்தில் அவற்றை அறிக்கையாக தயாரித்து அனுப்புவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த நாட்களில் ஏழு குழுக்களும் பல விவாதங்களை நடத்தின. இதில் நான் இருந்த குழுவில் என்னால் இரண்டுவிடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அவையாவன:

1. தேசம் இலங்கை இராணுவத்தால் எரிக்கப்படுகின்றது. இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? எற்கனவே பயிற்சி முடித்தவர்களை நாட்டுக்கு அனுப்பி, தமிழீழத்தை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு செய்யாமல் ரோம் நகரம் பற்றி எரியும் போது அந்த நாட்டு மன்னன் பிடில் வாசித்தது போல, தமிழீழம் பற்றி எரியும் போது உமாமகேஸ்வரன் என்ன செய்து கொண்டிருக்கிறார்" என்று அதில் கேட்டேன்.
2. அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் என்று, எமது சின்னத்தில் இருக்கின்றது. ஆனால் இங்கு நாம் அடக்கப்பட்டு ஒடுக்கப்படுகின்றோம். இது சரியான அரசியற் செயற்பாடா?

இதைக் கூற எமது குழுவில் இருந்த சண் என்பவர், அதை இன்னமும் விளக்கமாக அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் என்று கூறியபடி, இங்குவரும் தோழர்களை உடைத்து எறியும் வேலையை அமைப்புப் பொறுப்பாளர்கள் பார்க்கின்றார்கள், என்று கூறி எனது கருத்தை விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

இவ்வாறு ஒவ்வொரு குழுக்களும் தமது அபிப்பிராயங் களையும் ஆத்திரங்களையும் கொட்டித்தீர்த்தனர். மகஜர் தயாரிக்கப்பட்டது. மகஜர் தயாரிக்கப்படுவதை, ஒரு எதிர்ப்புரட்சி நடப்பதாகவும், நாம் இயக்கத்தை உடைக்கப் போவதாகவும், நாளுக்கு நாள் ஒரத்தநாட்டுக்குச் சென்று வந்த ஜிம்மியும் உதயனும் அங்கிருந்த பொறுப்பாளர்களுக்குத் தகவல் கூறினர். இதில் என்ன வேடிக்கை என்றால், இந்த அறிக்கை தயாரிப்பது பற்றிய விவாதங்களில் அவர்களும் எந்தவித எதிர்ப்பும் இன்றி கலந்து கொண்டனர். அவர்கள் எம்மை உளவு பார்க்கின்றனர் என்று எமக்கு தெரியவந்தாலும் கூட, அவர்களைப் பொருட்படுத்தாது நாம் செய்யவேண்டிய வேலைகளில் மும்மரமாக இறங்கினோம். இதனடிப்படையில் தயாரிக்கப்பட் அறிக்கையினை கீழே பார்க்கலாம்.

# மகஜர் அறிக்கை

*10.08.1984*
செயலதிபர் தோழர் முகந்தன் அவர்கட்கு,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் துறைச் செயலாளர்
தோழர் வசந்தன் அவர்கட்டு,

பிரதிகள்:–

தோழர் கண்ணன்
தோழர் ராஜன்
தோழர் வாசுதேவா
தோழர் தங்கராஜா
தோழர் அன்ரன் (ஏச் முகாம் பொறுப்பாளர்)

இயக்கத்தின் தோழர்களால் அனுப்பப்படும் இயக்க நடை முறை குறைபாட்டு புனரமைப்பு அறிக்கை.

இதனால் அறியத்தருவது,

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கீழ் விடுதலை வேண்டும் என்ற நோக்கத்தோடு போராட வந்திருக்கிறோம். கழகம் மக்கள் மத்தியில் வைத்த கொள்கைகளுக்கும், இங்கே நடைமுறையில் இருக்கின்ற கொள்கைகளுக்கும் செயல்பாட்டிற்கும் இடையில் பாரதுரமான முரன்பாடுகள் காணப்படுகின்றன. இது படிப்படியாக கூடிக்கொண்டே செல்கிறது. எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகளோடு இவற்றையும் ஒத்துநோக்கின் இயக்கத்தில் பிரச்சனைகளையும் நடைமுறை பிழைகளையும் சீர்திருத்த வேண்டிய இக் காலத்தின் கட்டாயமாகும்.

எனவே எமது கழகம் புனரமைக்கப்பட்டால் தான் நாங்கள் உண்மையான விடுதலையை அடைய முடியும் என்ற நோக்கில் கீழே சில புனரமைப்புச் செய்ய வேண்டிய பிரச்சனைகளை வரிசைப்படுத்துகின்றோம்.

1. எமது கட்சியின் சின்னத்தில் சகல அடக்கு முறை களையும் உடைத்தெறிவோம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால் கட்சியில் இருக்கும் சில தோழர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற போர்வையில் முதலாளித்துவ இராணுவத்தையும் விட மிக மோசமான முறையில் விசாரணையின்றி சில தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப தன்டனை வழங்குகின்றார்கள். இது சோசலிச கொள்கையை தன் உயிர் நாடியாக கொண்டு இயங்குகின்ற நமது கட்சிக்கு பலத்த சேதத்தை விளைவிக்காதா?
2. எமது கட்சியில் அரசியல் பற்றி பேசுபவர்களை சில தோழர்கள் உதாசீனப்படுத்துகிறார்கள். குறிப்பாக எமது கட்சியாலாரம்பிக்கப்பட்ட எச் முகாம் தோழர் கள் அரசியல் படிப்பதற்காகவும் நோயாளர் களின் நோயை தீர்ப்பதற்காகவும் தவறு விடுபவர் களை திருத்துவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கபட்ட. இதைக் கூட மூடப்போகின்ற அதிர்ச்சி தரும் தகவலை அறிந்தோம். அரசியல் எமது கட்சிக்கு என்ன விதிவிலக்கா? அல்லது விஷமா?
3. விடுதலைப் போராட்டத்திற்கு தங்களை அர்ப்பணித்து வந்திருக்கின்ற போராளிகள் நீண்டகாலமாக பின்தளத்தில் இருப்தாலும் எமது பின் தளம் அயல் நாட்டில் இருப்பதாலும் அப்போராளிகள் அவ்விடத்தின் சூழலுக்கும் சுவாத்தியத்திற்கும் ஏற்ப மாற்றமடைகின்றார்கள். அத்தோடு **PLOT** என்ற பெயர் சூட்டிக்கொண்டு மக்களை தோழர்களை நேசிப்பது குறைவாக இருக்கின்றது. இந்த நடவடிக்கையினுடாக நமது கட்சி மக்களிடமிருந்தும் தோழர்களிடமிருந்தும் அன்னியப்படுவதற்கு சாத்தியகூறுகள் இருக்கின்றதா? இல்லையா?
4. நமது தமிழீழத்திற்கு அரசியல் தீர்வுகாணப்பட்டு ஒரு சுமூகமான நிலை ஏற்பட்டால் நாம் சரணடைய வேண்டிய நிலையும், போராட்டம் மாறுபடவேண்டிய நிலையும் ஏற்படும் என்பது நமக்கு தெரிந்த விடய மாகும். இப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் நமது கட்சி முதலில் தமிழீழத்தில் எந்தவிதமான போராட்டம் நடத்தவேண்டும். சித்தந்த போராட்டமா? ஆயுதப் போராட்டமா? சித்தந்த போராட்டம் என்றால் சகல

தோழர்களுக்கும் அரசில் ஞானம் இருக்க வேண்டுமா? இருக்க வேண்டாமா?

5. தமிழீழ விடுதலைக்கும் எமது கட்சியின் வளர்ச்சிக்கும் போராட்டத்தை முன்னேடுக்க பயிற்சி முகாங்களுக்கு வருகின்ற தோழர்களுக்கு சுகையீனமும் உளவியல் ரீதியான அதிருப்தியும் உருவாகின்றது. இதை மாற்றுவதற்கு அதிகாரத்தை பயன்படுத்துவதா? அல்லது அவர்களை உணர்வு பூர்வமாக அணுகுவதா?
6. சோசலிச கொள்கை கொண்டு செயற்படும் கட்சிக்குள் ராணுவம் அரசியலுக்கு கட்டுப்பட்டதா? அல்லது அரசியல் இராணுவத்துக்கு கட்டுப்பட்டதா? எனும் ஓர் கோள்வி இன்று பூதாகரமாக உருவெடுத்துள்ளது. எமது இயக்கத்தில் (அரசியல் பிரிவு, இராணுவப்பிரிவு, செய்தித் தொடர்புப்பிரிவு) பல பிரிவுகள் செயற்படுவதால் ஓர் ஒற்றுமையின்மையை கொண்டுவருகின்றது. இக்கேள்விகளையும் அதனால் எழும் முரன்பாடுகளையும் யார் சீர்படுத்துவது? இவ் நிலை கட்சியை வளர்ச்சியடைய செய்யுமா? அல்லது வீழ்ச்சியடையச் செய்யுமா?
7. நமது கட்சி கொள்கைக்கு மாறாக செயல்பட்டால் அதைத்தட்டிக் கேட்கவும் சுட்டிக்காட்டவும் உரிமையுண்டெனவும் கட்சியின் கொள்கை தான் கூறுகின்றது. ஆனால் இங்கோ பேச்சுரிமைக்கு இடமளிப்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது இவற்றைப் பார்க்கும்போது இப்போக்கு ஒரு முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றது. எனவே நாம் இவற்றை எமது தூய்மையான கட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பது அத்தயாவசியமானதா? அல்லது அனாவசியமானதா?

மேற்படி இப்பிரச்சனைகள் இங்குள்ளன என்பது தோழர்களின் ஏகமனதான கருத்தாகும். இப்பிரச்சனைகள் கட்சிக்குள் பொதுவாக நிலவுகின்றது. எனவே இந்த அறிக்கை கிடைக்கப்பெற்று ஏழு தினங்களுக்குள் உடனடியாக ஒரு விசாரனைகுழு எங்களை வந்து பார்வையிட்டு பிரச்சனைகளை மிகவும் விரிவாக ஆராயவேண்டும். என்பதனை அனைத்து தோழர்களும் மிகவும் அதிகபட்சமான ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

இந்த அறிக்கைக்கு கிடைத்த பின்னால் கட்சி உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்பது எங்கள் கருத்தாக மனதில் கொள்ளப்பட்டு இந்த புனரமைப்பு அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கின்றோம்.
இந்த நடவடிக்கைகள் யாவும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வளர்ச்சிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மீண்டும் மீண்டும் அனைத்து தோழர்களுக்கும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வண்ணம்
உண்மையுள்ள கழகத் தோழர்கள்

இந்த அறிக்கையில் ஏச் முகாமில் இருந்த 88 பேர் கையொப்பம் இட்டிருந்தனர். இவ்வாறு நாம் ஏழுநாட்கள் காலக்கெடு கொடுத்து, இதை ஜிம்மி, உதயன் மூலம் அனுப்பிவைத்தோம். ஏழுநாட்களில் பதில் தராது விட்டால் என்ன செய்வது என்றும் எமது முகாமில் விவாதம் எழும்பியது. அப்போது சோசலிசம் சிறியால் இவர்கள் பதில் தராவிட்டால் நாம் மறுநாள் முகாமைவிட்டு வெளியேறி பாதயாத்திரையாக செல்வதுடன், அமைப்புக்குள் நடக்கும் சித்திரவதைகள், கொடுமைகள் தொடர்பாக தமிழக பொலிசிலும் முறையிடுவது என முடிவிற்கு வந்தோம்.

# 9

## புளாட் அமைப்பை விமர்சித்த எங்களை புலி என்றனர், துரோகி என்றனர்...

எத்தனையோ அராஜகங்கள் தவறுகள் புளாட் முகாம்களில் நடந்து கொண்டிருந்தது. நாம் அதை புளாட்டின் வளர்ச்சிக்காக, தவறுகளைக் களைவதற்காக கழக உயர்மட்டத்தினருக்கு எம் அறிக்கை மூலம் முன்வைத்தோம். அதனால் எமது உயிருக்கு ஆபத்து வரும் என்றும் உணர்ந்திருந்தோம். தீப்பொறியினரைப்போல தமது உயிர்களுக்கு பாதுகாப்புத்தேடி, கழகத்தில் இருந்து தப்பி ஓடியதைப் போன்று நாம் செய்யவில்லை. மாறாக எமது உயிர்களைப் பணயம் வைத்ததே அப்போராட்டத்தை முன்னெடுத்தோம். எமது அன்றைய அரசியல் வளர்ச்சியின் அடிப்படையில் எது எமக்குச் சரியாகப்பட்டதோ, அதைச் செய்தோம்.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடையம், "தீப்பொறியாக" கழகத்திலிருந்து பிரிந்து சென்றவர்கள், நாம் மகஜர் அனுப்பும் காலத்தில் அமைப்பில் உயர்ந்த

படிப்பகம்

பதவிகளில் இருந்தனர். அவர்கள் தமது விசுவாசத்தை, தலைமைக்கு காட்டிய வண்ணம் இருந்தனர். அத்துடன் அவர்கள் எம்முடன் சேர்ந்து போராடாது, எமது போராட்டத்தை ஒடுக்க முன்னெடுக்கப்பட்ட திட்டத்திற்கு துணைபோனர்கள். காரணம் எமக்கு அதரவு தந்தால், தாங்கள் இரகசியமாக வெளியேறத் தீட்டியிருந்த திட்டம் அம்பலப்பட்டுவிடுமே என்ற சுயநல சிந்தனையேயாகும்.

எமது மகஜரை எழுதுவதில் முன்னணியாக நின்ற தோழர்கள், ஒரே இடத்தில் படுப்பதில்லை. முன்பு எதிரிகளுக்காக முகாமைச்சுற்றி பாதுகாப்பது பணி செய்வது வழக்கம். ஆனால் இந்த போராட்டம் ஆரம்பமானவுடன், கழகத்தினரால் எமக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தினால் முகாமைச் சுற்றிப் பாதுகாப்பு போட்டோம். "பாதுகாப்பு" என்றவுடன் நாங்கள் ஆயுதங்கள் வைத்திருந்தோம் என நீங்கள் நினைக்கலாம். இல்லை, இல்லவேயில்லை. எம்மிடமிருந்தது, கொட்டான் தடிகள் மட்டுமே. எமது முகாமில் இன்னுமொரு கூடாரம் அமைப்பதற்காக, காடுகளுக்குச் சென்று மரங்கள் வெட்டி வைத்திருந்தோம். அந்த மரங்களைத் தான், நாம் கொட்டான்களாக வெட்டி வைத்திருந்தோம்.

எமது மகஜரை எடுத்துச் சென்ற ஜிம்மி, உதயன் இருவரும் அதைக் கொடுத்து விட்டு திரும்பி வந்தால், மீண்டும் ஓரத்துநாட்டுக்கு போக அவர்களை விடமாட்டோமென அவர்களிடம் கூறினோம். எமது முகாமில் ஒரு முக்கியமான நடைமுறை கையாளப்பட்டது. எந்த விடையமாக இருந்தாலும், அது பொதுச் சபையில் பகிரங்கமாகக் கூறப்பட்டு விவாதித்து முடிவெடுப்பது என்பதுதான் அந்த நடைமுறை . இதனடிப்படையிலேயே, பொதுச் சபையின் முடிவிற்கேற்ப அவர்களிடம் திரும்பிப் போக முடியாது என்ற விடயத்தை கூறியிருந்தோம்.

ஆனால் நடந்ததோ வேறு, மகஜரைக் கொண்டு போனவர்கள் வந்தால் தானே! இரவு வழமையாக திரும்பி வருபவர்கள், அன்று வரவில்லை. இதனால் எமக்குள் சந்தேகம் எழுந்தது. இரவு நேர ஒன்று கூடலில் இதைப்பற்றி விவாதித்தோம். மறுநாள் காலையில் கூட எந்த எதிர்ப்போ

அல்லது தகவலோ தலைமையிடமிருந்து வரவில்லை. இதனால் ஒரு சில தோழர்கள் நாம் கொடுத்த மகஜரை இவர்கள் ஏற்றுக்கொண்டு, விவாதித்து நல்ல பதிலை தரப்போகின்றார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தனர். இன்னும் சிலர் இல்லை, அவர்கள் எதுவும் தரமாட்டார்கள் என்றனர். அத்துடன் அவர்கள் எமது முகாமை மூடிவிடுவார்கள் என்றனர். இப்படி கூடலின்போது இதை விவாதித்ததுடன், முகாமை மூடினால் என்ன செய்வது என்ற கோள்வியையும் முன்வைத்தனர் சிலர். தலைமை சரியான பதில் தராத பட்சத்தில், நாம் முகாமைவிட்டு புறப்பட்டு ஊர்வலமாக ஓரத்த நாட்டுக்கு செல்வதென்றனர் ஒரு சிலர். மற்றவர்கள் நாம் தமிழ் நாடு காவல் துறையில் இது தொடர்பாக முறையிடுவது என்ற கருத்தை முன்வைத்தனர். இதில் நான் ஊர்வலமாகப் போவது தான் நல்லது என்று விவாதித்தேன். விவாதம் நீண்டதால் வழமைக்கு மாறாக நீண்டநேரம் எல்லோரும் விழித்திருந்தோம். தொடர்ச்சியாக நடந்த விவாதத்தில், தலைமையிடமிருந்து இருந்து ஒரு கிழமைக்குள் பதில் வராத பட்சத்தில் மட்டுமே ஊாவலம் போவது என்று முடிவிற்கு வந்தோம். நாம் வழமையான இடங்களில் படுப்பதை தவிர்த்ததால், நான் முகாமின் ஒரு மூலையில் சென்று உறங்கினேன்.

யாரோ ஒருவர் காலால் எனது காலை மிதித்து எழும்பு என்றார். நான் எழுந்ததும், நீதானே காந்தன் என்றார். நானும் ஆம் என்றேன். அவரின் கையில் ஏ.கே–47 துப்பாக்கி இருந்தது. சரி பெனியனைப் போட்டுக் கொண்டு வா என்று கூறினார். அவரின் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்ததும் எம்முகாமை தலைமையின் அடியாட்கள் கைப்பற்றிவிட்டார்கள் என உணர்ந்தேன். எனது பெனியனைக் தேடத் தொடங்க, மறுபடியும் அந்த நபர் கத்தினான். அருகில் இருந்த தோழர் டிஸ்கோவின் பெனியனை எடுத்து போட்டுக்கொண்டு அவருடன் பின் தொடர்ந்தேன். அந்த நபர் என்னை ஒரு வண்டி நிறுத்தியிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு சென்றபோது சில தோழர்கள் தரையில் குப்புறப்படுக்க வைக்கப்பட்டிருந்தனர். என்னையும் அவர்களுடன் அதில் போய்ப்படு என்றதுடன், ஒருவருடனும் கதைக்கப்படாது, எனவும் மிரட்டினான் கையில் ஏ.கே–47 துப்பாக்கி வைத்திருந்தவன்.

அப்போது யார் யாரெல்லாம் எனக்கு அருகில் வரிசையாகப் படுத்திருந்தனர் என மட்டுக்கட்ட முடியவில்லை. கொஞ்சம் தலை அசைத்தாலும், பெரிய சத்தத்துடன் தலையை அசைக்க வேண்டாம் என்றனர் அங்கு எம்மை துப்பாக்கி முனையில் குப்புறப்படுக்க கட்டளையிட்டோர் . இன்னும் ஒருசிலரையும் எமக்கு அருகில் குப்புறப்படுக்குமாறு கட்டளையிட்டார்கள். சில மணித்தியாலங்களின் பின்னர் எம்மை அங்கே நின்ற வண்டியில் ஒவ்வொருவராக ஏற்றினர். முதலில் குப்புறப்படு எனக் கூறியவர்கள், இப்போது வாகனத்தில் இடப்பற்றாக் குறையால் எழுந்து அமர்ந்திப்பதுடன் தலையைக் குனிந்தபடி இருக்க வேண்டும் என பணித்தார்கள். வண்டி புறப்படத் தொடங்கியது. எம்மைச் சுற்றி நால்வர் ஆயுதங்களுடன் காவலுக்கு நின்றனர். அவர்கள் அனை வரும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்றில் பயிற்சி முடித்துவிட்டு வந்திருந்தவர்கள். நான் ஒருவாறு என்னுடன் யார் யாரெல்லாம் கைது செய்யப்பட்டிருகிறார்கள் எனத் தெரிந்து கொள்ள முயன்றேன் .எனக்கு அருகாமையில் விஜி என்ற தோழர் இருந்தார். அவர் தேனி முகாமில் பயிற்சி எடுத்தவர். வண்டி குறிப்பிட்ட நேரம் ஓடியபின் ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டது. எங்களை ஒவ்வொருவராக ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றனர். அப்போதுதான் யார் யார் என்னுடன் வந்தார்களென முழுமையாக அறியமுடிந்தது. அதாவது மகஜர் எழுதுவதற்கு முன்னின்றவர்களும், அது பற்றிய விவாதத்தில் அதிகமாக கதைத்தவர்களும் தான் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எம்முடன் தோழர் தங்கராஜாவும் இணைக்கப்பட்டிருந்தார். அங்கே எம்மை மீரான்மாஸ்டர் விசாரித்தார். மீரான் மாஸ்டர் என்ற பிரபலமான கொம்மியுனிஸ்ட் தலை வரின் மகன் அன்றைய காலத்தில் புளொட்டின் வெளி உளவுப்படைக்கு பொறுப்பாக இருந்தார். என்னிடம் அவர் கேட்ட கேள்வி, உனக்கும் புலிக்கும் தொடர்பு இருக்கிறதா? நான் பயந்தவாறு இல்லை என்றேன். அப்படியானால் யாருடைய தூண்டுதலில் இதைச் செய்தாய் என்றார். இது வெளியார் ஒருவருடைய சதியும் அல்ல. இது எமது முகாமில் நாம் கூட்டாக எடுத்த முடிவு என்றேன். நீ எமது இயக்கத்தை ஒழிக்க வந்திருக்கின்றயா? இல்லை என்றேன். உனக்கும் சந்ததியாருக்கும் என்ன தொடர்பு? நான் ஒன்றும்

இல்லை என்றேன். என்னைப் பக்கத்துக்கு அறைக்குப் போகும்படி மீரான்மாஸ்டர் கட்டளையிட்டார். எமது முகாமில் கைது செய்யப்பட்டவர்களில் ஒன்பது பேர். நான், விஜி, அன்ரனி, கே.ஆர். விஜயன், சோசலிசம்சிறி, ஆனந்தன், சண், சலா, ஜெகன் ஆகியோர் ஓர் அறைக்குள் தள்ளப்பட்டோம். ஏனையோர் அந்த அறைக்குள் வரவில்லை. சிறிது நேரத்தில் எம்மை ஏற்றி வந்த வண்டி ஓட்டுனர், அந்த அறைக்குள் பொருட்கள் எடுப்பதற்காக வந்தார். அவரை வெள்ளை அண்ணை என்று அழைப்போம். அவரை எனக்கு நன்கு தெரியும். அவர் என்னைக் கண்டதும், ஒரு பரிதாபமாக என்னைப் பார்த்தார். "ஏன் உனக்கு உந்தத் தேவையில்லாத வேலை" எனக் கூறியபடி, தனக்கு தேவையான பொருட்களை எடுத்துச் சென்றார்.

# 10

## எம்மில் யாராவது உயிருடன் தப்பித்தால், எமக்கு நடந்ததை மற்றவர்களுக்கு கூறும்படியும்...

சுத்த இராணுவத்தனமாக முன் கூட்டியே தீர்மானித்த வன்மத்துடன் விசாரணை தொடங்கியது. மாற்று இயங்கங்களுடன் எமக்கு ஏதாவது தொடர்பு இருந்ததா என்ற கோணத்தில் விசாரணைகள் நடந்தது. இதில் பலராலும் நம்பமுடியாத ஒரு விடையம் கூட நடந்தது. வழைமையாக கைது செய்யப்படுவோரை சித்திரவதை செய்து விசாரணை நடத்துவதிற் பெயர்போன சங்கிலியோ, அல்லது மொட்டை மூர்த்தியோ எம்மை விசாரிக் வரவில்லை. இதற்கு என்ன காரணம் என்று, அன்று எமக்குப் புரியவில்லை.

பின்னாளில் எம்மை முதலில் விசாரித்த மீரான் மாஸ்டரை சந்தித்த போது, இது தொடர்பாக அவரிடம் விசாரித்தேன். அவர் அதற்கு, எமது மகஜர் தொடர்பாக இரண்டுபட்ட கருத்துக்கள் தலைமைக்குள் இருந்ததாகவும். அதில் எந்தக் கருத்தும் நாம் மகஜர் அனுப்பிதை ஆதரிக்கவில்லை என்றும், எவ்வாறு எங்களைத் தண்டிப்பது என்பதில் மட்டுமே இரண்டுவகைக் கருத்துக்கள் நிலவியதாகவும் மீரான் மாஸ்டர் கூறினார். அத்துடன், முதலில் இலகுவான முறையில் விசாரணை நடத்த தலைமை விரும்பியதனால்

படிப்பகம்

தன்னை விசாரணைக்கு அனுப்பியதாகவும். இதன் அடிப்படையிலேயே சங்கிலியை உடனடியாக விசாரணையில் ஈடுபடுத்தவில்லை எனவும் கூறினார். இதன் பின் எம்மை மீண்டும் வண்டியில் ஏற்றினார்கள். அவ்வண்டியின் பின்புறத்தின் நான்கு மூலையிலும், நான்கு பேர் ஏ.கே 47 துப்பாகியுடன், நாம் தப்பிச் செல்லாது பாதுகாப்பிற்காக நின்றார்கள். வண்டியின் முற்பகுதியில் இருவர் இருந்தனர். அதில் ஒருவர் மாணிக்கதாசன். அவரும், எம்மை ஏ.கே 47 துப்பாகியுடன் காவல் புரிந்த நால்வர் போல பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்றில் பயிற்சி பெற்றவர்தான்.

வாகனத்தில் ஏற்றப்பட்ட எம்மை, நீண்ட நேர ஒட்டத்தின் பின்பு ஒரு முகாமுக்கு கொண்டு சென்றனர். அங்கே எமக்காக அமைக்கப்பட்டிருந்த ஒரு கூடாரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டோம். அக் கூடாரம் அந்த முகாமில் இருந்து சற்று ஒதுக்குப்புறமாக, அந்த முகாமின் கிணற்றுக்கு அருகில் இருந்தது. இரவுநேரம் என்பதால் முகாம் அமைதியாகவே இருந்தது. அங்கே தான் தோழர் தங்கராஜாவும், கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்தோம். தோழர் தங்கராஜாவையும் சேர்த்தால் தற்போது நாம் பத்துப்பேர். எல்லோரும் அந்த கொட்டிலுக்குள் சென்றதும், ஒருவரோடு ஒருவர் கதைக்ககூடாது என்றனர். அப்படி கதைத்தால் கடும் தண்டனை கிடைக்கும் என மாணிக்கதாசன் மிரட்டினான். வெளியே கொட்டிலைச் சுற்றி பாதுகாப்புக் கடமையில் நின்றவர்களிடம், இவங்கள் ஏதாவது தங்களுக்குள் கதைத்தால் எனக்கோ அல்லது முகாம் பொறுப்பாளருக்கோ உடனே கூறும்படியும் கட்டளையிட்டான். அத்துடன் காவலுக்கு நின்றவர்களையும் எம்முடன் கதைக்கக்கூடாதென்று அறிவுறுத்தினான். மீறினால், கடும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவீர்கள் என்றும் அவர்களிடம் கூறிவிட்டு, வண்டியில் ஏறிச் சென்றான். நாம் அந்த கூடாரத்துக்குள், அதன் மண்தரையில் உறங்க முற்பட்டோம். ஆனால் முடியவில்லை. காரணம் பயம் எங்கள் அனைவரையும் ஆட்கொண்டிருந்தது.

மறுநாள் காலை முகம் கழுவுவதற்காக கிணற்றுக்கு வந்தவர்கள், எங்களை விசித்திரமாக பார்த்தார்கள்.

அவர்களின் பார்வையில் எம்மீது ஒரு கோபம், ஏளனம் தெரிந்தது. ஆரம்பத்தில் அவர்களின் அந்தப் பார்வை ஏனென்று எமக்குப் புரியவில்லை. ஒருசில கிழமை களில் நாம் அதைப் புரிந்துகொண்டோம். எம்முடன் கதைக்க முயன்ற சிலர் எம்மைப் பார்த்து கேட்டனர், "நீங்கள் எமது இயக்கத்தை அழிக்க முயற்சித்தவர்கள் தானே...? இயக்கத்தை பிளவுபடுத்த வந்தவர்களா நீங்கள்...?" என கேட்டு, அவ்வாறு தான் அந்த முகாமில் எம்மை பற்றி பிரச்சாரம் செய்திருந்தனர். அமைப்பின் தவறைச் சுட்டிக் காட்டியவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயர், அமைப்பை உடைக்கவும் அழிக்கவும் வந்தவர்கள் என்பதுதான்.

நாம் மலம் கழிக்கவோ அல்லது சிறுநீர் கழிக்கப் போனாலும், எம்முடன் நால்வர் பாதுகாப்பிற்கு வரு வார்கள். அதுவும் ஒருவர் மட்டும் தான் போகவேண்டும். போகும்போது முன்னால் இருவர், பின்னால் இருவர் வருவார்கள். எமக்கு பாதுகாவலர்களாக வருபவர்களுக்கு கட்டளை, நாம் மலம் கழிப்பதற்கு சென்றால், நாம் மலம் கழிக்கும் போது எமக்கு மிக அருகாமையில் காவல் புரியும்படி. ஆதலால் அவர்கள் எமக்கு அருகாமையி லேயே எப்போதும் நிற்பார்கள். அப்போது அத்தோழர்களை பார்க்கும் போது எனக்கு மிகவும் சங்கடமாகவிருக்கும். எமக்கான உணவைத் தரும்போது கூட அவர்கள் ஒரு வெறுப்புடனேயே தந்தார்கள். அன்று பகல் முழுவதும் எம்மை எவரும் சந்திக்க வரவில்லை.

இந்த இடைவெளியில் எமக்கிடையே அமைதியான சம்பாசனைகள் நடந்தன. தோழர் தங்கராஜா தனது உயிருக்கும், எமது உயிருக்கும் ஏதாவது ஆபத்து நடக்கலாம் என்ற ஐயத்தினை வெளிப்படுத்தினார். எம்மில் யாராவது உயிருடன் தப்பித்தால், எமக்கு நடந்ததை மற்றவர்களுக்கு கூறும்படியும், உறவினர்களுக்கு அறியப்படுத்தும் படியும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் எம்முடைய முழு விபரங்களையும் (உண்மையான பெயர், ஊர்) என்பவற்றை எல்லாம் எமக்குள்ளேயே பரிமாறிக் கொண்டோம். அப்போது அந்த முகாமின் பொறுப்பாளராக இருந்தவர் வளவன். அவன் தேனீ முகாமில் பயிற்சி பெற்றவர். இந்த வளவன் சில வருடங்களின் பின், இந்தியன் ஆமி இலங்கையில்

புலிகளுடன் யுத்தம் செய்த போது, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தபடி இந்தியன் ஆமிக்கு எதிராக போரிட்டவர்.

பின்னாளில் வளவனைப் பற்றி நான் விசாரித்ததில், அவர் புலியின் உளவாளி என்றும், அக்கடமையை செய்வதற்காகவே கழகத்தில் இணைந்தார் என்றும் கூறப்பட்டது. அத்துடன் நான் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பில் இலங்கையில் வேலை செய்ததை நான் நேராகக் கண்டேன். ஏற்கனவே ஒரு இயக்கத்தில் இருந்தவர்களை, புலி உடனடியாக முக்கிய பொறுப்பில் அமர்த்தாது என்பதை வைத்து பார்க்கும்போது, வளவன் ஒரு புலி உளவாளி என நானும் நம்புகின்றேன். ஒரு அமைப்பின் தவறை, அதன் கட்டமைப்பிற்குள்ளேயே நேர்மையான வழியில் சுட்டிக் காட்டப் புறப்பட்ட நாம் துரோகிகள் ஆக்கப்பட்டோம். ஆனால் உளவு பார்க்க புலிகளால் அனுப்பப்பட்டவன், எல்லோரையும் காக்கா பிடித்து, எல்லோருக்கும் நல்லவனாக நடித்த உண்மையான துரோகி, நல்லவனாகவும் அமைப்பிற்கு விசுவாசியாகவும் அமைப்பின் தலைமையால் கருதப்பட்டான்.

அன்று இரவும் எவரும் எம்மை சந்திக்க வரவில்லை. மறுநாள் பகல் முழுவதும் எவரும் சந்திக்க வரவில்லை.

# 11

**சித்திரவதையால் மயங்கினேன்.**

**சிறுநீரோ இரத்தமாகவே சென்றது.**

இரண்டாம் நாள் பகல் முழுவதும் எம்மை எவரும் சந்திக்க வரவில்லை. இதையிட்டு எம்முள் பல கேள்விகள் எழுந்தன? ஏன் இவங்கள் இன்னும் வரவில்லை? எங்களை புதைக்கப்போறாங்களா? சந்ததியார் எங்களுக்காக ஏதாவது செய்கின்றரா? இது போன்ற கேள்விகளுடன், எமது உயிருக்கு என்ன ஆகுமோ என்ற பயத்துடனும் பகல் கழிந்தது. சில காலங்களின் பின்னர்தான் எமக்குத் இதுபற்றித் தெரிய வந்தது.

எம்முகாமை முற்றுகையிட்டு எம்மைக் கடத்தி வந்த மறுநாள் காலை, அன்றைய அனைத்து முகாம் பொறுப்பாளர் வாசுதேவாவும் வாமதேவனும் வழமை போல எமது முகாமிற்குசென்றிருக்கின்றனர். அங்கிருந்தவர்கள் நாம் எங்கே என்று அவர்களிடம் விசாரித்தவர்கள். அவர் களைக் கொட்டான்களால் ஓட ஓட தாக்கியிருக்கின்றனர். இதனால் அந்த முகாமை மீண்டும் முற்றுகையிட்டனர்.

படிப்பகம்

தாக்குதலுக்கு முன்னணி வகித்தவர்களைக் கடத்தியும், மற்றவர்களை பணிஸ்மன்ற் என்ற பெயரில் "பீ" முகாமிற்கும் அனுப்பியிருக்கின்றனர். இவர்களை தாக்குவதற்குமுன்னின்ற தோழர்கள் சுமார் 25 பேருக்கு அதிகமானவர்களை ஓரத்தநாடு களஞ்சிய அறையில் அடைத்து கடுமையாகத் தாக்கினர். அதிலும் ஒருசிலரை தெரிந்தெடுத்து நாலாம் மாடிக்கும்அனுப்பியிருக்கின்றனர். அவர்களின் விபரங்கள் எனக்கு தெரியவில்லை.

அவ்வாறு நாலாம் மாடிக்கு அனுப்பப்பட்டவர்களை விட மிகுதியானவர்களில் செங்கோடன், முருகன், செல்வன் போன்றோர் வேறு ஒரு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு தாக்குவதால் தமது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்திருந்த போதும் தமது உயிரைப் பணயம் வைத்து எமக்காக அந்த தோழர்கள் போராடினார்கள். ஆனால் அன்று தலைமை யில் இருந்தவர்கள் பல அடாவடித்தனங்களுக்கு துணை போனவர்களாக இருந்தனர். இவர்கள் தமது உயிரைப் பாதுகாக்கும் வகையில் நான் தப்பினால் சரி, நீ தப்பினால் சரி என்றாற் போல் தப்பிஓடினர். அதன் பின் தாம் புளட்டின் அராஜகத்திற்கு எதிராக போராடியவர்கள் என்ற போர்வையை தம்மீது போர்த்திக்கொண்டு, தீப்பொறியாக அடையாளம் காட்டினார்கள்.

இவ்வாறு எமக்காக போராடிய தோழர்களில் ஒரு சிலர் உட்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டதாக பிற்காலத்தில் அறிந்தேன். அவர்களின் பெயர் விபரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் செல்வன் என்ற தோழர் எனக்கு நீண்ட காலமாக அறியப்பட்டவர். நானும் செல்வனும் ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் கல்வி கற்றோம். எமது வகுப்பை சேர்ந்த மூவரைத் தவிர, மற்றவர்கள எல்லோரும் புளட்டுக்கு மீரான் மாஸ்ரரால் பயிற்சிக்காக பின் தளத்திற்கு அனுப்பப்பட்டவர்கள். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் செல்வனும் ஒருவர். ஆம், இந்தத் தோழர்கள் தோழமைக்கு வரைவிலக்கணம் வகுத்ததால், உயிர்வாழ உரிமை மறுக்கப்பட்டவர்கள்..! இவர்கள் கடலில் கடலுடன் கடத்தப்பட்டார்கள். உண்மையான விடுதலையும், உண்மையான தோழமை

மனப்பாங்கும் உடைய பல தோழர்களை இந்த விடுதலைப் போராட்டத்தின் பெயரில் எதிர்ப்புரட்சி சக்திகளின் கோரக்கரங்கள் பலிஎடுத்துள்ளன. அப்போது இவற்றைப் பற்றி எதுவும் கதைக்காது சந்தர்ப்பவாதிகளாக இருந்த பலர் இன்று போராட்டம் பற்றி பேசிய வண்ணம் உள்ளனர்.

இரண்டாம் நாள் இரவு, நாம் இருந்த கூடாரத்தை நோக்கி மோட்டார் சைக்கிள்கள் வந்தன. அதில் மாணிக்கதாசன், செந்தில், பாபுஜி, அமுதன், வாமதேவனும் மற்றும் இன்னும் ஒருவரும் (அவர்பெயர் தெரியவில்லை) வந்தனர். இதில் ஒவ்வொரு தனிநபர் பற்றிய ஆய்வு அவசியமாக இருந்த போதும், மேலுள்ளவர்கள் எவரும் அரசியல் பற்றிய சிந்தனை அற்றவர்கள். முற்று முழுதானஇராணுவக்கண்ணோட்டம் கொண்ட இவர்களில் ஒரு சிலர், மட்டக்களப்பு சிறைச்சாலை உடைப்புடன் இயக்கத்தில் இணைந்தவர்கள். இவர்களிடம் இருந்த மக்கள் நலன் பற்றிய கருசனை அற்ற, தன் நலன் கொண்ட கருத்தே தமிழ் மக்களின் மீதான இன அழிப்பிற்கு வித்திட்டது. இவர்கள் கையில் விடுதலைப் போராட்டம் சிக்கியதால் தான், இன்று தமிழ் மக்களின் நிலை இன்று பாரிய துயர் கொண்டதாகவிருக்கிறது .

அவர்கள் அறுவரும் வந்து இறங்கியதும், மிகுந்த சத்தத்துடன் "வாங்கடா வெளியாலை" என்று கத்தினர். உள்ளுக்குள் இருந்த நாம் யார் முன் போவது என்ற பதட்டத்தில், ஆளையாள் பார்த்தவண்ணம் இருந்தோம். மீண்டும் வாமதேவன் "வாங்கோடா வெளியாலை" என்று கத்த, தோழர் தங்கராஜா முதல் வெளியில் சென்றார். சென்றவர் ஐயோ என்று சத்தம் போட்டதும், உடனேமாணிக்கதாசன் அவரை அழைத்து சென்றான். நாம் ஒருவர் ஒருவராக வெளியில் வர வாசலில் இருந்து வருபவர்களுக்கு கொட்டானால் அடித்தனர். ஒவ்வொருவரும் ஐயோ அம்மா என்றுஅலறும் அதேவேளை, அடித்தவர்களில் ஒருவன் "கீழே படுங்கடா.." "கிறவ்லிங் செய்யடா.." என்று சத்தம் போட்டபடி இருந்தான். அங்கிருந்தவர்களில் வயது குறைந்தவன் நான் என்பதால், பதுங்கிபதுங்கி மெல்ல வெளியில் வந்தேன். அப்போது எனது முதுகில் ஓங்கி ஒரு அடி வீழ்ந்தது. "ஐயோ அம்மா" என்ற அலறலுடன் நிலத்தில்

வீழ்ந்தேன். வீழ்ந்த என்னை ஒருவன் காலால் உதைந்தான். நாங்கள் எல்லோரும் அலறியபடி இருக்கையில், எம்மைச் சுற்றி முகாமில் இருந்த பல தோழர்களை காவலுக்கு போட்டிருந்தனர்.

அவர்களும் சுற்றி இருக்க எமக்கு "பூஜை" ஆரம்பமாகியது. ஒவ்வொருவரையும் எவ்வளவு முறை தங்களால் அடிக்க முடியுமோ, அவ்வளவு அடித்தார்கள். அவர்கள் களைத்ததும் தண்ணீர் குடித்துக் களைப்பாறிய பின் வந்து அடித்தனர். என்னை ஒரு தடவை, இருவர் சேர்ந்து தாக்கினார்கள் ஒன்று பாபுஜி அடுத்தது வாமதேவன். இவர்கள் இருவரும் "என்னடா, நீ பெரியய்யாவைப் பார்த்து என்ன கேள்வி கேட்டனி" என்று சொல்லி ஒருவர் முதுகின் மேலும் மற்றவர் காலிலும் தம்மால் இயன்றவரை அடித்தார்கள். நானுமே அலறியபடியே இருந்தேன். மறுபுறத்தில் அன்ரனி, சலா, விஜி, சண், ஜெகன், ஆனந்தன் போன்றோருக்கு மற்றவர்கள் அடித்தனர். கே.ஆர்.விஜயன் ஒருவாறு அடிகளுக்குத் தப்பித்து ஒதுக்கமாக போய்ப் படுத்திருந்தான். அதற்குகாரணம், செந்திலின் ஒன்றுவிட்ட தம்பி தான் கே.ஆர்.விஜயன். அவருக்கும் அடி விழுந்தது தான். ஆனால் எம்மளவுக்கு இல்லை.

அடுத்து சோசலிசம் சிறி. அவர் மீது இரண்டு குற்றச்சாட்டுகள். ஒன்று மகஜர் கொடுத்தது, அடுத்தது காதலித்தது தொடர்பானது. அதற்காக நையப் புடைக்கப்பட்டார். எனக்கோ, ஒரு சில மணிநேரத்தின் பின் என்ன நடந்தது என்று தெரியாது. நான் மயங்கிவிட்டேன். மறுநாள் காலை எழுந்த போது, என்னால் நகரவே முடியவில்லை. மற்றவர்களை பார்த்தபோது, அன்ரனியின்தலையில் காயம், ஆனந்தன் மல்லாக்க அரை மயக்கத்தில் கிடந்தார். விஜி தைரியசாலி என்பதால் அடியைத்தாங்கிக் கொண்டு எமக்கு உதவியபடி இருந்தார். என்னாலே நடக்கவோ, எழுந்து நிற்கவோ முடியாத அளவிற்கு தாக்கப்பட்டிருந்தேன். அன்று சிறுநீர் கழிக்கக் கூட என்னால் செல்ல முடியவில்லை. காவலில் நின்றவர்கள் இருவர் என்னை தாங்கியபடி அழைத்துச் சென்றனர். எனது சிறுநீரோ இரத்தமாகவே சென்றது. இவ்வாறு ஒவ்வொரு தோழருக்கும் இருந்தது. இரவு அடிக்கும் போது காவல்

கடமையில் பலர் எம்மைச்சுற்றி நின்றார்கள் என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அதில் ஒரு தோழருக்கு அன்றிரவே மனநிலை பாதிக்கப்பட்டது. அத்தோழர்நான் அறிந்தவரை மனநிலை பாதிக்கப்பட்டவராகவே பிற்காலத்திலும் வாழ்ந்தார். அவர் எவருடனும் கதைக்க மாட்டார். எதற்கும் பயப்படுவார். இரவில் உறங்க மாட்டார். இது போன்று பலர்பாதிப்பிற்குள்ளாகினர். எமக்கு அடிவிழுந்த போதே ஒரு தோழர் மனநிலை பாதிக்கப்பட்டார் என்றால், எமக்கு எவ்வளவு, எந்த வகையில், அன்றிரவு அடி விழுந்திருக்கும் என்று நினைத்துப்பாருங்கள். அன்றைய பகல் முழுவதும் உடல் உபாதையால் அரைமயக்க நிலையிலுமே கழிந்தது.

எமது மக்களின் விடிவிற்கு போராடுவதற்காக எமது கல்வி, குடும்பம், உறவுகள் என எல்லாவற்றினையும் துறந்து புளட்டிற்கு போனோம். ஆனால் புளட் இயக்கம் சமூக விரோதிகளினதுகூடாரமாகியதுடன், இந்திய அரச எடுபிடிகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும் இருந்தது. இவற்றிற்கு எதிராக குரல் எழுப்பி, அதைச் சரியான பாதைக்கு கொண்டு வர போராட முனைந்தோம். அதைக்கோரி வெளியிட்ட அறிக்கையை இங்கு பார்க்கவும். ஆனால் நாம் எமது உயிரினைக் காக்க போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தோம். எம்மை கொலை செய்யமுனையும்இவர்கள், இனவெறி சிங்கள அரசின் கொலைவெறி இராணுவமா? இல்லை! இயக்கங்களினால் உள்வாங்கப்பட்ட இவர்கள் எமது சமூகத்திலிருந்த சமூக விரோதிகள்!

# 12

## மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டால் என்னை அறியாது மலசலம் வரும்...

தோழர் தங்கராஜாவை எம்மிடமிருந்து பிரித்தனர். அவரை முகாம் பொறுப்பாளர்கள் தங்கும் களஞ்சியசாலைக்கு அருகில் அடைத்து வைத்தனர். அன்று பகல் அரை மயக்கத்துடனும் உடல்உபாதைகளுடனும் நாம் எல்லோரும் அவதிப்பட்டோம். இரவானதும் மீண்டும் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. அன்றிரவு வாமதேவன், செந்தில், பாபுஜி, மாணிக்கதாசன் மற்றும் இன்னும்இருவர் வந்தனர். வந்தவர்கள் எம்மை வெளியே வரும்படி கத்தினர். நாங்களோ நடக்க முடியாமல் இருந்ததால், அரக்கி அரக்கி வெளியே வந்தோம். மீண்டும் அடிக்க ஆரம்பித்தனர்.வந்தவர்கள் எம்மை மனிதர்களாகவே நினைக்கவில்லை. ஏன் மிருகங்களுக்குக் கூட அன்பு காட்டியிருப்பார்கள், ஆனால் அவர்கள் எம்மை வெறுக்கத்தக்க துரோகக் கும்பலாகவேகணித்தார்கள். அதற்கேற்றாற் போல் ஈவு இரக்கமின்றி எம்மை நடத்தினர். மக்கள் அமைப்பு என்றார்கள், மக்களுக்கான விடுதலை என்றார்கள், மாணவர்களை அணிதிரட்டினார்கள். ஆனால்அதற்காக புறப்பட்டவர்களை சித்திரவதை செய்து கொல்லவும் செய்தார்கள். இதுதான் இவர்களின் விடுதலைப் போராட்டமாகவும் இருந்தது.

என்னை ஒருவன் அடிக்க ஆரம்பித்தது மட்டுமே நினைவிலுள்ளது. எனக்கு நினைவு வந்த நேரத்தில் அந்தமுகாமின் சமையல் சாலைக்கு அருகில் கிடத்தப்பட்டிருந்தேன், என்னருகில் இருவர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர் அப்போது வாமதேவன் என்று நினைக்கின்றேன் இவன் முளிச்சிட்டானா" என்று அவர்களை நோக்கி கேட்க, அதில் ஒருவர் இல்லை எனஆரம்பிப்பதற்கு முதல் மற்றவர் தவறு தலாக ஆம் என்று விட்டார். உடனே வாமதேவன் இல்லை என்ற தோழரை அதட்டி என்ன இவனை காப்பாற்றப் பாக்கிறியா" என கேட்டபடி அங்கு வந்துஎன்னை இழுத்து சித்திரவதை செய்யும் குடிலுக்கு கொண்டு சென்றான். அங்கு முதல் நாள் இரவு எமக்கு அடிக்கும் போது காவல் கடமையில் பணிபுரிந்தவர்களே அன்றும் பணிபுரிந்தார்கள். அவர்களில் மனநிலை பாதிக்கப்பட்ட அந்தத் தோழரும் ஒருவர். அவரிடம் தடியை (கொட்டானை) கொடுத்து, எம்மை அடிக்கும் படி கூறுகையில் அவர் அடிப்பதற்கு பதிலாக அலறியபடி அவ்விடத்தை விட்டு ஓடினார்.

அவ்வாறு வெளியேறியவரை விட்டார்களா என்ன மீண்டும் அழைத்து வந்து அவருக்கு பயம் தீரவேண்டும் எனக்கூறி எம்முன் நிறுத்தினார்கள். அந்தத் தோழர் முற்று முழுதாக அன்றிரவுடன் தன் சுயபுத்தியை இழந்தார். காவலுக்கு நின்றவர்களை ஒரு சிலரிடம் எமக்கு அடிக்கும்படி கூறி, அதற்கு விளக்கத்தை செந்தில் உங்களிடம் எதிரி சிக்கினால `அவனிடம் பரிதாபம் காட்டாது தண்டிப்பதற்கு இதுவும் ஒரு பயிற்சி" என்றான். அவர்களோ எமக்கு அடிப்பதற்கு விரும்பாதவர்களாயினும், அவர்களின் கட்டளைக்கு இணங்க அடித்தார்கள். செந்திலின் கட்டளைக்கேற்ப எம்மைத் தாக்கியவர்கள் பலருக்கு, நாம் இயக்கத்தை அழிக்க வந்தவர்கள் என்ற பார்வையும் இருந்தது. அவர்களின் அடியைத் தொடர்ந்து, எமக்கு மாணிக்கதாசனும் அவனுடன் வந்த அந்த ஆறுபேரும் அடித்தார்கள். அப்போது தான் விஜியின் கழுத்தில் மாணிக்கதாசன் அடித்தான். அதனால் அவரின் கழுத்திற்கும் தோள்பட்டைக்கும்இடையிலான எலும்பில் வெடிப்பு ஏற்பட்டது. என்னை வாமதேவனும் பாபுஜியும் இணைந்து அடித்தது தான் நினைவில் நிற்கின்றது. நான்

கண்விழித்த போது பகற்பொழுதாகி இருந்தது. நான் குறண்டியபடி மற்றவர்களோடு கும்பலாகக்கிடந்தேன். அன்றைய பகற்பொழுதும் பாதி மயக்கத்துடன் சென்றது. அன்று என்னை சிறுநீர் கழிக்க அழைத்துச் சென்ற தோழர்களில் ஒருவர் என்னைப் "பார்த்து இது தேவைதானா உங்களுக்கு"என வினவினார். அதன் போது மற்றவர் இவர் களுடன் கதைக்க வேண்டாம், கதைத்தால் எங்களுக்கும் இதுதான் கதி" என்றார். அன்று பகல் நான் உணவு உண்டதாக நினைவில் இல்லை. இரவுமீண்டும் அதே மோட்டார் சைக்கிள் சத்தங்கள். அன்று மாணிக்கதாசன் வரவில்லை. அவருக்குப் பதிலாக சசி என்பவர் வத்திருந்தார். வந்தவர்கள் மீண்டும் மீண்டும்அடித்து எம்மைச் சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள்.

மறுநாள் மதியம் அளவில் மீண்டும் மோட்டார்ச் சைக்கிள் சத்தம் கேட்டது. எனக்கோ அதைக் கேட்டதும் மலம் சலம் தானாகவே வர ஆரம்பித்தது. மாணிக்கதாசனும் வாமதேவனும்வந்தார்கள். எங்கள் மீதான விசாரணை நடத்தப் போவதாக கூறி நீங்கள் என்ன செய்தீர்கள் என உங்கள் வாக்குமூலத்தை தனித்தனியே எழுதித் தரவேண்டும்" எனக் கூறினார்கள். நாம் அரைமயக்கத்தில் இருந்ததால், நாம் அவர்களிடம் என்ன கூறினோம் என்று எதுவும் எனக்கு நினைவில்லை. சிறிது நேரத்தால் அவர்கள் சென்றுவிட்டனர். அன்றிரவு மீண்டும் மோட்டார் சைக்கிள்வருகைச் சத்தம் கேட்டதுமே, மலசலம் எனது சுயகட்டுப்பாடின்றி வெளிவருவதை உணர்ந்தேன். நான் என்னை காவல் காக்கும் கடமையில் இருந்தவர்களிடம் எனது நிலையைக் கூறினேன். அதற்கு அவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களிடம் அனுமதி கிடைத்த பின்பே என்னை அழைத்துச் செல்லலாம் என்க் கூறினார்கள். அவர்களிடம் அதற்கான அனுமதியை எவ்வாறுகேட்பது? அவர்கள் இங்கு வருவதே எம்மை துன்புறுத்துவதற்காகவே. அவர்களுக்கு எனது நிலை நகைப்பிற்கிடமான ஒன்றே ஒழிய, வேறோன்றும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது.

வந்ததும் வெளியில் வரும்படி சத்தமிட்டு கத்துவார்கள். நாமே பயந்து பயந்து செல்வோம். அதிலும் நான் நடக்கமாட்டேன். எனவே அரைந்து அரைந்து தான் செல்வேன். இதனால்

எனக்குமுதல் அடி முதுகில் தான் விழும். வழமை போல வெளியால வாங்கடா" என கத்தினார்கள். அன்று என்னால் எழுந்து நிற்க முடியவில்லை. அரைந்து அரைந்து அவர்களை நோக்கிச் சென்றேன். அதனால் முதல் அடி முதுகில் விழுந்தது. மீண்டும் அலறல்.... அன்று அடிவிழும் நேரம் சற்றுக் குறைந்திருந்தது. வழமை போல எமது அலறல்களும் கதறல்களும், அந்த முகாமை நிசப்தத்துக்குள் வைத்திருந்ததாகவே நான் உணர்ந்தேன். எம்மீதான தாக்குதலின் உக்கிரமும், சித்திரவதையின் கொடுமையும் குறைந்ததாகத் தெரியவில்லை. எமது கண்ணீரும் கதறலும் கொடுமைக்கார, கொலையாளி களை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. ஆனால் இன்று வழமையான மூன்று மணித்தியாலதுன்புறுத்தலுக்கு பதிலாக இரண்டு மணித்தியாலத்தில் நிறுத்திக் கொண்டனர்.

வாமதேவனும் பாபுஜியும் நாளை காலை வருவோம், எமது வாக்குமூலம் எழுதி முடித்திருக்க வேண்டும் என்று கூறிச் சென்றனர். அதே போன்று மறுநாள். அதாவது ஐந்தாவது நாள்.செந்திலும் வாமதேவன் போன்றோர் வந்தனர். வந்தவர்கள் எழுதிவிட்டீர்களா" எனக் கேட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், நாம் எம்மால் எழுந்து உட்காரவே முடியாதநிலையில், ஒவ்வொருவரும் சுருண்டு கிடக்கும் வேளையில் எழுதிவிட்டீர்களா என்று கேட்டால் என்ன பதில் கூறுவது? இல்லை என்றோம். உடனே ஒரு உதை. சசி என்பவர், எம்மீதானகாவல் கடமைக்கு பொறுப்பாளியாக அன்றிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தார். சசியிடமே எமது வாக்குமூலத்தை பதிவு செய்யும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்காக சசி முகாமில் இருந்த வேறொரு தோழரை நியமித்தார். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அதை முடிக்குமாறு உத்தரவிட்டதுடன், குறித்த ஒரு நேரத்தையும் அத்தோழருக்கு குறிப்பிட்டுஅவ்விடத்தை விட்டு நகர்ந்தான். குறிப்பிட்ட நேரத்துக்கு வந்த தோழர், எமது நிலை யைப் பார்த்து விட்டு வாக்குமூலம் எடுக்காது சசியிடம் சென்று தன்னால் எடுக்க முடியவில்லை எனக் கூறிஇருக்க வேண்டும். சசி வந்து எம்மைப் பார்த்தார். நாமோ மிகுந்த வேதனையுடன் அங்கிருப்பதைக் கண்டு திரும்பிச் சென்றார். அன்று இரவு எவரும் வரவில்லை ஆனால் நாமும்

நித்திரை கொள்ளவில்லை. எந்த நேரத்திலும் எம்மை வந்து தாக்கலாம் என்ற பயத்தில், இரவு முழுவதும் கழிந்தது. எனக்கு சித்திரவதையினால் மனப் பயம் ஏற்பட்டதனால் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டால் என்னை அறியாது மலசலம் வெளியேறியது. இது பிற்காலத்தில் வெகுவாக என்னைப் பாதித்தது.

போராட்டம் என்பது மக்களுக்கானதாக இருக்கவில்லை. மாறாக தம்மையும், தமது அதிகார இருப்பையும் பாதுகாத்துக் கொள்வதே மத்திய குழு உறுப்பினர்களின் குறிக்கோளாக இருந்தது.அதனாலேயே தம்மை மாற்று இயக்கங்களாலும், இலங்கை அரசாலும், யாராவது வந்து உளவு அறிந்துவிடுவார்களோ என்ற பயத்தாலும் பீதியாலும், முட்டாள்தனமானஅரசியலாலும், மத்திய குழு சீரழிந்து இருந்தது. இதன் நிமித்தமே உட்படுகொலைகள் சர்வசாதாரணமாக நடந்தேறியது. புளட்டின் மத்திய குழுவினர் தமது கழகத் தோழர்களுடன் எந்தவகையில் மிருகத்தனமாக நடந்து கொண்டனர் என்பது ஒருபக்கமிருக்க, இவர்கள் தான் மற்றைய இயக்கங்களுக்கும் உட்படுகொலை மற்றும் சித்திரவதைகளுக்கு முன் உதாரணமாக வழிகாட்டியவர்களும் கூட.

# 13

## சந்ததியாரின் வழிகாட்டுதலின் பேரிலேயே இது நடந்தது என்று எழுதித் தருமாறு கூறினர்...

மறுநாள் மதியமளவில் மாணிக்கதாசனும் செந்திலும் மோட்டார் சைக்கிளில் வந்தனர். அந்த மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டதும், எனக்கு வழமையான பாதிப்பு ஏற்பட்டது. சந்ததியாரைஇது தொடர்பாக விசாரித்து விட்டுத்தான் வருகின்றோம் என்று எம்மிடம் கூறினர். எமக்கோ மரண பயம் பிடித்தது. ஏனெனில் நாம் மலைபோல நம்பியிருந்த சந்ததியாரையும், இவர்கள்பிடித்து விசாரிக்கின்றார்கள் என்னும் ஆச்சரியமும் அச்சமும் தான். அவருக்கே இந்த நிலை என்றால் எமக்கு? என்ற கேள்வி எனது மனதை வெகுவாக குழப்பமடைய வைத்தது. மேலும் "தங்கராஜா இதற்கெல்லாம் காரணம் சந்ததியார்" என ஒப்புக் கொண்டுள்ளார் எனவும் கூறினர். எமக்கு கடிதமெழுதிய செயற்பாடு சந்ததியாரின் வழிகாட்டுதலின் பேரிலேயே நடந்ததுஎனவும் கூறினர். நாம் எல்லோரும் மௌனமாக இருந்தோம். அவர்கள் கூறியதில் உண்மை இல்லை என்பதால், திடீர் என ஒரு தோழர் அப்படி இல்லையென மறுத்தார். உடனேமாணிக்கம்தாசன் அப்படி என்றால் என்ன நடந்தது என்று எழுதுங்கோடா என அதட்டினான். சரி என்றோம். முகாமில் இருந்து ஏற்கனவே

படிப்பகம்

எமது விடயத்தை எழுதவென அனுப்பிய தோழரை மீண்டும் அனுப்பினால், நாம் சொல்லச் சொல்ல அவர் எழுதுவார் எனவும் கூறினோம். அதற்கு அவர்கள் இணங்கினார்கள். இருந்தபோதும் எமது வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டியதோழர் அன்று பகல் முழுவதும் வரவில்லை.

அன்று இரவு மீண்டும் மோட்டார் சைக்கிள் சத்தம். எல்லோரும் எழுந்து உட்கார்ந்தோம். வாமதேவன் பாபுஜி மற்றும் இருவர் வந்திருந்தார்கள். அவர்கள் எங்களை நோக்கி வாங்கோடாவெளியாலை என சத்தமிட்டனர். என்ன சந்ததியார் இதுக்கு காரணம் இல்லை என்று சொன்னியளாம் என கத்தியபடி, அடிக்கத் தொடங்கினார்கள். எம்மாலோ அடிவாங்க முடியாத நிலை.எல்லோரும் கதறி அழுதோம். பின்பு எம்மை இழுந்து வந்து கூடாரத்துக்குள் போட்டார்கள். "நீங்கள் இதற்கு எல்லாம் சந்ததியார் தான் காரணம் என்று செல்ல வேண்டும்" எனக் கூறிவிட்டுச்சென்றனர்.

மறுநாள் காலை வாக்குமூலமெழுதும் தோழர் வந்திருந்தார். நாம் இயலாது இருந்தோம். இருந்தபோதும், நாம் ஏன் தலைமைக்கு அமைப்பின் உள்ளகப் பிரச்சனைகள் , மற்றும் அரசியல் நிலைப்பாடு பற்றிக் கடிதமெழுதும் நிலைமைக்கு தள்ளப்பட்டோம் என்பதைப் பற்றி கூற ஆரம்பித்தோம். இதில் நாம் சந்ததியாரை சம்பந்தப்படுத்தவில்லை. வாக்குமூலமெழுதும் தோழர் எம்நிலையையும், எமது போராட்டத்தின் உண்மையையும் புரிந்து கொள்ளத் தொடங்கினார். அவர் எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தும் தவறானதும் சோடிக்கப்பட்டதும் என்றுஅறிந்து, கண்கலங்கி கண்ணீரும் விட்டார். அத் தோழர் கூறினார், "நாங்கள் நினைத்தோம் நீங்கள் எல்லாரும் துரோகிகள் என்று" எனத் தமது முன்னைய நிலைப்பாட்டை தெரிவித்தார். எமதுவாக்குமூலம் சசியிடம் கொடுக்கப்பட்டது. அதை வாசித்த சசியோ எம்மிடம் வந்து "அடிவாங்கியும் திருந்த மாட்டிங்களாடா" என கூறிவிட்டுச் சென்றார்.

பிற்பகல் மாணிக்கம்தாசனும் செந்திலும் வந்திருந்தார்கள். அவர்கள் எமது வாக்குமூலத்தை வாசித்து விட்டு, எம்முன்னே அதை கிழித்து எறிந்தனர். காரணம் நாம் சந்ததியார் தான் இதற்கு காரணம் என்று கூறவில்லை

என்பதுதான். நீங்கள் நான் சொல்லுறமாதிரி எழுத வேண்டும் எனக் மாணிக்கதாசன் கத்திய போது, அவனை இடைமறித்த செந்தில் தேவையில்லை என்றான். "அதை எல்லாம் தங்கராஜா கூறிவிட்டார் தானே" எனக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர். அப்போது தான் எமக்குத் தெரிய வந்தது, ஏன் தங்கராஜாவை எம்மிடம் இருந்துபிரித்தார்கள் என்பதை. தோழர் தங்கராஜாவை கொண்டு தாம் என்ன நினைக்கின்றார்களோ, அதை செய்து முடிக்கலாம் என எண்ணியிருக்க வேண்டும்.

அன்றிரவு மறுபடியும் அடி விழுந்தது. மறுநாள் காலை எம்மை இடம் மாற்றப் போவதாகக் கூறினர். சசியும், காவலாளிகளும் எம்மை முகாமின் மறுபக்கத்தில் உள்ள ஒருமூலையில், களஞ்சிய அறைக்கு சற்றுத் தூரத்தில் கொண்டு சென்றனர். அங்கு மட்டக்களப்பில் புயல் வீசிய போது வீடு இழந்தவர்களுக்கு என வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகை (ரென்ற்)ஒன்றில் எம்மை தங்கவைத்தனர். அதைச் சுற்றி எட்டுப்பேரைக் காவலிற்கு நிற்பாட்டினர். அப்போது எம்மில் ஒருவர் வெளியே போக வேண்டிய நிலை ஏற்பட்டால், உடனே முகாமில் இருந்துஇருவரை காவலுக்கு அழைப்பார்கள். சந்ததியார் கைது செய்யப்பட்டது எமக்கு ஆச்சரியத்தை கொடுத்தாலும், அதைப்பற்றிச் சிந்திக்க எம்மால் முடியவில்லை. காரணம் சித்திரவதையின் வலிகள். இதன் பின் சந்ததியாருக்கு என்னநடந்தது என்று நாம் அறிய முடியாத நிலையில் இருந்தோம்.

சந்ததியாரின் கைது என்பது, முகாம்களில் கசிய ஆரம்பித்தது. இருந்தபோதும் அவரைப் பற்றி பலவிதமாக பொய்ப்பிரச்சாரங்கள் திட்டமிடப்பட்டு முகாம்களிற்குள் பரப்பப்பட்டன. அதில்ஒன்று தான் எம்மையும் அவரையும் இணைத்து, நாம் கழகத்தை அழிக்க புறப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டது. சந்ததியாரை ஏன் கழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என புளொட் தலைமை முடிவெடுத்தார்கள் என்பதை ஆதாரப்படுத்தும் வகை யில் டேவிட் ஐயாவால் எழுதப்பட்ட "அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஈழத்தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்" என்றபுத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பார்க்க. உண்மையான தகவல்கள் கிடைப்பதென்பது,

முகாம்களில் மட்டுப்படுத்தப்பட்ட விடையமாக இருந்ததால், பச்சோந்திகளால் சொல்லப்பட்டதகவல்களைப் பலர் நம்பினர். ஒரு சிலருக்கு தகவல்கள் ஆங்காங்கே தெரியவந்த போதும், அதை மற்றவர்களிடம் கதைப்பதனை தவிர்த்தார்கள். காரணம் யார் உளவாளிகள் என்று தெரியாதபயத்தால். அன்று இரவும் எமக்கு மீண்டும் அடி விழுந்தது. இதனால் எமது உடல்நிலை வெகு வாகப் பாதிக்கப்பட்டிருந்தது. நான் நடக்க முடியாதிருந்தேன். நான் எங்கு செல்வது என்றாலும் இருவர்என்னை தூக்கிக் கொண்டுதான் செல்வார்கள். விஜிக்கோ கழுத்தில் ஏற்பட்ட நோவால் இரவில் படுக்கமுடியாது மிகவும் கஸ்டப்பட்டார். அன்ரனியின் உடல் நிலை வெகுவாகபாதிக்கப்பட்டிருந்தது. ஆனந்தன் மலம் கழிக்கச் சென்றால், இரத்தமாகத்தான் செல்வதுடன் அடிக்கடி மயக்கமும் ஏற்பட்டது. இவ்வாறு எம்முடன் இருந்த அனைவரின் உடல் நிலையும்பாதிப்பிற்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் எம்மீதான அனுதாபம் முகாமில் அதிகரிக்கத் தொடங்கியது. எமது போராட்டத்தின் உண்மைத்தன்மையைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள்.இதற்குக் காரணம் எமது வாக்குமூலத்தைப் பெற்ற அந்தத் தோழர் தான் காரணம். நாம் மலம் கழிக்க செல்லும் போது எம்முடன் கதைக்க வேண்டாம் எனவும் எமக்கு அருகாமையில் நின்றுகடமைபுரிய வேண்டும் எனவும் முகாம் தோழர்களுக்கு விதிக்கப்பட்ட அந்தக் கட்டளையைப் பலர் மீற ஆரம்பித்தனர். எம்முடன் உரையாடுவதுடன், எம்மை மலம் கழிக்க விட்டு விட்டுதூரத்தில் நிற்பார்கள். அத்துடன் எம்மிடம் இருந்து என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களையும் அறிய முற்பட்டார்கள்.

ஆரம்பகாலங்களில் எமக்கு உணவு தருவதென்றால் வேண்டாவெறுப்பாக தந்தவர்கள். தற்போது தோழமை உணர்வுடன் தரத் தொடங்கினர். இறைச்சி சமைக்கும் நாட்களில், இறைச்சிக்கறியைசாப்பாட்டுத் தட்டின் கீழே போட்டு விட்டு அதன் மேல் சோறு போட்டு மீண்டும் இறைச்சிக் கறியைப் போட்டு எமது உடம்பை தேற்றுவதற்கு தம்மால் இயன்ற வகையில் பாடுபட்டார்கள்.ஆனாலும் இரவில் திடீர் திடீர் என வரும் மேல் மட்டத்தினர், தமது சித்திரவதை செய்யும் பயிற்சிக்காக எம்மைப் பதம்

பார்த்துச் செல்வார்கள். எமது உடல்நிலை வெகுவாக பாதிக்கப்பட்டது.குறிப்பாக ஆனந்தன், விஜி, அன்ரனி, மற்றும் எனது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து சென்றதை அவதானித்த முகாம் தோழர்கள், எம்மைப் பார்வையிட வந்திருந்த இராணுவப்பொறுப்பாளர் கண்ணனிடம் கூறினர். எமக்காக ஓரளவுக்கு கண்ணனிடம் கதைத்திருக்கின்றார்கள். கண்ணன் எம்மைச் சந்தித்த போது, நாம் அவருடன் கதைக்க முடியாத நிலையில்இருந்தோம். இதை அவதானித்த கண்ணன் உடனடியாக வாமதேவனை அழைத்து, எமக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கும்படி கூறினார். இதனாலோ என்னவோ, இரு நாட்கள் கழித்துஅனைத்து முகாங்களின் மருத்துவப் பொறுப்பாளர் எமக்கு வைத்தியம் செய்வதற்காக வாமதேவனால் அழைத்து வரப்பட்டார். அவர்களுடன் மாணிக்கம்தாசனும், கனடா என்ற தோழரும்வந்தனர். இதில் கனடாவை எமது காவலுக்கு பொறுப்பாகவும், தங்கராஜாவின் பாதுகாப்பிற்கு சசியை பொறுப்பாகவும் நியமிப்பதாக அறிவித்ததுடன், சசி எம்மை மேற்பார்வை செய்வார் எனத்தெரியப்படுத்தினார்கள்.

வந்திருந்த வைத்தியர் ஒவ்வொருவராக களஞ்சிய அறைக்குள் அழைத்து சோதனையிட்டார். அப்போது ஒவ்வொருவரும் தமக்கான வருத்தத்தை சொல்ல, அதற்கான மருத்துவத்தைச்செய்தார். இவர்கள் மோட்டார் சைக்கிளில் வந்திருந்ததால், சித்திரவதையின் பாதிப்பால் நான் மலம் கழிக்கச் சென்று விட்டேன். இறுதியாளாக என்னை அழைத்தனர். அங்கு சென்றதும் எனக்கு சிறு ஆச்சரியம் காத்திருந்தது. அனைத்து முகாம் மருத்துவப் பொறுப்பாளராக வந்திருந்தவர், எனது உறவினரும் ஒன்றாக பயிற்சிக்கு வந்தவருமான அழகன். அவர் என்னைக்கண்டதும் விம்மியபடி கண் கலங்கினார். ஒன்றும் கதைக்க முடியாத சூழ்நிலை. அவர் அருகே வாமதேவனும் நின்றிருந்தான். என்னை தனது அருகே அழைத்து, எனது காயங்களையும் எனது கால் மற்றும் முதுகின் நிலமையையும் மேலோட்டமாக பார்த்து விட்டு, எம்மை வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும் எனக்கூறினார். வாமதேவனோ இவங்கள் அத்தனை பேரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப முடியா தென அவருடன் ஏறிப் பாய்ந்தான். என்னை தூக்கி வந்த தோழர்கள், மீண்டும் என்னைச் சுமந்து சென்று எமது கூடாரத்துக்குள்

விட்டனர். முகாம் மருத்துவப் பொறுப்பாளராக வந்திருந்த அழகன் பரிந்துரையின் பெயரில் முதலில் ஆனந்தனும், விஜியும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனந்தன் ஒரு சிலநாட்களில் திரும்பினார். விஜியோ நீண்ட நாட்களாக திரும்பி வரவில்லை. எமக்கோ பயமும் சந்தேகமும் தோன்றியது. விஜியை புதைத்து விட்டார்களோ என்ற அச்சம் எழுந்தது.ஆனாலும் இரு கிழமைக்கு பின்னர் அவர் திரும்பினார். அவரின் கழுத்தைச் சுற்றி பிளாஸ்டர் பரீஸ் போடப்பட்டிருந்தது. அவரால் எழும்புவதில் இருந்து உணவு உட்கொள்வது வரைக்கும்இன்னொருவர் உதவி தேவைப்பட்டது. இவர்கள் இருவரும் வந்த பின்னர், அவ்வேளையில் அதிக சுகயீனத்தால் சலாவும் விஜயனும் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். எனக்கும்அன்ரனிக்கும் முகாமிலேயே மருத்துவம் வழங்கப்பட்து. எனக்கு சித்திரவதையால் ஏற்பட்ட மனச் சஞ்சலம் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. மேலும் கால்கள் நடக்க முடியாதிருந்தன.அதை முகாமில் இருந்த ஒரு தோழர் எண்ணெய் போட்டு வைத்தியம் செய்தார். அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர்தான் பயிற்சியின் போது உடம்பில் காயப்பட்டவர்களுக்கு எண்ணெய்போட்டு வைத்தியம் செய்பவர். இன்று நான் நின்றபடியோ அல்லது ஓடி ஆடி வேலை செய்யும் நிலையில் இயங்க முடிகிறதென்றால் , அந்தத் தோழரின் நோ எண்ணெய்யும் பரியரிப்பும் தான் காரணம். அவர் எனக்காகப் பல இலைகளை வெட்டி "நோ எண்ணெய்" காய்ச்சி காலை யிலும் மாலையிலும் தவறாது தடவி விடுவார்.

அவர் எம்மைக் குணமாக்கத் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்தவர் என்றே கூறலாம். காலையில் பயிற்சி முடிந்து, காலை உணவு அருந்தியதும் பலர் ஓய்வெடுப்பார்கள். ஆனால் இவரோஎம்மிடம் வந்து எண்ணெய் தடவிவிட்டு தனது ஓய்வுநேரத்தை எமக்காக செலவிட்டார். இவரை விட வேறு சில தோழர்களும் எமக்கான சிறு சிறு உதவிகளையும், தம்மால் முடிந்தவற்றையும் செய்ய ஆரம்பித்தனர். ஆம் தோழர்கள் என்ற பந்தத்திற்கு உரியவர்கள் இவர்கள் தான்.

# 14

## எம்மை புதைக்க, நாம் வெட்டிய குழி...

தோழமைக்கு இலக்கணம் வகுத்த அந்தத் தோழர்களில் ஒருவர், காவற்கடமையில் இருக்கும் போது எம்முடன் கதைத்ததை சசியும் வளவனும் கண்டனர். உடனே அத்தோழரை அழைத்துஎன்ன கதைத்தாய் என விசாரித்துவிட்டு, அவருக்கு தண்டனை வழங்கினர். முகாமில் உள்ளவர்கள் எம்முடன் கதைத்தால், இவ்வாறு தான் அவர்களுக்கும் நடக்கும் என்று வளவன் முகாம்தோழர்களை எச்சரித்தான். இதனால் ஒரு சில நாட்களாக, முகாம் தோழர்கள் எம்முடன் கதைக்க பயந்தார்கள். இருப்பினும் எம்மை வெளியில் அழைத்துச் செல்லும் போது அவர்கள் எம்முடன்கதைத்தார்கள். இவர்களில் பலரிடம் எமது சொந்தப் பெயர், ஊர் விலாசம் என்பவற்றை கூறிவைத்தோம். காரணம் எம்மை எந்த நேரத்திலும் கொன்று புதைத்து விடுவார்கள் என்றஜயப்பாடு எமக்குள் இருந்தது.

இக்காலத்தில் தங்கராஜாவிற்கு "இராஜமரியாதை" என்று கூறலாம். அவருக்கு அவ்வளவு வசதிகள் செய்யப்பட்டிருந்தது. குறிப்பாகச் சொல்லப்போனால் ஒரு முகாம் பொறுப்பாளருக்கு இருக்கும் வசதிகளை விட அதிகமாகவே இருந்தது. அவர் உணவு உண்டபின்

படிப்பகம்

காற்று வாங்க என்று அழைத்தும் செல்வார்கள். ஆனால் நாமோ அடியின் அவதையால் பாதிக்கப்பட்டவர்களாக படுத்தபடுக்கையிலும் நடக்க முடியாமலும் அரைந்தபடியும் இருந்தோம். பின்னாளில் தான் அறிந்தோம், அவ்வசதிகள் அவர் விருப்பத்துக்கு மாறாக, தந்திர நோக்கில் அவருக்குச் செய்து கொடுக்கப்பட்டதென்பதனை.

ஒருநாள் மாலை நேரம் முகாமில் பரபரப்பு. சசி, கனடா போன்றவர்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள். அவ்வேளையில், எம் எல்லோரையும் எமது கூடாரத்தை விட்டு வெளியில் கொண்டுவந்தனர். அப்போது காவல் கடமையில் இருந்த தோழர் ஒருவர் "தங்கராஜா தப்பி ஓடிவிட்டார்" என்று இரகசியமாகக் கூறினார். அப்போது சசி சத்தம் போட்டபடி ஓடி வந்து "எங்கயடா தங்கராஜா போனவன்" என்று கேட்டு எனது வலது பக்க தோள்பட்டையில் உதைந்தான். நான் அலறியபடி நிலத்தில் வீழ்ந்தேன். மீண்டும் மீண்டும் என்னை அடித்தான். மற்றவர்களையும் நோக்கிக் கத்தினான். அவர்கள் மீதும் மிகவும் மோசமாக அடி வீழ்ந்தது. இதனால் எல்லோரும் குழறினோம். சிறிது நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வாமதேவன் மற்றும் செந்தில் போன்றவர்கள் வந்தனர். அவர்களும் "எங்கு தங்கராஜா போனான்" எனக் கேட்டு எங்களை போட்டுத் தாக்கினர். தனியே எம்முடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் பிரித்து வைக்கப்பட்டிருந்தவர் தங்கராஜா. ஆனால் அவர் தப்பியதற்கு இவர்களின் காவலர்கள் தப்ப விட்டதற்கு எமக்கு அடியும் உதையும் நடந்தது.

தங்கராஜா எவ்வாறு ஏன் தப்பினார் என்ற விடையம் பிற்காலத்தில் சிலருடன் உரையாடிய போதுதான் எனக்குத் தெரியவந்தது . தங்கராஜாவை தப்ப வைத்தது பரந்தன்ராஜன். பரந்தன் ராஜனின் பணிப்பின் பெயரில், பாபுஜியின் உதவியுடன் சசியைக் கொண்டு தப்ப வைத்தனர். தங்கராஜா தப்பிச் சென்றது, சசியுடன் காற்று வாங்கச் சென்ற போது தான். இப் பழிதன் மீது விழுந்து விடக்கூடாது என்பதற்காகச் சசி எம்மீது பாய்ந்துள்ளான். தங்கராஜாவின் பாதுகாவலராக இருந்த சசி மீது வாமன்தேவனுக்கும் செந்திலுக்கும் ஒரு சில நாட்களில்

சந்தேகம் ஏற்பட்டது. சசியை விசாரணக்கு என அழைத்துச் சென்றனர். என்ன சதி நடந்ததோ தெரியாது, சசியையும் போட்டுத்தள்ளிவிட்டார்கள். சந்ததியார் மீதான விசாரணை என்பது தீவிரமடைந்த நிலையில், அவரும் டேவிட் ஐயாவும் அமைப்பை விட்டு ஒதுங்கி வாழ ஆரம்பித்தனர். இதற்காக சந்ததியாரின் செயற்பாட்டை நாம் சரிஎன்று கூற முடியாது. காரணம் சந்ததியார் "பீ" முகாமிற்கு வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தார். அவருக்கு அங்கு சித்திரவதை முகாமான நாலாம் மாடி இருப்பது கட்டாயம் தெரிந்திருக்கும். புளட் அமைப்பின் முக்கிய மத்திய கமிட்டி உறுப்பினரான சந்ததியார், ஏன் இந்த அராஜகங்களை எதிர்த்து உட்கட்சிப் போராட்டம் ஒன்றினை நடத்தாது ஒதுங்கி ஒளித்து வாழ்ந்தாரென்பதுபுரியாமலுள்ளது. ஒதுங்கலின் பின் இவர் என்.எல்.எவ்.ரீ யுடன் தொடர்புகளை பேணியிருந்ததாக அறிந்தேன். இக் கால கட்டங்களில் அடிக்கடி எம்மை விசாரணை செய்வதற்காக எனப் பலர்வந்து செல்வார்கள். அதில் கண்ணன் என்ற சோதீஸ்வரன் படைத்துறைச் செயலதிபர், அவரின் உதவியாளரான காந்தன் என்ற ஜான் மாஸ்டர் போன்றோரும் வந்தனர்.

அப்போது தான் உமாமகேஸ்வரனின் தளம் நோக்கிய பிரயாணம் அமைந்திருந்தது. அங்கு சென்ற உமாமகேஸ்வரனும் அவரது சகாக்களும் சுழிபுரத்தில் சுவரொட்டி ஒட்டச் சென்ற ஆறு இளைஞர்களை கொன்று புதைத்தனர். உமாமகேஸ்வரன் தளத்திற்கு சென்று செய்த வேலை இது ஒன்று மட்டும் தான். இதனால் பாதிக்கப்பட்டவர்களில் ஐரோப்பாவில் தலித்தியம் மற்றும் இலக்கியம் கதைக்கும் சுகன் என்பவரும் ஒருவர். உமாமகேஸ்வரன் குழுவினர் அந்த ஆறு இளைஞர் களையும் புதைத்துவிட்டு இந்தியாவிற்கு தப்பி வந்து விட்டார்கள். ஆனால் அப்போதுதளத்தில் வட்டுக்கோட்டை மற்றும் சுழிபுரம் பகுதிகளில் வேலை செய்த பலர் இதனால் பாதிக்கப்பட்டனர். இக்கொலைகள் தொடர்பாக தளத்தில் இயங்கிய பலருக்கு தெரிந்திருந்தபோதும், அதை மறுத்து தொடர்ந்தும் மக்களையும் இளைஞர்களையும் ஏமாற்றிய வண்ணம் இருந்தனர். புளட்டின் மத்திய கமிட்டியிலிருந்த உறுப்பினர்களுக்கு இயக்கத்தின் உள்ளே நடந்த மற்றும் நடந்து கொண்டிருந்த அனைத்து படுகொலைகளைப் பற்றியும், அராஜகங்கள் பற்றியும் மிகநன்றாகவே தெரிந்திருந்தது.

படிப்பகம்

இதை எதிர்த்துக் கேள்விகள் எழுப்பவோ, போராடவோ அல்லது சித்திரைவதை முகாமான நாலாம் மாடியை பற்றி எதிர்க்கவேயில்லை. எமது உட்கட்சிப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்ந்து, அதற்கு சார்பாக போராட அன்று அவர்கள் முன்வரவேயில்லை. மாறாக மழுப்பல் கதைகளாலும், பொய்களாலும் மக்களின் துரோகிகளைபாதுகாத்தனர். இவர்கள் இன்று தாம் ஜனநாயகவாதிகள் என்றும் முற்போக்கானவர்கள் என்றும் கூறிக் கொண்டு புலிகளின் அழிவின் பின்னர் மீண்டும் மக்களையும் தேசத்தையும் ஏமாற்றபுறப்பட்டுள்ளனர்.

இதில் முக்கியமாக இருவரைக் குறிப்பிடலாம். முதலாமவர் அசோக் கண்ணமுத்து. (இனியொரு இணையத் தளத்தினதும், அசை என்ற சஞ்சிகையினதும் ஆசிரியர்) அசோக் கண்ணமுத்து. இவர் செந்தில், பாபுஜி, பரந்தன் ராஜன் போன்ற கொலை காரர்களுடன் அரசியல் தோழமை கொண்டு, அவர்களின் கொலைகள் சித்திரவதைகள் பற்றி நன்கறிந்த பின்னாலும் கைகோர்த்துத் அவர்களோடு திரிந்தவர். இலங்கையில் தள மாநாடு நடந்த காலத்தில், புளட் மத்திய குழுவில் இருந்த அசோக் தளமாநாட்டின் பின்னர் பரந்தன் ராஜனுடைய அத்தனை அத்துமீறல்கள் கொலைகள் சித்திரவதைகளையும் தெளிவாக அறிந்திருந்தும் பரந்தன் ராஜனோடு அரசியல் நடாத்தினார். அத்துடன் சிவராமுடன் இணைந்து செல்வன் அகிலன் கொலைகளுக்கும் உடந்தையானவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டவர். பின்நாட்களில் பரந்தன் ராஜன் தலைமையிலான கொலைகாரர்களின் கூட்டே ஈ.என்.டி.எல்.எவ் வாகி, அதன் முக்கிய நபர்களில் ஒருவராக இந்தியசார்பு அரசியலுக்குள் தன்னை இணைத்துக் கொண்டார் இந்த அசோக். அதன் பின்னால் டக்ளசின் தோழராக வலம் வந்து, இணைய அவதூறை புலம் பெயர் நாடுகளில் அறிமுகம் செய்த குருக்களில் ஒருவராகிப் பின், அதே சிந்தையுள்ள இனியொருவுக்குள் நுழைந்துள்ளார்.

இரண்டாமவர் தீப்பொறி ஸ்தாபகர்களில் ஒருவரும், உயிர்ப்பு சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவரும், தமிழீழக்கட்சி ஸ்தாபகர்களில் ஒருவரும், தற்போதைய மே 18 இயக்கத் தலைவருமான காந்தன் என்ற ரகுமான் ஜான் அவர்கள்.

காந்தன் தன்னை ஒரு முற்போக்காளர் எனவும், தான் அராஜகத்திற்கு எதிரானவர் என்ற வகையிலும், பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆனால் உட்படுகொலை சகோதர இயக்கப்படுகொலைகள், உட்கட்சிப் போராட்டத்தை நசுக்குதல் போன்றவற்றை செய்த அமைப்பின் முக்கிய தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களில் ஒருவர். இவருக்கு தெரியாமல் கொலைகளும், சித்திரவதைகளும் நடந்து என இவரின் அனுதாபிகள் சில கூறினாலும், எனது கருத்து இதற்கு மாறானதே. அவர் இன்னமும் தனது கடந்தகாலம் தொடர்பாக எந்தவிதமான விமர்சனத்தினையும் வெளி யிடாமல் தான் மீண்டும் மக்களை அணிதிரட்ட முயல்கின்றார். அன்று உட்கட்சி ஜனநாயகமறுப்பு, சகோதர இயக்க படுகொலைகள், வதைமுகாம்கள் என்பனவற்றினை எதிர்த்து போராடாது கள்ள மௌனம் சாதித்ததும், மறைமுகமாக அவற்றினை நியாயப்படுத்தியதும் ரகுமான் ஜான் போன்றவர்கள் மேற்கூறிய ஜனநாயக விரோத செயற்பாடுகளை அங்கீகரித்து இருந்தனர் என்பதாகவே அர்த்தப்படும்.

தங்கராஜாவின் தப்பியோட்டத்தின் பின் ஒரு நாள் வாமதேவனும் பாபுஜியும் வந்தனர். எங்கள் எல்லோரையும் "வெளியாலே வாங்கோடா" என அழைத்தார்கள். அவர்களும் மற்றும் காவற்கடமையில் இருந்தவர்களும் எங்களை ஒரு சவுக்கந்தோப்புப் பக்கம் அழைத்துச் சென்றனர். அங்கு சென்றதும் வாமதேவன் எம்மைப் பார்த்து ஆளுக்கு ஒரு கிடங்கு வெட்ட வேண்டும்என்றான். அது 2 அடி அகலமும் 6 அடி நீளமும் 5 அடி ஆழமும் இருக்க வேண்டும் என குறிப்பிட்டான். அவ்வேளை நாம் எங்கள் முகங்களை திரும்ப திரும்ப பார்த்தோம். அன்ரனிவாமதேவனைப் பார்த்து "இது எங்களைப் புதைக்கவா" எனக் கேட்டார். உடனே அவருக்கு அதில் வைத்து அடியும் உதையும் கொடுத்தபடி "ஆம் உங்களைப் புதைக்கத்தான். நீங்கள் எல்லோரும் கழகத்தை அழிக்க சந்ததியாரோட கூட்டுச் சேர்ந்து சதி செய்தனியள்" எனக் கத்தினான்.

குழிவெட்ட ஆரம்பித்தோம். வேடிக்கை என்னவெனின், சரியாக நடக்கவோ இருக்கவோ முடியாதவர்களைப் பிடித்து குழி வெட்டும்படி கூறினால் என்ன செய்வது? வெட்ட

ஆரம்பித்தோம். எம்மால் முடியவில்லை சற்று நேரத்தின் பின் வாமதேவன் வந்து "என்னடா இன்னும் வெட்டாமல் கதைக்கிறியளா" எனக் கேட்டு கத்தினான். பின்னர் "இன்று தேவையில்லை. நாளை உங்களை கனடா அழைத்து வந்து வெட்ட விடுவான்" எனக் கூறி மீண்டும் முகாமிற்கு சொல்லுமாறு கட்டளையிட்டான். மறுநாள் கனடா எம்மை குழி வெட்டும் இடத்திற்கு அழைத்து வந்து வெட்டும்படி கூறினான். எம்மால் மதியம் வரை ஒரு அடி கூட வெட்ட முடியவில்லை. மீண்டும் எம்மை திருப்பி முகாமிற்கு அழைத்துச் சென்றான். கனடாவுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை, அன்று மதியம் எம்மை குழிவெட்ட அழைத்துச் செல்லவில்லை. மறுநாள் காலை கனடா எமது கூடாரத்துக்கு வந்து "இன்று குழிவெட்ட போகத் தேவையில்லை" என்றான். யாராவது வந்து கேட்டால் "உங்களுக்கு சுகம் இல்லை என்று சொல்லுங்கோ" எனக் கூறிச் சென்றான். இரண்டு நாள் கழித்து மாணிக்கதாசன் எம்மை சந்திக்க வந்தான். வந்தபொழுது மெதுவாக வாமதேவனால் குழிவெட்ட ஆரம்பிக்கப்பட்ட விடையத்தை கூறினோம். மாணிக்கதாசன் "நீங்கள் குழி வெட்டத் தேவையில்லை. நான் வாமனுடன் கதைக்கிறேன்" எனக் கூறியது எமக்கு ஒரளவு மன ஆறுதலைக் கொடுத்தது.

இந்திராகாந்தி அம்மையார் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு அனைத்து முகாம்களிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. சில காலங்களின் பின்னர் நாம் சிறை வைக்கப்பட்டிருந்த முகாமில் பயிற்சி எடுத்த தோழர்கள் முகாம் மாற்றப்பட முடிவெடுக்கப்பட்டது. அவர்கள் எம்மை விட்டுப்பிரியும் போது அதிகமான தோழர்களின் கண்களில் கண்ணீரைப் பார்த்தோம். பல சிக்கல்களுக்குமத்தியிலும், அதிகமானோர் எம்முடன் உரையாடி தமது பிரிவை கூறினார்கள். அவர்களில் சிலர் பழகிக் கழித்த தோழர்களே நாம் பிரிந்து செல்கின்றோம் எந்த ஊரில் எந்த நாட்டில் எங்கு காண்போமோ" என பாடியபடி எம்மை விட்டு பிரிந்து சென்றார்கள். புதிதாக வரப்போகும் தோழர்கள் எவ்வாறோ, எந்தத் தன்மை கொண்டவர்களோ, என எமக்குள் ஒரு பயம் இருந்தது. அவ்வாறே புதிதாக வந்தவர்களிடம் எம்முடன் கதைக்கவோ பழகவோ கூடாது தென முதல் நாள் ஒன்றுகூடலில் வைத்துக் கூறப்பட்டது.

அதே போன்று முதல் வாரம் வந்தவர்களும், எம்முடன் மிகவும் கடுமையாகவே இருந்தனர். இக்காலத்தில் எனக்கு ஓர் சிறு ஆச்சரியமான ஒரு சம்பவம் காத்திருந்தது. எனது ஊரைச் சேர்ந்தவரும் உறவினருமான பிரகாஸ் என்பவர், எமக்கு காவல் காப்பதற்காக வந்தார். அவரைக் கண்டதும் நான் என்னை அறியாது கண்கலங்கினேன். அவரும் அழுதார். உடனே நான் என்னை தெரிந்தவர் என முகாமிற்குள் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று கூறினேன். காரணம் என்னை வைத்து அவருக்கு ஏதாவது ஆபத்துநேரிடலாம் அல்லவா! அது மட்டுமல்லாது பிரகாஸ் எனக்குத் தெரிய புலிகளில் நோட்டீஸ் கொடுத்துக் கொண்டு திரிந்தவர். இவர் எப்படி இங்கே என்ற கேள்வியும், அத்துடன் ஏற்கனவேபுலிகளில் வேலை செய்து புளட்டுக்கு வந்த ஆறு தோழர்களுக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரிந்ததாலும், அவருடன் தனிமையில் கதைக்க முயற்சித்தேன். மிகவும் கடினமான விடையம்.காரணம் நாம் வெளியில் செல்வது என்றால் இருவர் காவலுக்கு வருவார்கள். அதே வேளை என்னைத் தாங்கிப் பிடித்து அழைத்துச் செல்ல ஒருவர். அதைவிட காவலுக்கு இருவர் என மூவர்வருவார்கள். இவ்வாறு இருக்கையில் எப்படி அவருடன் கதைப்பது? ஒரு சில வாரங்கள் கடந்தது. எம்மீதான பரிதாப உணர்வும் எமது பக்க நியாயங்களையும், புதிதாக வந்த தோழர்கள்விளங்கிக் கொள்ள ஆரம்பித்தனர். எனது காலுக்கும் தோள் பட்டைக்கும் எண்ணெய் போடுவதற்கு முல்லத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தோழர் நியமிக்கப்பட்டார். எவ்வாறு பழையதோழர்கள் இருந்தார்களோ அவர்களிலும் அதிகமாவே இவர்களும் எம்மை கவனித்தார்கள். எம்மில் எவருக்காவது சுகயீனம் என்றால் போதும், எம்மை மிகவும் ஆதரவாகவும்அவதானமாகவும் கவனிப்பார்கள்.

நான் அதிகம் எமது கூடாரத்தை விட்டு வெளி யில் வருவது குறைவு. இரண்டு காரணங்கள். ஒன்று சரியாக நடக்கமாட்டேன். என்னை யாராவது கைதாங்கி வர வேண்டும். இரண்டாவது வெளியில் வந்து இருந்தால் யாரவது தலைமையில் உள்ள எவராவது வந்து என் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற பயம். அத்துடன் சித்திரவதையால் ஏற்பட்ட மன அழுத்தமும் என்னை வெகுவாகப் பாதித்ததினால், முகாமில் இருந்த

தோழர்களுடன் நான் கதைப்பது மிகக் குறைவு. இக்காலத்தில் வழமைபோல அடிக்கடி செந்தில், வாமதேவன், கண்ணன், பாபுஜி, காந்தன் என்ற ஜான் மாஸ்டர் என மேல் மட்டத்தினர் எல்லோரும் வந்து செல்வார்கள். சித்திரவதைகளும், விசாரணையும் அடிகளும் குறையஆரம்பித்தது. வருபவர்கள் எம்முடன் ஓரளவு கதைக்க ஆரம்பித்தனர். நாமும் அவர்களுக்கு ஏற்றாற் போல் கதைக்க தொடங்கினோம். நாட்கள் நகர எமக்கு அடி விழுவது முற்றாக நின்றுவிட்டது. ஒருநாள் உமாமகேஸ்வரன் முகாமிற்கு விஜயம் செய்தான். அப்போது அவனிடம் நாம் எப்போது விடுதலை செய்யப்படுவோம் எனக் கேட்டோம். அதற்கு ஒரு புன்சிரிப்புடன், எந்தப்பதிலும் கூறாது முகாமை விட்டு வெளியேறினான். இந்த உமாமகேஸ்வரனின் குணாதிசயத்தைப்பற்றி டேவிட் ஐயா முகுந்தனின் மூளைக் கோளாறு என்ற தனது புத்தகத்தில் விபரமாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

# 15

## காந்தன் தப்பியோட, நாம் அடிவாங்குகின்றோம்...

உமாமகேஸ்வரன் தளத்திற்கு சென்ற போது நக்கீரன் (தமிழன்குரல் ஆசிரியர்) என்ற தோழரையும் இந்தியாவில் இருந்து அழைத்துச் சென்றிருந்தார். நக்கீரனை நேரடியாக நாம் இருந்த தண்டனைக் குடிசைக்கு செந்தில் கூட்டி வந்து இவரும் இனி உங்களுடன் தான் இருப்பார், என்று சொல்லிவிட்டுச் சென்றான். அவர் ஏன் எதற்காக எம்முடன் கொண்டு வந்து விடப்பட்டார் என்பது எமக்கு புரியாமையால், எமக்குள் அவர் தொடர்பாக ஒரு பயம் இருந்தது. நாம் என்ன கதைக்கின்றோம் என்று உளவறிய வந்துள்ளாரோ? என்றும் சந்தேகமிருந்தது. எமது தண்டனைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டோர் 10 பேராகி, இடநெருக்கடி அதிகமாகியது. இருந்தபோதும், அதை யாரிடம் யார் சொல்வது? சொன்னால் அடி விழும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததால், அதைப் பற்றி எதுவும் கதைக்காது மௌனமாக இருந்தோம்.

உமாமகேஸ்வரனின் விஜயம் என்பது, எமது முகாமை உலுக்கியது என்றே சொல்லலாம். அவன் வந்து சென்றதும் முகாமில் இருந்த பல தோழர்களுக்கு தாம் அவரை நேராக சந்தித்துவிட்டோம் என்ற திருப்தி ஏற்பட்டது. பல

தோழர்கள் எம்மை வெளியால் அழைத்துச் செல்லும் போது, உங்களுடன் உமாமகேஸ்வரன் என்ன கதைத்தார் என ஆவலாக கேட்பார்கள். நாம் அவர் ஒன்றும் பெரிதாக கதைக்கவில்லை, ஆனால் அவர் நாங்கள் செய்த குற்றத்திற்கு தான் தண்டனை அனுபவித்து வருகின்றோம் என்ற அடிப்படையில் தான் கதைத்தார் என்றதும் பலரும் முகம்வாடியபடி என்ன பெரியய்யாவும் உங்களை இப்படியா பாக்கின்றார் என்று ஆதங்கப்பட்டனர். உமாமகேஸ்வரன் வந்த போது முகாமில் ஒரு சம்பவம் நடந்தது.

எல்லோரும் மதிய உணவிற்காக வரிசையில் காத்து நின்றனர். அவர்களுடன் உமாமகேஸ்வரனும் வரிசையில் உணவுக்காக நின்றான். முகாமில் இருந்த எல்லோரது கைகளிலும் தட்டுகாணப்பட்டது. ஆனால் உமாமகேஸ்வரனின் கையில் மாத்திரம் இல்லை. இதை அவதானித்த வளவன், தனது தட்டை கொண்டு வந்து நீட்ட அதை வாங்க மறுத்தான் உமாமகேஸ்வரன்.இதைப் பார்த்த பல தோழர்கள் தமது தட்டை நீட்டினார்கள். அன்று சமையலுக்கு பொறுப்பாக இருந்தவர்களும், தமது தட்டுக்களை நீட்டினார்கள். அவற்றில் எதையும் வாங்கவில்லைஎன்பதால் பலருக்கும் குழப்பம் ஏற்பட்டது. இவனுடன் வந்திருந்த வாமதேவன், கண்ணன், (சோதீஸ்வரன்)போன்றோர் மற்றவர்களின் தட்டை வாங்கியிருந்தனர். இவன் தட்டை வாங்காதபெரிய சர்ச்சையில் முகாம் அல்லாடிக்கொண்டிருக்கும் போது திடீர் என உமாமகேஸ்வரன் சமையல் அறைக்கு மறுபுறத்தில் நிலத்தில் கிடந்த அழுக்குப்படிந்திருந்த தட்டை எடுத்தான். அத்தட்டில் தான் முகாமில் நிற்கும் நாய்க்கு சாப்பாடு வைப்பது வழக்கம். கிணற்றடிக்கு தானே சென்று கழுவி துப்பரவு செய்து, மீண்டும் சாப்பாட்டிற்கான வரிசையில் வந்து நின்றான். அந்ததட்டிலே தான் உணவை வாங்கிச் சாப்பிட்டான். இது உண்மையில் அந்த முகாமையே அதிரவைத்தது. அவனை தலைவராக மானசீகமாக ஏற்றவர்கள் போற்றிப் புகழ்ந்தனர். மற்றவர்களும்கூட பாராட்டினர். இவ்வாறு ஒரு பெரிய நாடகமாடிவிட்டு, முகாமில் இருந்து உமாமகேஸ்வரன் தன் குழுவினரோடு புறப்பட்டான். அதன் பின்பு தோழர்களை முகாம் மையத்துக்கு அழைத்த முகாம் பொறுப்பாளர் வளவன், பெரியய்யா நாய் சாப்பிட்ட தட்டில்

சாப்பிட்டுவிட்டு போகின்றார் என சத்தமிட்டான். இதற்கு காரணம்நீங்கள் எல்லோரும் தான் எனக் கூறித் தண்டனை கொடுத்தான். மேலும் சமையலுக்கு அன்று பொறுப்பாக இருந்த ரவிவர்மன் என்ற தோழருக்கும், அவருடன் இணைந்தவர்களுக்கும்கடுமையான தண்டனையினை மறுநாள் கொடுத்தான். பலருக்கு ஏன் இது என்று விளங்கவில்லை. ஒவ்வொருவருக்கும் எனக் கொடுக்கப்பட்ட தட்டைத் தான், அவர்கள் வைத்திருந்தனர்.புதிதாக யாராவது வந்தால், அன்று சமையலில் இருப்பவர்களின் தட்டை பாவிப்பது வழக்கம். ஆனால் உமாமகேஸ்வரனோ அதைச் செய்யாது நாய் சாப்பிட்ட தட்டில் தான் சாப்பிட்டு ஒருஸ்ரண்டு செய்ததற்காக சும்மாயிருந்த மற்றைய தோழர்கள் சுடுமண்ணில் உருண்டது தான் மிச்சம். ஏன் வளவன் இதைச் செய்தான் என்றால், தலைமையிடம் விசுவாசத்தை பெற்றுக்கொள்ளவே. இவ்வாறு தான் பலர் தமது விசுவாசத்தைக் காட்ட மற்றவர்களைத் துன்புறுத்தினர். இது முகாம் பொறுப்பாளர்களிடம் மட்டுமல்லாது சாதாரண தோழர்களிடையேயும் கூடகாணப்பட்டது. இதனால் தான் பல காட்டிக் கொடுப்புக்களும், பழிவாங்கல்களும் நடந்தேறின.

இக் காலகட்டத்தில் புதிதாக முகாமிற்கு வந்த தோழர்கள் எம்முடன் சரளமாக கதைக்குமளவிற்கு நெருக்கம் ஏற்பட்டது. அப்போது எனது ஊரவரான பிரகாஸ் என்பவருடன் கதைத்தேன். அவர்எனக்கு நடந்தவற்றை கேட்டு கவலைப்பட்டார். அப்போது அவர் தான் புலிக்கு துண்டுப் பிரசுரங்கள் கொடுத்ததாகவும் ஆனால் தன்னை பின்தளத்திற்கு அனுப்ப புலிகள் மறுத்து விட்டனர்என்றும் இதனாலேயே தான் புளட்டுக்கு வந்தார் என்றும் கூறினார். எனது வீட்டாரின் சுகநலங்களையும் அவரிடம் கேட்டு அறிந்தேன். நான் முன்பு குறிப்பிட்டது போல தளத்தில் இருந்துபுளட்டுக்கு ஆட்சேர்ப்பு என்பது எந்த அரசியலையும் கொண்டிருக்கவில்லை. மாறாக கும்பலில் கோவிந்தா என்ற மாதிரி படகில் ஏற்றி அனுப்பினார்கள்.

இவ்வாறு தோழர்களுடன் கதைப்பது போன்றவற்றின் ஊடாக, எமது காலங்கள் நகர்ந்தன. தோழர் சந்ததியார் அமைப்பில் இருந்து ஒதுங்கிய பிற்பாடு அமைப்பின்

அரசியல் பொறுப்பாளராக பம்மாத்து வாசுவை என்ற வாசுதேவாவை நியமித்தார்கள். இந்த வாசு அடிப்படையிலேயே நேர்மையற்றவர் என்பதால் தான் "பம்மாத்து" என்ற பட்டம் சூட்டப்பட்டது. இவர் அனைத்துமுகாம் பொறுப்பாளராக இருக்கும் போது செய்த தில்லு முல்லுக்கள் பல. சுயநலம் கருதிய இவரது செயற்பாடுகளைப் பார்த்த பல தோழர்கள் இவர் மீது காழ்ப்புணர்வைக் கொண்டிருந்தனர்.தலைமைக்கும் அதன் அடிவருடிகளுக்கும் சேவகம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த பம்மாத்துவாசு, இயக்கத் தோழர்களைப் பற்றி சிந்தித்ததில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்பாணும் வாழைப்பழமும் காலைச் சாப்பாடாகவும், மதியம் மீன் அல்லது இறைச்சி உணவாகவும் இருந்தது. இதில் வாசு வந்ததும் கழகத்தில் பணம் தட்டுப்பாடு என்று கூறிக் கொண்டு பாண், வாழைப்பழம் என்ற உணவை நிறுத்தினான். ஆனால் தனது ஆடம்பர வாழ்க்கை செலவுகள், மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களை அவன் நிறுத்தவில்லை .

வாசுவைப் போன்று தலைமையில் இருந்தோர் ஒவ்வொருவரும் ஊர்சுற்ற மோட்டார் சைக்கிள், உண்பதற்கு ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் என்று சொகுசு வாழ்க்கையையே வாழ்ந்தனர். இதைப்பார்த்த தோழர்கள் பலர் தமக்குள்ளேயே திட்டித் தீர்த்தனர். இவ்வாறான ஒருவர் அரசியல் பொறுப்பில் இருந்தால் என்ன நடக்கும்? மார்க்சியம் என்ற சொல்லுக்கு அப்பால் ஒருவரும் முன்னேறவில்லை. அனைத்து முகாம் பொறுப்பாளராக இருந்த பம்மாத்துவாசு அரசியல் பொறுப்பாளராக பதவியேற்றப்பட்டது, எம்மிடையே பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதை எமக்குள் கதைத்தபடிஇருந்தோம். அக்காலத்தில் வாகன ஒட்டுனராக இருந்த வெள்ளை அண்ணர் முகாமிற்கு பொருட்களை கொண்டு வரும் போது, முகாம் தோழர்கள் ஊடாக எமக்கு சில தகவல்களைத் தருவார். அவ்வாறு தரப்பட்ட தகவல்கள் தான் சுழிபுரம் படுகொலை, மற்றும் சந்ததியார் கைது போன்றவை. எம்மை சந்திக்க வருபவர்கள், வாமதேவன் உட்பட எம்முடன் சரளமாக கதைக்க ஆரம்பித்தனர். ஆனால் குறிப்பிட்ட காலத்தின் பின் பாபுஜி வருவதில்லை. அதன் பிற்பாடு அவரைஇந்தியாவில் நான் சந்திக்கவில்லை. ஒரு

முறை எம்மை அரசியல் பொறுப்பாளர் பம்மாத்து வாசு சந்திக்க வந்த போது, எமக்கு வாசிக்க புத்தகம் தேவை என்றோம். அதற்கு சிரித்தபடி ஆம்என்று கூறிச் சென்றவர், வேண்டுமென்றே ஒரு சில மார்க்சிச புத்தகங்களை அனுப்பி வைத்தார்.

எமக்கோ பயம். முகாம்களில் அவைகள் படிக்கத் தடையாக இருக்கும் போது, எமக்கு மட்டும்ஏன் என்ற கேள்வியுடன் அதை சிறிது காலம் தொட்டுப் பார்க்காமல் இருந்தோம். பின்னர் முகாமில் தோழர்களால் பரபரப்பாக வாசிக்கப்பட்ட புத்தகங்களை, அவர்கள் ஊடாக பெற்றுக்கொண்டோம். அப்போது தான் எமக்கு தாய். வீரம் விளைந்தது பகுதி 1–2, அதிகாலையின் அமைதி, போன்ற புத்தகங்கள் கிடைக்கப்பெற்றன. எம்மிடையே ஒருவர் அதை வாசிக்க மற்றவர்கள்அதைக் கேட்டுக் கொண்டிருப்போம். இவ்வாறு பல வாரங்கள் எம்மைக் கடந்து போனது. அக்காலகட்டத்தில் படைத்துறைச் செயலதிபர் கண்ணனும் (சோதீஸ்வரன்), காந்தனும் எம்மை சந்திக்கவந்து போவார்கள். படைத்துறைச் செயலதிபராக கண்ணன் (சோதீஸ்வரன்) இருந்தாலும், ஆயுதங்களுக்கு பொறுப்பாக இருந்தது காந்தன் என்றே அறிந்தோம். இவர்கள் இருவரும் எம்மை சந்தித்து சாதாரணமாக கதைத்து விட்டு செல்வார்கள். காந்தன் என்ற ஜான் மாஸ்டர் கண்ணனுடன் (சோதீஸ்வரன்) மாத்திரம் அல்ல உமாமகேஸ்வரன் மற்றும் செந்தில் போன்றோருடனும் முகாம்களுக்கு விஜயம் செய்வார். படைத்துறை நடவடிக்கைகளை கையாள்வதற்கும், அதை பார்ப்பதற்கும் இவர் அடிக்கடி முகாம்களிற்கு விஜயம் செய்துள்ளார்.

காந்தன் என்ற ஜான் மாஸ்டர் விஜயம் செய்த முகாம்களில் "பீ" முகாம் மற்றும் நாம் இருந்த முகாம் போன்றவற்றிற்கு அப்பால், கொமாண்டோஸ் முகாம் போன்றவற்றிற்கும் விஜயம் செய்துள்ளார். இதில் "பீ" முகாமில் இருந்த "நாலாம் மாடியையும்", நாம் இருந்த முகாமில் எமது சிறையையும் பார்த்த காந்தன் என்ற ஜான் மாஸ்டர், இவைகள் பற்றி எந்த விதக் கேள்வியையும் எழுப்பவில்லை என்பதே இன்றுவரை எனக்குத் தெரிந்த தகவல். காந்தன் என்ற ஜான் மாஸ்டர் தலைமையுடன்

அதன் அதிகார வெறியுடன் இணைந்து செயற்பட்ட ஒருவராகவே இருந்து வந்தார் .

இக்கால கட்டத்தில் நோபேட்டை தளத்தில் இருந்து பின்தளத்திற்கு அழைக்கப்படுவதற்கான முயற்சிகள் நடந்தேறின. இதை அறிந்த சந்ததியார், நோபட்டை பின் தளத்திற்கு வரவேண்டாம்என்று ஒரு கடிதம் எழுதி என்.எல். எவ்.ரீ தோழர்களிடம் கொடுத்து விட்டிருந்தார். ஆனால் என்.எல்.எவ்.ரீ யினருக்கு இவர் கேசவன் என்ற பெயரில் அறிமுகமாகி இருந்ததால், நோபேட் என்பவர் யார் என அவர்கள் அறிய குறிப்பிட்ட காலம் எடுத்தது. இதற்குள் நோபோட் பின்தளம் வரவழைக்கப்பட்டார். நோபோட்டுடன் பல விவாதங்கள் நடந்தேறின. நோபோட்டை எந்த நேரமும்உளவாளிகள் சுற்றிய வண்ணமே இருந்தார்கள். பின் அவரை தளத்திற்கு பொறுப்பாளராக அனுப்பிவைத்தனர்.

ஒருநாள் அமைப்பில் இருந்த மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் தப்பி ஓடிவிட்டார் என்ற செய்தியை அறிந்ததும், முகாம்களில் உள்ளவர்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். அவ்வாறுதப்பித்தவர் காந்தன் என்ற ரகுமான் ஜான் என்றும், அவர் கழகத்தின் ஆயுதங்களுடன் தலை மறைவாகியதுடன், அதற்கு முன் கண்ணனை(சோதீஸ்வரன்) கொலை செய்யவும் முயற்சித்தார்என்றும் பொய்ப் பிரச்சாரங்களை கழக முகாம்களுக்கள் கட்டவிழ்த்து விட்டனர். இதனால் பல தோழர்கள் ரகுமான் ஜானை கடுமையாக விமர்சித்தனர். அவர் தப்பியோடுவதற்கு ஒருகிழமைக்கு முன்னர் எம்மைச் சந்தித்து கதைத்திருந்தார். இது எல்லோருக்கும் தெரியும். அதனால் அவர் தப்பியோடியதற்கும் எமக்கும் சம்பந்தம் உண்டு எனக்கருதி, கண்ணன்(சோதீஸ்வரன்), வாமதேவன், பம்மாத்து வாசு போன்றோர் வந்து எம்மை தனித்தனியாக வைத்து விசாரித்தனர். அப்போது மீண்டும் அடித்தனர். சித்திரவதை செய்தனர். தம்முடன் இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் இருந்தவரும், இயக்க இரகசியங்களை அறிந்தவருமான ரகுமான் ஜான் –காந்தன் தப்பித்ததென்பது ஆச்சரியத்தை அவர்களுக்குகொடுத்திருந்தது என்பதனை, விசாரணையின் போது என்னாற் கவனிக்க கூடியதாகவிருந்தது. அவரைக் கண்ட இடத்தில் சுடும் அளவிற்கு ஆத்திரத்தில் அன்று

கழகம் இருந்தது. ரகுமான் ஜான் ஏன், எதற்காகத் தப்பினார் என்று எவருக்கும் தெரியவில்லை. கழகத்தின் எல்லா அராஜகசம்பவங்களிலும் ஒன்றாக நின்ற காந்தன் என்ற ரகுமான் ஜான் எதற்காக திடீர் என ஒழித்து ஓடினார் என்பது எல்லோருக்கும் புரியாத புதிரா கவே இருந்தது. அவர் தப்பிச் செல்லும் போதுகழகத்தின் எந்த ஒரு உடமை களையும் தன்னுடன் எடுத்துச் சென்றிருக்கவில்லை. ரகுமான் ஜான் தப்பியதும், இயக்கத்தின் பல நடவடிக்கைகள் இரகசிய முறைக்கு மாற்றப்பட்டன. புதியசெயற்குழுவையும் மத்திய குழுவையும் உருவாக்கத் தொடங்கினர். தமது நம்பிக்கைக்கு உரியவர் தப்பித்ததால் மற்றவர்களை நம்பத் தயாராக எவரும் இருக்கவில்லை.

கழகம் எப்போதும் தனிமனித வழிபாட்டிலேயே இயங்கிவந்தது. சிலர் மார்க்சியம், தேசியம், இன முரண்பாடு, சர்வதேசியம் போன்ற சொற்பதங்களைப் பாவித்தும் தனிமனித வழிபாட்டைச்செய்து வந்தனர். இத் தனிமனித வழிபாட்டுடன் பலர் கருத்து ரீதியாக முரண்படவில்லை. பின்தளத்தில் தான் அப்படி என்றால், தளத்திலும் அதே நிலைதான். பின்தளத்தில் நடக்கும்விடையங்களை மறுத்து பிரச்சாரம் செய்து இயங்குவது, தளத்தில் இருந்தவர்களின் வேலையாக இருந்தது. இதனால் சிறு சோர்வு நிலை தளத்தில் காணப்பட்டது. ஆனால் ஆட்சேர்ப்பில்மட்டும் அவர்கள் சோர்ந்து போகவில்லை. தொடர்ந்தும் ஆட்களைத் திரட்டிப் பயிற்சிக்கு என அனுப்பி வந்தனர். சுழிபுரப் படுகொலை, அதன் பின் மணியம் தோட்டப் படுகொலை இயக்கத்திற்குவந்த பெண்கள் கொலை, மேலும் கொலைகளும் அடாவடித்தனங்களும் நடந்த போதும் கூட, இன்று புலம்பெயந்து ஜனநாயகம் மற்றும் புரட்சி பற்றிப் பேசும் பலர் அன்று இயக்கத்துக்குள்ளும் வெளியிலும் அவற்றினை மூடிமறைத்தனர். பொய்களை கீழ் மட்டத்தினருக்குக் கூறி பெரியய்யாவிற்கு விசுவாசிளாக இருந்தனர்.

பின்தளத்தில் ஜனநாயகம் மறுக்கப்பட்டு அராஜகம் தலைவிரித்தாடியது. தளத்தில் இருந்து அரசியல் வேலைகளில் ஈடுபட்டவர்களும், பெரியய்யாவிற்கும் அவனது குண்டர் கூட்டத்திற்கும்தாமும் ஒன்றும்

சளைத்தவர்கள் அல்லர் என்னும் நிலையிலேயே இருந்தனர். உதாரணமாக கொட்டடியை சேர்ந்த நான்கு இளைஞர்களை கழகத்தினர் கொள்ளைகாரர்கள் என கைது செய்தனர். உண்மையில் அவர்கள் கொள்ளைக்காரர்களா என்று பார்த்தால் இல்லை. சிறுதிருட்டுகளை செய்யும் திருடர்கள். கொட்டடியைச் சேர்ந்தவர்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர். யாழ்ப்பாண சமூகத்தால் ஒதுக்கப்பட்வர்கள். வறுமையை வாழ்வாக சாதியம் திணித்து இருந்தது. யாழ் சைவவேளாள ஆதிக்கத்தில் ஒரு சிந்தனையாக இருப்பது எங்கு எந்தத் திருட்டு நடந்தாலும் அதை தாழ்த்தப்பட்ட சமூகத்தினரோ அல்லது பொருளாதார வசதி குறைந்தவர்களோசெய்திருப்பார்கள் என்று கூறுவது சாதிய ஆதிக்க வழக்கமாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே பல இயக்கங்களும் இயங்கின. இதற்கு கழகம் மட்டும் விதிவிலக்காக இருக்கவில்லை.

யாழ்ப்பாண நகரத்தில் எங்கு எது நடந்தாலும் அது தாழ்த்தப்பட்டவர்களான இந்த நால்வரும் தான் செய்திருப்பார்கள் என்ற எண்ணமும் அபிப்பிராயமும் இருந்தது. இந்த அபிப்பிராயத்தின்அடிப்படையில் கழகத்தினரால் இந்த நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் நாலுபேரும், நான்கு வெவ்வேறு இடங்களில் வைத்து கொலைசெய்யப்பட்டனர். வைத்தீஸ்வரா சந்தி, ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்னால், வின்சர் தியேட்டருக்கு முன்னால், மற்றும் யாழ் பஸ்நிலையச் சந்திகளில் சமூக விரோதிகள் என்ற பட்டத்துடன் சுட்டுமின்கம்பங்களில் கட்டப்பட்டனர். இதை அறிந்த உறவினரும், அவர்களது கிராமமும் கொதித்து எழுந்தது. இதை மூடி மறைப்பதற்காக கழகத்தினர் அவர்கள் சமூகவிரோதிகள் என்ற பொய்ப்பிரச்சாரத்தை செய்ததுடன், பொய்யான ஆதாரங்களையும் முன்வைத்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டனர்.

இந் நிலையிலேயே நோபேட்டும், காந்தன் என்ற ரகுமான் ஜானுடன் சேர்ந்தவர்களும் பெரியய்யாவின் ஆட்களின் நெருக்குவாரங்களுக்கும், சந்தேகங்களுக்கும் ஆளான போது, கழகத்தைவிட்டுத் தப்பி என்.எல். எவ்.ரியின் துணையுடன் தலைமறைவானவர்கள். தமது உயிருக்கு பிரச்சனை வந்த பின்பேயே, ரகுமான்ஜான்,

*கேசவன் என்றநோபர்ட் போன்றவர்கள் தலைமறைவாகி னார்கள். இவர்கள் பிற்காலத்தில், தமது வெளியேற்றம் அரசியல் ரீதியானது எனக் கூறினாலும், உண்மை அதுவல்ல காரணம் , இவர்கள் புளொட் இல் இருக்கும் வரை எதுவித கருத்தியல் சார்ந்த அரசியல் – நடைமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அப்படி முன்னெடுத்திருந்து இவர்கள் பிற்காலத்தில் கூறியது போல இவர்களின் அரசியலும் சரியானதக்காக இருந்திருந்தால், சில வேளைகளில் பல உட்கட்சிப் படுகொலைகளைத் தடுத்திருக்க முடியும். தேசிய விடுதலைப் போராட்டத்தை திசை மாற்றி இருக்க முடியும். ஆனால் , அப்படி நடக்கவில்லை. 2009 பின் அரசியல் செய்ய மறுபடியும் முயன்ற ரகுமான் ஜான் போன்றவர்கள், தாம் கழகத்துடன் கருத்து முரண்பாட்டில் தான் கழகத்தை விட்டுப் பிரிந்தோம் என்று கூறுவது சந்தர்ப்பவாதமே. இவர்கள் பிரிந்து செல்லவில்லைமாறாக ஒழித்து ஓடியவர்கள் என்பதே என் கருத்து .*

# 16

## தங்கள் கடந்த காலத்தை

## சுயவிமர்சனம் செய்யாத தீப்பொறி...

காந்தன் என்ற ரகுமான் ஜான் மற்றும் கேசவன் எனப்பட்ட நோபோட் மற்றும் இவர்களுடன் இருந்தவர்கள், இந்தியாவில் புளட்டின் கொலைகார தலைமைக்கு அஞ்சி கூட்டாக ஒழித்து ஓடி, என்.எல்.எவ்.ரீ. யிடம் அடைக்கலம் பெற்றனர். நோபேட்டின் இந்திய வருகையினாலேயே இந்த தலைமறைவு சம்பவம் ஏற்பட்டது. இல்லாவிடின் அது நடந்தேறியிருக்காது.

இங்கு ரகுமான் ஜான் ஏன் எதற்காக நோபெட்டுடன் சேர்ந்து ஓடினார் என்பதற்கு அப்பால், முகாமிற்கு பயிற்சி எடுக்க வருபவர்களில் ஒரு சிலர் பயிற்சியின் கடினத்தாலும், அவர்கள் எதிர்பார்த்து வந்த வகை யில் பயிற்சி முகாம் இல்லாததாலும் தப்பி ஓடினார்கள். அவ்வாறு ஓடியவர்களில் பலர் பிடிபட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். மீண்டும் கட்டாயமாக பயிற்சியில் இணைக்கப்பட்டார்கள். ஒரு சிலர் சித்திரவதையின் போது மரணமும் எய்தினர். ரகுமான் ஜான் மற்றும் நோபேட் தலைமையிலான தப்பியோடுதல்களின்பின், எவர் தப்பி ஓடினாலும் பிடிபட்டார்களாயின் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. பின்தளத்தில் கழகத்தை விட்டு ரகுமான் ஜான் மற்றும் நோபேட் தலைமையில் தப்பியோரை என்.எல்.எவ்.ரீ. யினர் தளத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர்களும் அங்கு ஏற்கனவே கழகத்திற்காக வேலை செய்தவர்களும் இணைந்து தீப்பொறி என்ற அமைப்பை உருவாக்கினர். தலைமறைவாகவும் இயங்கத் தொடங்கினார்கள்.

இவர்களது தலைமறைவுக் காலங்களில் இவர்களுக்கான பாதுகாப்பு முதல் அனைத்து உதவிகளையும் செய்தவர்கள் முன்பு புளட்டில் வேலை செய்த தோழர்களே. குறிப்பாக தளத்தில் இயங்கிய பல தோழர்கள் புளட்டின் செயற்பாடுகள் மீது அதிருப்தி கொண்டு ஒதுங்கி இருந்தனர். அவர்களில் பலர் தீப்பொறியினருக்கு பக்கபலமாக செயற்பட்டனர். அக் காலங்களில் பலர் கழகத்தில் இயங்கிய வண்ணமே, தீப்பொறியினருக்கு தமது ஆதரவினை வெளிக்காட்டினர். பின்னர் தீப்பொறியுடன் இணைந்தனர். இரகுமான் ஜான் மற்றும் நோபேட் பின்தளத்தில் தப்பியிருந்த காலத்தில்தான், புதியதோர் உலகம் என்ற புத்தகம் நோபேட்டினால் கேசவன் என்ன்ற பெயரில் வெளியிடப்பட்டது. அக் காலத்தில் சந்ததியார் ஒதுங்கி இருந்தார். அவர் தனது அரசியற் செயற்பாடாக என். எல்.எவ்.ரீ. யுடன் பேசியபடி இருந்தார். தனது சுயவிமர்சனத்துடன் என்.எல். எவ்.ரீயில் இணைந்து வேலை செய்வது என்ற நிலைக்கு வந்தடைந்திருந்தார்.

"தீப்பொறி" புதியதோர் உலகம் என்ற அரசியல் நாவல், தீப்பொறி பத்திரிகை–01 போன்றவற்றினை வெளியிட்டு ஒரு அமைப்பாகத் தன்னை பிரபலப்படுத்தியது. புதியதோர் உலகம் நாவலின் மூலமாக புளட்டில் நடந்த பல சம்பவங்கள் அப்பலத்துக்கு வந்தது. அதே போன்று தீப்பொறி பத்திரிகையிலும் புளட்டின் உட்படுகொலைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டது. இது வரவேற்கத்தக்க விடையமாக இருந்த போதும், இவர்களின் அரசியற் செயற்பாடும் , கோழைத்தனமான தப்பியோட்டமும் பலரின் உயிர்களைக் புளட் கொலைக் கும்பல் பறிக்கவும் ஏதுவாக இருந்ததென்பதுவும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும். உதாரணமாக, சந்ததியாரை புளொட் தலைமை கொலை செய்வதற்கு இரகுமான் ஜான் மற்றும் நோபேட்டின் தப்பியோடுதலும், அதன் பின்னான இவர்களின் அரசியற் செயற்பாடுகளும் முக்கிய உந்துகோலாக காரணியாக அமைந்ததென்பது எனது கருத்தாகும். புளட்டின் தலைமையிலிருந்த நோபோட் மற்றும் ரகுமான் ஜான் போன்றவர்கள் தப்பிச் சென்று அமைப்பின் பல விடையங்களை (உட்படு கொலைகளை) வெளிக்கொண்டு வந்திருந்தனர். இதிலும் பார்க்க அதிகமான

விடையங்களைத் தெரிந்த சந்ததியாரை உயிருடன் விட்டு வைத்தால் தமக்கு பெரும் ஆபத்தினை விளைவிக்கும் என்ற நிலையிலேயே அவரை கொலை செய்வது என்ற திட்டத்தை தீவிரப்படுத்தினார்கள். இதன் அடிப்படையிலேயே சந்ததியார் கடத்தப்பட்டு கண்கள் தோண்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். இவரின் கொலையில் சங்கிலி, இடிஅமீன், வாமதேவன் போன்ற பலர் சம்மந்தப்பட்டனர்.

மேலே குறிப்பிட்டபடி தீப்பொறியினருக்கு உதவியாகவும் இருந்தவர்கள் என்.எல்.எவ்.ரீ. யினரே. அவர்கள் தான் பண உதவி உட்பட பலவற்றை உதவிகளை தீப்பொறியினருக்கு செய்து வந்தனர். ஆனாலும் இங்கு ஒரு விடையத்தை முக்கியம் பார்க்கவேண்டும். அதாவது, தீப்பொறியினர் தளத்திற்கு வந்ததும், அவர்களுக்கு தமது உயிரைப் பணயம் வைத்து, என்.எல்.எவ்.ரீ யை விட அதிக உதவிகளைச் செய்தவர்கள் கழகத்திற்குள் வேலை செய்தவர்களே. அவர்களைப் போன்று பல நல்ல அரசியற்சக்திகள், கழகத்தினுள் உட்கட்சி போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது, அவர்களை அணுகாது அவர் களை நோக்கி வசைபாடித் தூற்றினார்கள் தீப்பொறி "தமிழீழ விடுதலைப் போரா ளிகள்" என்ற தீப்பொறியினரின் பிரசுரத்தில் சிவராம் மற்றும் அசோக் போன்றவர்களின் கூட்டுச் சதியால் கொல்லப்பட்ட செல்வன், மற்றும் அகிலனுக்கு அஞ்சலி செலுத்திய அதே வேளை யில், உட்கட்சி போராட்டத்தை நடத்தியவர்களையும் கொச்சைப்படுத்தினார்கள்.

ரகுமான் ஜான் மற்றும் நோபேட் தலைமை யில் இருந்தவர்கள் புளட்டின் அரசியலுடன் சேர்ந்து செயற்பட்டவர்கள். அவர்களுக்கு முரண்பாடு என்பது, அரசியல் ரீதியானதாக இருக்கவில்லை. ரகுமான் ஜான், நோபேட் உட்பட அவர்களுடன் தப்பியோடியவர்கள் எவரும், எந்த விதமான அரசியல் முரண்பாடுகளையும் முன்வைத்துப் புளொட்டுக்குள் போராடாடியதாக எந்த வித வரலாறும் இன்றுவரை பதியப்படவில்லை. ரகுமான்ஜான், நோபேட் மற்றும் ஒருசிலரின் வெளியேற்றம் அரசியல் அடிப்படையைக் கொண்டிருந்தது எனக் கூறப்பட்டாலும், பெரும்பான்மையாக தங்கள் இருப்புச் சார்ந்த காரணங்

களிற்காகவே தப்பித்தவர்கள். காதல் பிரச்சனை, குடும்பப் பொருளாதாரம், கடுமையான பயிற்சி, ஹீரோயிசம், பதவி ஆசை, தனிப்பட்ட முரண்பாடுகள் என இவர்களின் தனிப்பட்ட சீவியமே இவர்கள் ஓடக் காரணம். ஆனால், இன்றுவரை "தீப்பொறியை" அரசியற் தவறுகளே விடாத புனிதர்களாகவும், விமர்சிக் கவே முடியாத அதி உத்தமர்களாகவும், மாபெரும் மார்க்சிச – லெனினியவாதிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கும் புளட்டுக்கும் எந்த வகையான அரசியல் வேறுபாடு இருந்தது என்பதை இப்போதாவது இவர்களில் எவராலாவது கூற முடியுமா? ஒட்டுமொத்தமான தமிழ் தேசிய விடுதலைப் போராட்டமே சீரழிந்த நிலையில் இருந்தபோது, இவர்கள் தப்பிய பின் புளட் அமைப்பை மாத்திரம் விமர்சித்தபடி பத்திரிகையைக் கொண்டு வந்தார்கள். தீப்பொறியின் வெளியீடுகளை பெரும்பாலும் விநியோகம் செய்தவர்கள் புலி அமைப்பினரே. புளட் அமைப்பை உடைக்கவும், அதன் செயற்பாட்டை மழுங்கடிக்கவும், புலிகளால் பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போது, தீப்பொறியினரின் பத்திரிகையும் புதியதோர் உலகம் நாவலும் அவர்களுக்கு துணையாக இருந்தது. மார்க்சிச–லெனினியக் கோட்பாடு பற்றிக் கதைத்த தீப்பொறியால் மற்றைய இயக்கங்கள் பற்றிச் சிறு மூச்சுக் கூடத் விடப்படவில்லை. இதன் அர்த்தமாகப்பட்டது, தீப்பொறி உட்பட்ட மற்றைய அனைத்து இயக்கங்களும், தீப்பொறி கதைத்த மார்க்சிச–லெனினியக் கோட்பாட்டுக்கு விசுவாசமாக இயங்கின என்பதா? அல்லது தீப்பொறி யினரின், எதிரியின் எதிரி நண்பன் என்ற கோட்பாடா காரணம்?

இவ்வாறு எந்த உட்கட்சிப் போராட்டத்தையும் நடத்தாது ஓடி ஒழித்தவர்கள் தான் பிற்காலத்தில் தம்மை ஒரு அமைப்பாக பிரகடனப்படுத்தி செயற்பட ஆரம்பித்தனர். இவர்கள் புளட்டின் அராஜகத்தை வெளிக்கொண்டு வந்தவர்கள் என்பதால் சில முற்போக்கு சக்திகளும் இவர்களுடன் இணைந்து செயற்பட்டனர். அப்போதும் கூட நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல், தமது இருப்பிற்கு ஆபத்து ஏற்படுகின்றது என்று அறிந்ததும்,

படிப்பகம்

கீழ்மட்ட தோழர்களை அழைத்து உங்கள் பாதுகாப்பிற்கு நீங்களே பொறுப்பு என்று கூறிவிட்டு தீப்பொறி அமைப்பைக் கலைப்பதாக பகிரங்கமாக அறிக்கை விட்டனர். ஆனால், மறைமுகமாக தமது சுய பாதுகாப்பையும் அரசியற் பலப்படுத்தையும் தங்க வைக்க, கொழும்புக்குச் சென்று பதுங்கி இருந்தபடி ஒரு இரகசியக் குழுவாக செயற்படலானார்கள். இக்காலத்தில் தான் நோபோட் புலிகளால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவர்கள் தனிபட்ட உரையாடல்களின் போது, நோபேட்டின் கைது தொடர்பாக தரும் விளக்கம் என்னவெனில் தமது ஆயுதங்களையும், என்.எல்.எவ்.ரீ. யினரால் கொடுக்கப்பட்ட பணத்தையும் யாழிலிருந்து மீட்டு மறுபடியும் தீப்பொறியை இயங்க வைக்க வேண்டுமென்ற விவாதம் தமக்குள் நடத்தப்பட்டதாகவும், அவ்விவாதத்தின் முடிவில், பெரும்பான்மையின் விருப்பத்துக்கு இணங்க, யாராவது ஒருவர் மீண்டும் யாழ் செல்வது என்று முடிவுக்கு வந்ததாகக் கூறுகின்றனர். அப்போது அவ்வேலையைச் செய்து முடிக்க நோபேட் தானாக முன்வந்து சென்றார் என்றும், அவருடன் ஒரு பெண்ணும் சென்றதாகக் கூறுகின்றனர். யாழ் சென்ற இருவரும், வெவ்வேறு இடங்களில் தங்க வைத்ததாகவும், நோபேட் தங்கிய தீப்பொறியினரின் ஆதரவாளர் வீட்டில் ஒருவர் புலி உறுப்பினர் என்பதால், நோபேட் அங்கு வந்து நிற்பதை அந்தப் புலி உறுப்பினர், புலிகளுக்கு தகவல் கொடுத்ததால் தான் கைது செய்யப்பட்டு புலிகளால் படுகொலை செய்யப்பட்டார் என்றும் கூறுகின்றனர்.

இது போல நோபேர்டின் கைது என்பது தற்செயலானது என்று இவர்கள் பல விதமான கதைகளைத் தனிபட்ட முறையில் கூறிவருகின்ற போதும், இன்றுவரை பகிரங்கமாக உண்மையாக என்ன நடந்தது என்ற தகவலை நேர்மையாக முன்வைக்கது மௌனமாக இருப்பது பல கேள்விகளை கேட்ட இடம் கொடுக்கிறது. நான் முன்பு கூறியது போன்று இவர்கள் தப்பி ஓடும் வரை முகாமில் இருந்து தப்பியவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படவில்லை. மாறாக இவர்களின் தப்பி ஓட்டத்தின்பின் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவ்வாறு தப்பி ஓட முயற்சித்து

பிடிபட்டு கொலை செய்யப்பட்டவர்களில் எனக்கு தெரிந்தவர்கள் ஜிம்மி, கனடா போன்றவர்கள். இவ்வாறு தீப்பொறியினர் தம்மை ஒரு அமைப்பாக வெளிக்காட்டிய போதும் அவர்களுக்கு பல உதவிகளை செய்தது என்.எல். எவ்.ரீ யினரே. அன்றைய காலத்தில், குறை நிறைகளுக்கு அப்பால் , இடது நிலையில் இருந்த இந்த அமைப்புடன் தான் பல இயக்கங்களில் இருந்து ஒதுங்கியவர்களும், பிரிந்தவர்களும் சேர்ந்து இயங்கினார்கள். ஈ.பி.ஆர்.எல். எவ் இன்தாஸ் செழியன் குருப் என்.எல்.எவ்.ரீயுடன் இணைந்து இயங்கினார்கள்.

ஆனால் தீப்பொறியினர் அவர்களிடம் பணம், ஆயுதம் போன்ற பல உதவிகளைப் பெற்ற போதும், அவர்களுடன் சேர்ந்து இயங்கவோ அன்றி ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணையவோ தயாராக இருந்திருக்கவில்லை. இதற்கு காரணமாக நான் கருதுவது என்.எல்.எவ்.ரீ. யினர் இவர்களிடம் சுயவிமர்சனத்தை எதிர்பார்த்தனர். அதை தீபொறியின் தலைமையால் நேர்மையான முறையில் முன்வைக்க சாத்தியமற்றுப் போனது. அத்துடன் ரகுமான் ஜான் போன்றவர்களின் தலைமைத்துவ ஆசையும், தீப்பொறியை சுயாதீனமாக வைத்திருக்க வேண்டிய காரணிகளில் ஒன்றாகும்.

படுபிற்போக்குத்தனமான சமூக விரோதிகள், அரசி யல் பித்தலாட்டக்காரர்கள், கொலைகாரர்கள் புலியெதிர்ப்பு அரசியல் செய்ததினால் இன்று, நமது தமிழ் சமூகத்தில் ஜனநாயகசக்திகளாகவும், மக்களின் இலக்கியக் குரல்களாகவும், தேசியவாதிகளாகவும் வலம் வருகின்றனர். புலிகளின் மக்கள் விரோத அரசியல் ஒப்பீட்டளவில் மிகவும் கொடியதாக இருந்ததனால், இவர்களின் சதி அரசியலும், மக்கள் விரோத அரசியலும் மறைக்கப்பட்டுவிட்டது. இவ்வாறன இன்றைய பொதுப்போக்கிற்கு வழிவகுத்தது முன்னோடி தீப்பொறியே!

# 17

## உமாமகேஸ்வரன் விசுவாசிகள் போன்று நடிக்கக் கோரினர், நடித்தோம்...

அராஜகத்தின் மொத்த உருவமாக விளங்கிய புளட் தனது போலி "மார்க்சிய" சித்தாந்த வாய்ச்சவாடால்கள் ஊடாகப் , பல படுகொலைகளுக்கு நியாயம் கற்பித்தது. அது நியாயம் கற்பித்த போதும் தளத்தில் வேலை செய்த பல தோழர்கள் ஒதுங்கினர். அவர்கள் ஒதுங்கிய போதும் விடுதலைப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கவில்லை. ஆரம்பத்தில் புளட்டில் வேலை செய்தவர்கள் ஒதுங்கியது சுழிபுரம் படுகொலையுடன் தான். இவர்கள் ஒதுங்கி சும்மா இருக்கவில்லை. மாறாக புளட்டின் பின்தளத்தில் நடந்த உட்படுகொலைகளை மையமாக வைத்து பலர் தம்மால் முடிந்த அளவிற்கு புளட்டுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அவ்வாறு பிரச்சாரத்தில் ஈடுபட்டதால் பலரை துப்பாக்கிக் கரங்கள் துரத்தின. இந்த வகையில் எனக்கு நெருக்கமான தோழர் சுகந்தன், அவருடன் வேலை செய்த பரந்தாமன், சுகன் போன்றோரோடு பல்கலைக்கழக மட்டத்தில் விமலேஸ்வரன், தர்மலிங்கம், நந்தா, வனிதா,

கலா, ஹப்பி போன்றோர்களும் ஜ.பி, பிரசாத், ஜீவன், கவிராஜ் போன்ற ரெசோ மாணவர் மற்றும் மக்கள் அமைப்பினரும் புளட்டுக்குள் நடந்த அஜாகர அரசியல் மற்றும் கொலைகளுக்கு முன்னெடுத்தவர்கள். இவ்வாறு புளட்டுக்குள் உட்கட்சி அரசியல் போராட்டம் தளத்தில் நடந்து கொண்டிருந்தது. பின்தளத்தில் பயிற்சிகளின் உக்கிரம் அதிகரித்தது. இதன் வெளிப்பாடாக புதிய பயிற்சி முகாங்களும், புதிய வியூகங்கள் அடங்கிய இராணுவ வகுப்புகளும் நடைபெறத் தொடங்கின. மாணிக்கதாசனால் ஹய் கொமாண்டஸ் என்றும், சேகர் மாஸ்ரரால் கொமாண்டோ என்றும், சுனில் என்பவரால் தடபாடா என்றும் பயிற்சி முகாமும் உருவாக்கப்பட்டன. சாதாரண மான பயிற்சி முடிந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவற்றிற்கு அனுப்பப்பட்டனர்.

எமது உட்கட்சிப் போராட்டத்தின் பின்பு சாதாரண பயிற்சி முகாம்களில் அரசியல் வகுப்புகள் நிறுத்தப்பட்டு, இராணுவ வகுப்புகள் தேனி முகாமில் பயிற்சி பெற்றவர்களால் நடத்தப்பட்டது. சில மதங்களின் பின் தேனி முகாமில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை நிறுத்தி விட்டு புளட்டின் மத்திய குழுவில் இருந்த இந்திய உளவுப்படை ரோவின் பிரதிநிதியான சேகர் என்பவரால், இராணுவ வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்த இராணுவ வகுப்பிற்காக ஒரு கை நூலும் தயாரிக்கப்பட்டது. நான் அறிந்தவரையில் இதுதான் தமிழில் வெளிவந்த முதல் இராணுவ யுத்திகள் அடங்கிய கைநூல். இதை தேனி பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற தயாமயூரன், மணி, அன்ரனி (திருமலை மாவட்டத்தை சேர்ந்தவர்) போன்றவர்கள் தயாரிக்க, அதற்கு மேற்பார்வையாளராக இருந்தவர் இந்த சேகர் மாஸ்ரர் என்ற "றோ" உளவாளி.

இக்காலங்களில் நாம் தொடர்ந்தும் சிறையினுள்ளேயே இருந்தோம். எம்மை வந்து சந்திப்பவர்களின் அளவும் குறைந்தது. முகாமில் இருந்த தோழர்கள் எம்முடன் சரளமாக பழகத்தொடங்கினர். திடீர் என ஒருநாள் நாம் இருந்த கூடாரத்தை விட்டு எம்மை வெளியில் எடுத்து, முகாமில் உள்ள தோழர்களுடன் இருக்கும்படி வாமதேவன், செந்தில் போன்றோரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் நாமும் அவர்களுடன் சாதாரணமாக இருந்தோம். எம்மால் பயிற்சி எடுக்க முடியாததால், நாம் முகாமின் உள் இருக்க மற்றைய தோழர்கள் பயிற்சி எடுக்கச் சென்றனர். அப்போது எமது முகாமை நோக்கி ஜீப் வண்டியில் உமாமகேஸ்வரன், கண்ணன் உட்படப் பலர் வந்தனர். வந்தவர்கள் முகாமை சுற்றிப்பார்த்துவிட்டு முகாமில் உள்ள தோழர்கள் (நாம் உட்பட) அனைவருக்கும் ஒரு கூட்டத்தை நடத்திவிட்டு மீண்டும் புறப்பட்டனர். அவர்கள் சற்றுத் தூரம் சென்றிருப்பார்கள், முகாம் பொறுப்பாளர் வளவன் எம்மை அழைத்து மீண்டும் எமது கூடாரத்துக்குள் அடைத்தார். எமக்கு ஒன்றும் புரியவிலை. ஏன் இந்த நாடகம் என்று. மீண்டும் கூடாரத்தினுள் இருந்தபடி புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினோம்.

இக்காலங்களில் எம்மிடையேயே சில சிறு சிறு முரண்பாடுகள் வரும். இதில் ஒன்று என்னை மையப்படுத்தியதாக இருந்தது. அதாவது நான் கதைக்கும்போது டா போட்டுக் கதைப்பேன். உதாரணத்திற்கு என்னடாப்பா என்று கதைப்பதால், எம்மை சந்திக்க வருபவர்களுடனும் அதே போன்று கதைப்பேன். இதனால் சந்திக்க வருபவர்களை நான் மரியாதை இல்லாமல் பேசுகின்றேன் என்று நினைத்து எம்மை தாக்குவார்கள். ஏற்கனவே வாமதேவனுடன் கதைக்கும்போது நான் அவரை மரியாதை குறைவாகக் கதைக்கின்றேன் என்று கூறி தாக்கிய சம்பவங்களும் உண்டு. இவ்வாறு நான் மரியாதையை இல்லாமல் கதைப்பதால் அனைவருக்கும் அடி விழும். இதனால் தோழர்கள் என்மீது சில பல தடவைகள் காரசாரமாக விமர்சனம் வைத்தார்கள்.

அன்றைய காலகட்டத்தில் அனைத்து முகாம் பொறுப்பாளராக இருந்தது சுபாஸ். இவர் அரசியல் ரீதியாக பெரிதாக வளராவிட்டாலும், தோழர்களின் பிரச்சனைகளை ஒரளவு சுமுகமாக கையாண்டு வந்தார். இதனால் பலருக்கு அவர் மீது நல்ல அபிப்பிராயம் இல்லாவிட்டாலும், எதிர்ப்பு இருக்கவில்லை. ஒரு நாள் திடீர் என முகாமில் இருந்தவர்களை, கமாண்டோ பயிற்சிக்காக அழைத்துச் செல்வதற்கு வண்டி வந்து நின்றது. அதே வேளை எம்மையும் புறப்படும்படி கூறி, ஒரு ஜீப்பும் வந்து

நின்றது. முகாம் தோழர்கள் கமாண்டோ பயிற்சிக்காக புறப்பட்டபோது, நாம் முகாம் மாற்றப்பட்டோம். அப்போது சிறையில் இருந்த நாம் பிரிக்கப்பட்டோம். ஜெகன், சலா, சண், நக்கீரன் போன்றோர் ஓரத்தநாடு முகாமில் இறக்கிவிடப்பட்டனர். மிகுதியான அன்ரனி, கே.ஆர்.விஜயன், விஜி, சோசலிசம் சிறி, ஆனந்தன், நான் மாத்திரம் தொடர்ந்து ஜீப்வண்டியில் பிரயாணம் செய்து ஒரு முகாமை அடைந்தோம். இம் முகாம் மற்றைய முகாங்களிலும் பார்க்க வேறுபட்டதாக காணப்பட்டது.

மற்றைய முகாம்கள் சவுக்கந்தோப்பை மையமாக வைத்து அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முகாம் கரும்புத் தோட்டத்தையும், வயல் பகுதியையும் ஒரு கால்வாயையும் கொண்டிருந்தது. இந்த முகாமிற்கு "எவ்" முகாம் என்று பெயர் இட்டிருந்தனர். அந்த முகாமில் எமக்காக ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த கூடாரத்தில் எம்மை விட்டார்கள். நாம் மீண்டும் கைதிகளாக வரையறுக்கப்பட்டோம். இருந்த போதும் எமது நிலை பலருக்கு தெரிந்ததாலும், அந்த முகாம் பொறுப்பாளர் உட்பட பலரும் தோழமை மனங்கொண்டவர்களாக இருந்ததாலும் அங்கு எம்மை அவர்கள் தனிமைப்படுத்தவில்லை. எமது கூடாரத்தைச் சுற்றி காவலுக்கு பலரைப் போடவில்லை. மாறாக ஒருவரையே அதுவும் சுகயீனப்பட்டவர்களையே காவல் என்ற பெயருக்கு போட்டிருந்தனர். அங்கு ஒரு சில காலங்கள் இருந்தோம்.

அந்த முகாமிற்கு பொறுப்பாளராக இருந்தவர், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பயிற்சி முடித்தவர். அவரின் பெயர் ஞாபகம் இல்லை. அவர் எம்மை நன்கு கவனித்தார். இரவு வேளைகளில் ஒன்று கூடலின் போது, எம்மையும் அழைப்பார். நாமும் அவர்களுடன் இருந்து எமக்கு தெரிந்தவற்றை தோழர்களின் முன் செய்து காட்டுவோம். இக்காலங்களில் அந்த முகாம் பொறுப்பாளர் எம்முடன் உரையாடுவார். அவர் எம்மை உளவறிந்தாரோ தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் கூறினார், நீங்கள் உமாமகேஸ்வரனுக்கு விசுவாசிகள் போன்று காட்டினீர்கள் என்றால் உங்களை விடுதலை செய்வார்கள் என்றார். இதை முதலில் சோசலிசம் சிறியும் அன்ரனியும் மறுத்தனர். அவர்களைத் தொடர்ந்து

நாமும் மறுத்தோம். அப்போது பொறுப்பாளர் நீங்கள் இப்படியே இருப்பதை விட நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடித்தீர்கள் என்றால் நான் உங்களுக்காகப் பரிந்துரை சுபாசிடம் செய்து, விடுவிக்கலாம் என்றார்.

இதை நாம் எமக்குள் விவாதித்தோம். அப்போது ஆனந்தன் இப்படியே இருந்து சாவதிலும் பார்க்க மனதளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வெளியில் நாம் இவர்களின் விசுவாசிகள் என்று வெளிக்காட்டினால், எம்மை நாம் பாதுகாக்கலாம் என்று கூறினார். இதை பின் அன்ரனியும் சோசலிசம் சிறியும் ஏற்றுக் கொண்டனர். அதன் பின் அவ்வாறு நடக்க, நடிக்க ஆரம்பித்தோம். இதைப் பொறுப்பாளரிடமும் கூறினோம். அவரும் சரியான முடிவு எனக் கூறி, இது தொடர்பாக மற்றைய வேலைகளை தான் பார்க்கிறேன் என்று உறுதியும் அளித்தார். இவ்வாறு நடந்து இரண்டு– மூன்று வாரங்களில் அன்ரனியும், கே.ஆர்.விஜயன் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் அங்கிருந்த தோழர்களுடன் சேர்ந்து பயிற்சியும் எடுக்க ஆரம்பித்தனர். அப்போது எமக்கு நடந்த கொடுமைகளைப் பற்றியும் அந்த முகாமில் இருந்த மற்றைய தோழர்களுக்கு அன்ரனியும், கே.ஆர்.விஜயன் விபரமாகக் கூறினர். தோழர்கள் அன்ரனியும், மற்றும் கே.ஆர்.விஜயனின் இச்செயற்பாட்டாலும், அவர்களின் சாதுரியமான நடத்தையாலும் எம்மீது முகாம் தோழர்களுக்கு அதிகம் நம்பிக்கை ஏற்பட்டது.

இதன் விளைவாக நாம் பகலில் எமது கைதிகள் கூடாரத்தில் (யாராவது தலைமையில் இருந்து வந்தாலும் என்பதற்காக) இருப்போம். இரவில் முகாம் தோழர் களுடன் போய் உறங்குவோம். பெயருக்கு மட்டும் நாம் கைதிகளாக காணப்பட்டோம். எமக்கான சுதந்திரம் அந்த முகாமில் முழுமையாக இருந்தது. ஒரு மாதத்திற்கு மேலாக இவ்வாறிருக்க, ஒருநாள் சுபாஸ் வந்து அன்ரனியையும் கே.ஆர்.விஜயனையும் அழைத்துச் சென்றார். அப்போது என்னையும் விஜியையும் விடுதலை செய்தார். அதன் பின் கைதிகள் என்ற போர்வையில் சோசலிசம் சிறியும், ஆனந்தனுமே அங்கு இருந்தனர். இதனால் அக் கூடாரம் அகற்றப்பட்டது. இவர்களும் முகாமில் தங்கினார்கள்.

அவர்கள் இருவருக்கும் பயிற்சி எடுக்க தடை விதிக்கப்பட்டது. நானும் விஜியும் பயிற்சி எடுக்கப் பணிக்கப்பட்டோம். எனக்கு கால்கள் சரியாக இயங்க முடியாத சுகயீன மான நிலையிலும் பயிற்சி எடுத்தேன். அப்போ அங்கு கமாண்டோ பயிற்சிக்கு அனுப்புவதற்கான ஆட்தெரிவு நடந்தது. உண்மையில் கூறப்போனால் எனக்கும் விஜிக்கும் அந்தளவு உடல் பலம் எம்மிடம் இருக்கவில்லை. ஆனாலும் முகாம் பொறுப்பாளர் எம்மையும் அதில் இணைத்தார். இதனால் நாம் கமாண்டோ பயிற்சிக்காக புதுக்கோட்டைக்கு அழைத்துவரப்பட்டோம். அங்கு பயிற்சி எடுக்கும் போது புளட்டின் பல புதிய விடையங்களை அறியக் கூடியதாக இருந்தது. மாணிக்கதாசனால் உருவாக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட கைகொமாண்டோஸ் என்ற பயிற்சி முகாம் கொமாண்டோஸ் முகாமிற்கு அருகாமையில் தான் இருந்தது. அதில் பயிற்சி பெற்றவர்கள் பல விசேட பயிற்சிகளைப் பெற்றனர். கொமாண்டோசில் பயிற்சி கொடுப்பவராக இருந்தவர் என்னுடன் ஒன்றாக படகில் வந்த அருள் என்ற தோழர். இவருடன் மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லப்பா என்பவரும் இருந்தார். நானும் விஜியும் வந்ததும் எம்மை அவர்களுக்கு ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

முதல்நாள் பயிற்சி என்னால் செய்யமுடியவில்லை காரணம் எனது காலின் பிரச்சனை. அதேபோன்று விஜியாலும் முடியவில்லை. அவருக்கு கழுத்து எலும்பு முறிந்ததால் குத்துக்கரணம் அடிப்பது அவரால் செய்ய இயலாது இருந்தது. இதனால் எம்மை முகாமில் பயிற்சிக்கு பொறுப்பாளராக இருந்த செல்லப்பாவும் அருளும் அழைத்து கதைத்தனர். எமது பிரச்சனையை கூறியதும் பயிற்றுனர்களுக்கு எம்மைப்பற்றி தகவல் தெரிவித்ததன் விளைவாக பயிற்சியில் எம்மீது கடினம் செலுத்தப்படவில்லை. அதேவேளை எமது நடிப்பு தொடர்ந்த வண்ணம் இருந்தது. விஜி பயிற்சியின் போது நன்றாக செய்ய ஆரம்பித்தார். என்னால் பாய்வது குதிப்பது போன்றவைகள் இயலாததால் நான் பயிற்சியில் அதிக திறமையாக இருக்கவில்லை. 21 நாட்களில் முடிந்த இந்த கொமாண்டே பயிற்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உமாமகேஸ்வரன் வருகை தந்திருந்தார். அங்கு வந்த உமாமகேஸ்வரன் என்னையும் விஜியையும் அழைத்து எமது உடல் நிலவரம் பற்றி விசாரித்ததுடன் இனியாவது

அமைப்பிற்கு விசுவாசமாக இருக்கும்படி கூறிச்சென்றான். இவரின் இக்கூற்று அமைப்பிற்கு விசுவாசம் என்பது தனக்கும் தான் சார்ந்தவர்களுக்கும் விசுவாசமாக இரு என்பதை மீண்டும் உணர்த்தியது. தனிமனித வழிபாட்டை மையமாகக் கொண்ட இயக்கமாக உருவெடுத்ததால் இங்கு அவர் சார்ந்த நபர்கள் எது செய்தாலும் அது கழகத்தின் வளர்ச்சிக்காக என்ற பதம் மறைமுகமாக ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டபோதிலும் பிற்காலத்தில் அது பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்ட விடையமாகவும் காணப்பட்டது.

# 18

## நம்பிக்கைக்குரிய ஆளாக நடிக்க, சுந்தரத்தினதும் உமாமகேஸ்வரனினதும் படத்தை கழுத்தில் தொங்கவிட்டேன்...

கமாண்டோ பயிற்சியை முடிந்ததும் நாம் வேறு முகாம் ஒன்றிற்கு மாற்றப்பட்டோம். அது "பீ" காம்பிற்கு அருகாமையில் ஒரத்தநாடு என்ற இடத்தில் இருந்தது. அங்கு பயிற்சி எமக்கு இருக்கவில்லை. சுயமாக பயிற்சிகளைச் செய்வதுடன் சில விசேட பயிற்சிகளும் வழங்கப்பட்டன. அங்கு கராட்டி, லொக்ஸ், சிலம்படி போன்றவை பயிற்றுவிக்கப்பட்டன. இக்காலத்தில் நான் உமாமகேஸ்வரனின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்ற நடிப்பை மிகவும் கவனமாக செய்து வந்தேன். நானும் விஜியும் ஒரு முகாமில் இருந்தாலும் இருவரும் அதிகம் கதைப்பது கிடையாது. மறைமுகமாக எமக்குள் சம்பாசணைகள் நடைபெறும். வெளிப்படையாக கதைப்பது இல்லை. ஒரு சில காலங்களில் விஜி பயிற்றுனராக வேறு ஒரு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். நான் மாத்திரம் அங்கிருந்ததால் என்னால் எளிதாக அவர்களுக்கு நம்பிக்கைக்கு உரியவனாக நடிக்க முடிந்தது. அனைத்து முகாம்களின் மருத்துவப் பொறுப்பாளர் அழகனுடன் எனக்கு

படிப்பகம்

தொடர்புகள் ஏற்பட்டது. அவர் மூலம் நானும் வேறு முகாமிற்கு செல்ல முயற்சிகளை மேற்கொண்டேன். எமது முகாமில் ஒரு வழக்கம் காணப்பட்டது. அது சுந்தரத்தின் படத்தையும் உமாமகேஸ்வரனின் படத்தையும் கழுத்தில் தொங்கவிடுவது. இதை நானும் செய்தால் எனக்கு பாதுகாப்பு கிடைப்பதுடன், தலைமையின் நம்பிக்கைக்குரிய ஆளாக அவர்கள் என்னை நம்புவதன் மூலம், தப்பிப்பதற்கான வழிகள் சாத்தியமாகும் எனக் கருதினேன்.இதனால் கழுத்தில் தொங்கவிடும் படங்களை கொண்ட சங்கிலியினை, அழகனின் உதவியுடன் நான் பெற்றுக் கொண்டேன். என்னை அவர்கள் நம்பவும் தொடங்கினர்.

இதன் வெளிப்பாடாக எமது முகாமிற்கு தண்டனை காரணமாக வந்திருந்த மொட்டை ரவியுடன் (இவர் கந்தசாமியின் வலது கரம்) நல்ல தொடர்பை ஏற்படுத்த முடிந்தது. இதன் காரணத்தால், அவரிடமிருந்து என்னால் அன்று முக்கியமான அமைப்பு விடையங்கள் எனக் கருதப்பட்ட தகவல்களை அறியக் கூடியதாக இருந்தது. இவரின் மூலம் தான் உமாமகேஸ்வரனிற்கும் பரந்தன் ராஜனிற்குமான முரண்பாட்டையும் அறிய முடிந்தது. இவரை சந்திப்பதற்காக கந்தசாமி அடிக்கடி எமது முகாமிற்கு வருவது உண்டு. அவருடனும் என்னால் இலகுவில் கதைக்கவும் முடிந்தது. முக்கியமாக நான் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவன் என்பதாலும், வெங்கட்டுடன் ஒன்றாக படித்தவன் என்பதாலும் பலதடவைகள் என்னை தன்னுடன் இணைந்து வேலை செய்யும்படி கந்தசாமி அழைத்தார்.

நான் அதை மறுத்துவிட்டேன். கந்தசாமியின் அழைப்பைப் பற்றி அழகனுக்கு தெரியப்படுத்த, அவர் தனது பொறுப்பில் என்னை எடுப்பதாக கூறினார். எமது முகாமில் முதல் உதவி வழங்குவதற்கு பொறுப்பாளராக இருந்தவருடன் தொடர்பு கொண்டு, என்னை அவருக்கு உதவியாளராக பணிபுரிய செய்தார். இதை மறைமுகமாக செயற்படுத்தியவர் தோழர் செல்வராஜா. இன்று புளட்டில் பின்தளப் பயிற்சிக்கு வந்து பலர் உயிர் தப்பி இருக்கின்றனர்– என்றால் அவர்களைக் காப்பாற்றிய பெருமையும் தோழர் செல்வராஜாவையே அது சாரும். இவர் அனைத்து முகாம் உதவி பொறுப்பாளராக கடமையாற்றியபடி, தலைமைக்கு விசுவாசியாக நடித்தபடி

பலரைக் காப்பாற்றினார். அதே போன்று தான் அழகனும். இவர்கள் தமக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் நின்று பலரைக் காப்பாற்றினார்கள். அன்றைய சூழலில் தீப்பொறியினர் தப்புவதைத் தவிர, வேறு எந்த தெரிவும் அவர்களுக்கு இருக்கவில்லை எனப் பலர் இன்று முணுமுணுக்கின்றனர். ஆனால் செல்வராஜா, மற்றும் அழகனைப் போன்று பலர் முகாமில் இருந்த தோழர்களை புளட்டின் கொலைப்பிடியில் இருந்து தப்பவைத்தனர். அவர்கள் தோழர்களை விட்டுவிட்டு ஓடவில்லை. மாறாக அமைப்பிற்குள்ளேயே நின்று மற்றைய தோழர்களை காப்பாற்றப் பாடுபட்டார்கள் போராடினார்கள்.

இக்காலத்தில் திடீர் என என்னை ஒரத்த நாட்டிற்கு வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. நான் மிகுந்த பயத்துடன் அங்கு சென்றேன். அங்கே என்னை சந்திக்க ஒருவர் காத்திருப்பதாக கூறினார்கள். யார் என்று எனக்கு கூறவில்லை. அங்கு சென்ற போது எனக்கு தெரியாத ஒரு பெண் என்னை சந்திப்பதற்காக காத்திருந்தார். தான் பயிற்சிக்காக வந்ததாகவும், எனது வீட்டாருடன் நல்ல தொடர்பில் இருந்ததாகவும் கூறினார். அவர் மூலம் எனது வீட்டாரின் சுகநலன்களை அறிந்து கொண்டேன். என்னை இவர்கள் புதைத்து விட்டார்கள் என்ற கருத்து உலாவியதால், அது உண்மையா, இல்லையா என அறிவதற்காகத் தான் இந்தச் சந்திப்பு என்றும் கூறினார்.

எனக்கு இங்கு நடந்த விடையம் பற்றி ஓரளவு வீட்டாருக்குத் தெரியும் என்றும், இதனால் அவர்கள் கவலையில் உள்ளனர் எனத் தெரிவித்தார் அந்தப் பெண். முகாம் திரும்பி அழகனிடம் இது பற்றி கூறினேன். அவர், நானும் அவரும் ஒன்றாக நின்று படம் எடுத்து, அதனை எமது வீட்டாருக்கு எனது கைப்பட எழுதிய கடிதத்தையும் வைத்து இரகசியமாக அனுப்பி வைத்தார். என்னை பின்தளத்திற்கு அனுப்பிய சுகந்தன் பின்தளம் வந்து, சென்னை சென்று விட்டதாக அழகன் மூலம் அறிந்தேன். சுகந்தன் ரெசோ அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவர். ரெசோ அமைப்பு அது புளட்டின் மாணவரமைப்பாக இருந்த போதும், முற்று முழுதாக புளட்டின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. இவ்வளவு நெருக்கடியான காலத்தில்

இவர் இங்கு வந்துள்ளார் என்றால், என்ன காரணம் எனப் பல கேள்விகள் எனக்குள் எழுந்தது. இவரும் உமாமகேஸ்வரனின் ஆளாகத் தான் இருக்க முடியும் என முடிவெடுத்தேன். இதனால் சுகந்தனை நான் சந்திக்க முயற்சியேதும் எடுக்கவில்லை. பின்னர் ஒருநாள் அவர் என்னை சந்திப்பதற்காகவும், துப்பாக்கி சுடப் பயிற்சி அளிக்கும் நோக்குடனும் மாணிக்கதாசனால் எமது முகாமிற்கு அழைத்து வரப்பட்டார்.

உண்மையில் எம்மை ஏமாற்றி திசைதிருப்பவே, சுகந்தனுக்கு துப்பாக்கி சுட பயிற்சி என்ற நாடகத்தை நடத்தினர். சுகந்தனைக் கண்ட நான் சந்தோசத்துடன் கதைத்தாலும், அவர் இந்த கொலைகாரக் கும்பலில் ஒருவர் என்ற எண்ணத்திலேயே எனது உரையாடல் இருந்தது. மாணிக்கதாசனின் துப்பாக்கி சுடும் பயிற்சியும் மேலதிகமாக சுகந்தன் மீது என்னை ஐயமுற வைத்தது. அப்போது சுகந்தனிடம் என்னை எப்படியாவது தளத்திற்கு அனுப்பும்படி, உமாமகேஸ்வரனிடம் கூறும்படி வேண்டி நின்றேன். சுகந்தனோ துப்பாக்கி சுடும் பயிற்சியை முடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். ஆனால் அவர் என்னையும் சந்திக்கத்தான் இலங்கையில் இருந்து வந்தார் என்பதை நான் உணரமுடியாத வண்ணம், என்னை அவர் மேல் சந்தேகிக்க வைத்தனர். இவ்வாறு என்னை சந்தித்தவர்களையே சந்தேகம் கொள்ள வேண்டிய நிலையில் தான், நான் மற்றவர்களுடன் பழகினேன்.

முகாமில் முக்கியமாக இரண்டு வேலைகள் தான் இருந்தன. ஒன்று அதிகாலையில் "பீ" முகாமைச் சுற்றி பாதுகாப்பது. அதாவது புதிதாக பயிற்சிக்கு என வருபவர்கள் தப்பி ஓடாமல் பார்த்துக் கொள்ளுதல். "பீ" முகாமில் இருந்து தப்பி ஓடிவருவபர்களை பிடித்து, அங்கிருந்த மொட்டை மூர்த்தியிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் இதை எமது முகாம் தோழர்கள் செய்வதில்லை. மாறாக தப்பி ஓடிவருபவர் களை, முகாமில் இருந்து தப்பி ஓடினால் என்ன பாதிப்பு நடக்கும் என விபரித்து மீண்டும் முகாமிற்கு போகும்படி கூறி அனுப்பி வைப்பார்கள். இரண்டாவது வேலை பெண்களின் பயிற்சி முகாமிற்கு பாதுகாப்பு கொடுப்பது. நாம் பாதுகாப்பு வழங்கிய பெண்களின் பயிற்சி முகாமில், 80க்கு மேற்பட்ட பெண்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் தலைமையின்—உமாமகேஸ்வரனின் சகாக்களின் கீழான நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இயங்கினர். அனைத்து முகாம் பொறுப்பாளருக்கும் இந்த முகாமிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ஆனால் இந்த முகாமை பாதுகாக்கும் பொறுப்பு, நான் இருந்த முகாமிற்கு வழங்கப்பட்டிருந்தது. பெண்களின் பயிற்சியை மேற்பார்வையிட அடிக்கடி கண்ணன், கந்தசாமி (சங்கிலி) போன்றோர் அங்கே போய் வருவார்கள்.

கண்ணன் இவர் உத்தரப் பிரதேசத்தில் பயிற்சி பெற்றவர், முகாமில் எமக்கு பொறுப்பாகவும், அதேவேளை "பீ" முகாமின் பாதுகாப்பு, பெண்கள் பயிற்சி முகாமின் பாதுகாப்பு போன்றவற்றிற்கும் பொறுப்பாளராக இருந்தவர். ஒரு முறை அவருடன் நானும் பாதுகாப்பு நிலைமையை சுற்றிப் பார்க்கும் கடமையில் ஈடுபட்டிருந்தேன். அப்போது மாலை நேரம். நாம் பெண்கள் முகாமிற்கு செல்லும் வழியில் பாதுகாப்பில் இருந்த தோழர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த வேளையில், முகாமை நோக்கி மோட்டார் சைக்கிள் வருவதை அவதானித்தோம். மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் வழமையான எனது பிரச்சனை என்னைத் தாக்க, நான் பக்கத்தில் இருந்த காட்டை நோக்கி சென்றேன். அந்த மோட்டார் சைக்கிளில் வாமதேவனும் மற்றைய ஒருவரும் வந்திருந்தனர். அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. வந்தவர்களை வழிமறித்த கண்ணன், ஏன் ?எதற்கு? எங்கே செல்கின்றீர்கள் என்ற வழமையான கேள்வியை முன்வைத்தார்.

அவ்வேளையில் நானும் அந்த இடத்திற்கு திரும்பி விட்டேன். இதற்கு சரியான பதில் கூற முடியாதவாறு வாமதேவன் தடுமாறி, தனது பாணியிலான மிரட்டலை ஆரம்பித்தார். எதற்கும் பயப்படாத கண்ணன், இறுதிவரை அவர்களை அங்கு செல்ல அனுமதிக்கவில்லை. உமாமகேஸ்வரனின் உத்தரவு இல்லாமல் செல்ல முடியாது என மறுத்தார். கண்ணனின் கேள்விகளுக்கு சரியான பதிலை கூறாது தான் உள்ளுக்குள் செல்ல வேண்டும் என வாமதேவன் வாதாடிக் கொண்டிருந்தான். உட்செல்லவிடாது வழிமறித்தபடி தொலைத் தொடர்பு சாதனத்தின் ஊடாக ஒரத்த நாட்டில் உள்ள அனைத்து முகாம் பொறுப்பாளரை

தொடர்பு கொண்டார் கண்ணன். அவரிடம் இவ்விடையம் பற்றி தெரிவித்தார். தனக்கும் இவரின் பயணத்திற்கும் சம்மந்தம் இல்லை என அனைத்து முகாம் பொறுப்பாளர் கூறினார். இதையடுத்து அவர்கள் உட்செல்வதை அடியோடு மறுத்த கண்ணன், அவர்களை திரும்பி அனுப்பினார். அப்போது வாமதேவன் "இன்னும் எத்தனை நாளைக்கு இந்த ஆட்டம் என்று பாப்போம்" என்ற மிரட்டலுடன் திரும்பிச் சென்றான்.

பல தடவைகள் இப்பதிவில் நான் கூறியது போல, புளட்டின் போராட்டம், அன்று தமிழ் மக்களுக்கானதாக இருக்கவில்லை. மாறாக சிலரின் நலனுக்காகவும், ஆதிக்க வெறிக்காகவும் இயக்கமொன்று நடத்தப்பட்டது. சீரழிந்து குட்டிச் சுவராகிக் கொண்டிருந்த வேளையிலும் பயிற்சிக்காக தளத்தில் இருந்து பெண்களை அனுப்பி வைத்தனர். இது தளத்தில் புளட்டுக்காக வேலை செய்த தலைமைப்பீடத்தினரின் தலைமை மீதான விசுவாசத்தினையே எடுத்துக் காட்டுவதுடன் அவர்களின் மக்கள் விரோத அரசியலையும் தெளிவாக்கியது.

# 19

## பெண் போராளிகளை அச்சுறுத்தி மிரட்டிய ரிவால்வர் ரீற்றா..

வாமதேவன் எச்சரித்தது போலவே , இரண்டு நாட்களில் கண்ணன் எமது முகாமில் இருந்து இடம் மாற்றப்பட்டார். இதனால் எனக்கு பயம் ஏற்பட்டது. ஏனெனில் கண்ணன் வாமதேவனை வழிமறிக்கும் போது அவருடன் நான் நின்றிருந்தேன். மேலும் ஏற்கனவே வாமதேவனுக்கு என் மீது வெறுப்பு இருந்ததாலும், எனக்கு ஏதாவது செய்வார்கள் என்ற பயத்திலும் இருந்தேன். நான் நினைத்தது சரியாகவே இருந்தது. ஒரு வாரத்தினுள் என்னை ஒரத்தநாட்டுக்கு வரும்படி அழைப்பு வந்தது. அங்கு சென்றதும் என்னை மீண்டும் "பீ" முகாமிற்கு பயிற்சிக்கு அனுப்ப உள்ளனர் என்பதனை கலாரூபன் மூலம் இவர் ஒரத்தநாட்டு காரியாலயத்தில் வேலைபார்த்தவர், என்னுடன் ஒன்றாக கல்வி கற்றவர் அறிந்து கொண்டேன். இதை உடனடியாக அழகனிடம் தெரிவித்தேன்.

அழகன் என்னை அழைத்துக் கொண்டு செல்வராஜாவிடம் சென்று, அவரிடம் இது குறித்து கதைத்தோம். அழகன் என்னை தனக்கு உதவியாக இருப்பதற்கு அனுமதிக்குமாறு ஏற்கனவே கேட்டிருந்த விடையத்தைப் பற்றி அவருடன்

கதைத்தார். அதற்கு செல்வராஜா தன்னால் மாத்திரம் எதையும் முடிவெடுக்க முடியாது என்றும், அனைத்து முகாம் பொறுப்பாளரான சுபாஸிடமும் கதைக்கும்படி கூறினார். அவ்வேளையில் சுபாஸ் ஒரத்தநாட்டில் இல்லை என்பதால் என்னை "பீ" முகாமிற்கு அனுப்புவதை தள்ளிப் போட்டார் செல்வராஜா. சுபாஸ் ஒரு சில நாட்களில் பின்னர் ஒரத்தநாட்டு காரியாலயத்துக்கு வந்திருந்தார். அழகன் அவரிடம் தனது உதவியாளராக என்னை வைத்திருப்பது குறித்து பேசியபோது, அவர் ஆரம்பத்தில் மறுப்பு தெரிவித்தார். அழகனும் தொடர்ந்தும் வலியுறுத்தியதால் என்னை முதலுதவிப் பயிற்சி பெறுவதற்காக தஞ்சாவூர் வைத்தியக்கல்லுரியில் 15 நாட்கள் பயிற்சி பெற அனுமதித்தார். அப்பயிற்சி முடிந்ததும் என்னை ஒரு முகாமிற்கு முதலுதவியாளராக அனுப்பி வைத்தார் அழகன்.

தற்போது நான் அழகனின் வைத்தியப்பிரிவில் செயற்பட ஆரம்பித்ததால், என்னைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் அழகனிடமே வழங்கியிருந்தனர். அந்த முகாமின் பெயர் "முருகண்டி" என நினைக்கின்றேன். அந்த முகாமிற்கு அருகாமையில் தான் "பண்ணை" என்ற ஒரு முகாமும் இருந்தது. இந்த முகாமிற்கு என்னை செல்வராஜாவே அழைத்துச் சென்றார். நான் அவரிடம் "ஏன் என்னை "பீ" முகாமிற்கு மீண்டும் பயிற்சி எடுக்க தலைமை முடிவெடுத்தது, நான் ஏற்கனவே கொமாண்டோ பயிற்சி முடித்து விட்டேனே " என்று கதையுடன் கதையாக வினவினேன். அவர் உன் மீது வாமனுக்கும் செந்திலுக்கும் அதிக ஆத்திரம் இருக்கின்றது. அதனால் அவர்கள் நீ ஏதாவது ஒரு சிறு தவறு செய்தாலும், அதை காரணமாக வைத்து நாலாம் மாடிக்கு அனுப்பி புதைத்து விடுவார்கள் என்றார். எனக்கோ தூக்கிவாரிப் போட்டது. அவர் மேலும் ஒரு விடையத்தையும் குறிப்பிட்டார் "நீ முதலுதவியாளராக இருக்கப்போகும், முகாமில் தான் விஜியும் பயிற்றுனராக இருக்கின்றார். எனவே இருவரும் தேவையில்லாமல் எந்தப் பிரச்சனைகளிலும் சம்பந்தப்பட வேண்டாம், இருவரும் தேவையில்லாமல் ஒரு இடத்தில் நின்று கதைக்க வேண்டாம்," எனவும் எச்சரித்தார். அந்த முகாமிற்கு சென்றதும் என்னை முகாம் பொறுப்பாளரிடம் அறிமுகப்படுத்தி, எனக்கான வேலைகளையும் அவரிடம்

கூறினார். அதன்பின் முகாம் பொறுப்பாளர் மதிய நேர ஒன்று கூடலில் என்னை முகாமில் உள்ள தோழர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அங்கு பல உளவியல் பாதிக்கப்பட்ட தோழர்கள் பலரைச் சந்திக்க நேர்ந்தது.

வன்னி மாவட்டத்தை சேர்ந்த ஒரு வயதான பெரியவர் பயிற்சிக்காக வந்திருந்தார். அவர் திடீர் திடீரென என மயங்கி விழுவார். புல தடவைகள் அவரை சிகிச்சைக்கு என அழைத்துச் சென்றுள்ளார்கள். அவரின் உடல் சோதனையில் ஒரு நோயும் இல்லை எனக் கூறி இந்திய வைத்தியர்கள் மீண்டும் மீண்டும் பயிற்சிக்கு அனுப்பியிருந்தனர். ஒருமுறை திடீர் என மயங்கியவரை தோழர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். அவரது மயக்கம் தெளிந்ததும் வழமைபோல அழத் தொடக்கினார். அவரை நான் தனிமையில் அழைத்து அவருடன் கதைக்க முற்பட்டேன். அவர் எதையும் என்னுடன் கதைக்க தயாராக இருக்கவில்லை. அவரை அவர் பாட்டில் விட்டுவிட்டு அவருடன் நல்ல தோழமையை வளர்த்தேன். குறுகிய காலத்தில் அவரிடம் எனக்கு நடந்தவற்றை கூறினேன். அதன் பின்னர் அவர் என்னுடன் அதிக பாசமாகவும் தோழமையுடனும் இருக்கலானார். அப்போது அவரிடம் ஏன் நீங்கள் இந்த வயதில் பயிற்சிக்கு வந்துள்ளீர்கள் என விசாரித்தேன். அதற்கு அவர் வழமையாக கூறும் இராணுவத்தின் கெடுபிடியால் தமது பகுதி பாதிக்கப்பட்டது. அதனால் தான் வந்தேன் என்ற பதிலை கூற நான் ஏற்காது இதற்காகவா என விசாரித்தேன். பின் அவர் தயங்கியபடி அழ ஆரம்பித்தார். தனது மகளை தன்முன்னாடியே வைத்து இராணுவம் பாலியற் பலாத்காரம் செய்ததாகவும், ஆத்திரத்தால் அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற வெறியுடன் தான் புறப்பட்டதாகவும் கூறிக்கொண்டிருக்கும் போது மயங்கி விழுந்தார்.

இதுதான் இவர் முதல்முறை தனது மனதினுள் இருந்ததை வெளியில் கூறியது. அவரின் இந்த நிலை தொடர் பாக நான் அழகனிடம் கூற, அழகன் அவரை அழைத்து மனநிலைப் பகுதிக்கு அனுப்பி குணப்படுத்தி நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைத்தார். இதேபோன்று ஒரு சிறுவன் அப்போது 16 வயதிற்குள் தான் இருக்கும். அவன்

திடீர் என உட்சுவாசத்தை மாத்திரம் செய்வான். ஆனால் வெளிச்சுவாசத்தை அருகாமையில் உள்ள தோழர்கள் அவனது வயிற்றை அழுத்தியபடி செயற்கையாக செய்விப்பார்கள். இந்த சிறுவனின் குடும்பத்தையே இராணுவம் அழித்தது. அதைப் பார்த்ததால் ஏற்பட்ட தாக்கமே. இவ்வாறான விடையங்களைப் பார்க்க எனக்கு மனநிலையில் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இதைப்பற்றி அழகனிடம் குறிப்பிட்டேன். அவர் சிறிதுகாலத்துக்கு என்னை பொறுத்திருக்கும்படியும், தன்னுடன் ஒரத்தநாட்டில் இயங்க வகை செய்வதாகவும் கூறினார்.

அவ்வாறே சிறிது காலம் போக அவர் என்னை ஒரத்த நாட்டிற்கு அழைத்து வந்து, ஊர் ஊராகச் சென்று மருந்து சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தினார். அப்போது உமாமகேஸ்வரனுக்கு பாதுகாவலராக இருந்த ஒருவர், மன்னாரில் இராணுவத்தால் சூடுபட்டு கோமாவில் இருந்தார். அவருக்கு தளத்தில் வைத்தியம் செய்ய முடியாது என்பதனால், சென்னை அரச வைத்தியசாலையில் சேர்ப்பதற்காக படகின் மூலம் கொண்டு வந்தனர். ஒரத்தநாட்டில் உள்ள அரச மருத்துவமனையில் ஒருவருக்கும் தெரியாது அவரை அங்கு இரகசியமாக பாதுகாத்தார்கள். அவரை இரவோடு இரவாக சென்னைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதால், அவருக்கு முதலுதவி வழங்கும் பொருட்டு நானும் செல்லராஜாவும், டிரைவர் வெள்ளை அண்ணையும், குகன் ஆகியோரும் அவருடன் பிரயாணம் செய்தோம்.

குண்டடிபட்டவரை கவனமாக சென்னை மருத்துவமனையில் ஒப்படைத்து விட்டு திரும்பி சென்னை காரியாலயத்துக்கு வரும் வழியில் எமது வாகனம் விபத்துக்குள்ளாகியது. அதில் நான் ஒருவன் மட்டுமே காயப்பட்டேன். உடனே என்னை வைத்திய உதவிக்காக அருகில் இருந்த வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அப்போது அவர்கள் இந்த விபத்துப்பற்றி காவல்துறையிடம் பதிவு தேவை எனக் கூற, பெரிய மென்டிஸ் (பாலமோட்டை சிவம்) தான் அதற்காக ஒடித்திரிந்து அவ் வேலைகளைக் கவனித்தார். இதை அறிந்த அழகன் உடனே சென்னை வந்தார். மறுநாள் என்னை தன்னுடன் ஒரத்தநாட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அக்காலங்களில் நான் பலரைச் சந்திக்க நேரிட்டது. ஒரு தடவை நான் ஓரத்தநாட்டில் அன்ரனியை மீண்டும் சந்தித்தேன். அவருடன் நான் அதிகம் கதைக்கவில்லை. இதற்கு காரணம் யார் யாருடைய ஆளாக இருக்கின்றார்களோ என்ற பயமே. அக்காலத்தில் தான் தளத்தில் இருந்து பஜிரோ ஜீப்வண்டி ஒன்றைக் கொண்டு வந்து வைத்திருந்தனர். இதைவிட பாலஸ்தீன பயிற்சி எடுத்த நபர் ஒருவர் (இவரின் பெயர் தவிர்க்கப்படுகின்றது) தளத்தில் இருந்து கடத்தப்பட்ட 400 சீசீ மோட்டார் வண்டியில் பெண்கள் முகாமிற்கு சென்று வருவார். அவருக்கும் என்னைத் தளத்தில் இருந்து வந்து சந்தித்த அந்தப் பெண்ணுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. போராட்டத்துக்கு பயிற்சிக்காக புறப்பட்ட இவர்களுக்கு காதல் மலர்ந்ததை எனக்கு பெண்கள் முகாமில் பயிற்சி பெற்ற பெண் தோழர் ஒருவர் அறியத்தந்தார். இந்த 400 சீசீ பேர்வழியைப் பற்றி நான் விசாரிக்க ஆரம்பித்தேன். அவரோ பெரிய "மன்மதன்". அவரது மன்மதலீலையை அரங்கேற்றவே இந்த காதல் நாடகம் போடுபவர். இதை என்னை சந்தித்த அந்த பெண்ணிடம் குறிப்பிட்டேன். அதை ஏற்க அவர் மறுத்தார். பின்னர் நான் கூறியபடியே நடந்தேறியது. பின்னர் அப்பெண் மனநிலை பாதிக்கப்பட்டவரானார்.

இவ்வாறு பெண்கள் முகாமைத் தமது வக்கிரங்களுக்கு உள்ளாக்கத் துடித்தவர்களும் உபயோகித்தவர்களும் புளொட்டின் தலைமையில் அதிகார சக்திகளாக வலம் வந்தனர். பெண் போராளிகள் என்னும் போது புளட்டில் அதிகம் பேசப்பட்டவர் ஒருவர். அவரை சிலர் ரிவோல்வர் ரீற்றா என்றும் அழைப்பார்கள். இந்த ரிவோல்வர் ரீற்றா தலைமையுடன் இணைந்து அத்தனை கொடுமை களிலும் அட்டுழியங்களிலும் சம்பந்தப்பட்டவர் என்றே கூற வேண்டும். இவரின் உதவியுடன் தான், பழிவாங்கும் நோக்கில் நேர்மையான தோழர் ஒருவர் மீது பாலியல் பலாத்கார பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. பெண் விடுதலை என்றும் பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்றும் வாய்கிழிய பேசிய போதும், பெண்களை எவ்வாறு நடத்தக் கூடாதோ அதனை விடவும் மிகவும் கேவலமாக நடத்தினார்கள். இதனை அரங்கேற்றுவதற்கு தலைமையுடன் இணைந்து ரிவோல்வர் ரீற்றா போன்ற ஒரு சிலபெண்களும் துணை போயினர் என்பது தான் கசப்பான உண்மை.

# 20

## தளத்துக்கு திரும்பியது, தலைமைக்கோ அன்றி அனைத்து முகாம் பொறுப்பாளருக்கோ தெரியாது...

புளட்டின் தலைமையிலும், முக்கிய பொறுப்புக்களிலும் விடுதலைப் போராட்டத்தினைப் பற்றி எள்ளளவும் அக்கறையற்ற லும்பன்களினதும் இந்திய அரச விசுவாசி களினதும் கைகளே பலம் பொருந்திக் காணப்பட்டது. அப்படியிருந்த போதும் உண்மையான விடுதலையை நேசித்த தோழர்கள் சிலர் அதிஸ்டவசமாக சில பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களால் தான் நான் உட்பட பல தோழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இன்று நான் உங்களுடன் எனக்கும் என்னுடனிருந்த தோழர்களிற்கும் நிகழ்ந்த கொடுமைகளைப் பற்றியெல்லாம் எழுத முடிந்தது, இவர்களினால் தான் சாத்தியமாக்கப்பட்டது.

நான் அனைத்து முகாம்களின் மருந்துவப் பொறுப்பாளர் அழகனுடன் இணைந்து வேலை செய்ததால், எனக்கும் ஒரு சில தகவல்கள் தெரியவந்தன. இக் காலத்தில் புளட்டின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இந்திய உளவுப் பிரிவை சேர்ந்த பொலிசார் ஒரத்த நாட்டில் அமைந்திருந்த காரியாலயத்திற்கு அடிக்கடி வந்து செல்வார்கள். இதனால் காரியாலயத்தில் தோழர் களின் அளவு குறைக்கப்பட்டது. அங்கே இருந்த கலாரூபன் என்பவர் அடிக்கடி பொலிசாரின்

கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.பாலமோட்டைசிவமும் (பெரிய மெண்டிஸ்) ஒரத்தநாட்டில் தங்கியிருந்து பொலி சாரின் விசாரணைகளிற்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் திடீர் என் காரியாலயத்துக்கு வந்த பொலிசார் பாலமோட்டை சிவத்தை அழைத்துச் சென்றனர். மூன்று நாட்களாக அவரை விடவில்லை. அவரை வெளியில் எடுக்க எந்த தலைமையும் முன்வரவுமில்லை. அதேவேளை அவரை காணபதற்கு சென்ற ஒரு தோழரிடம் தன்னை எவரும் சந்திக்க வரவேண்டாம் என்ற தகவலையும் அனுப்பியிருந்தார். மூன்று நாட்களின் பின்னர் வெளியில் வந்தவர், அதிகமாக உமாமகேஸ்வரனையும் வாம தேவனையும் திட்டியபடி இருந்தார். இக்காலத்தில் பலரை நாட்டுக்கு அனுப்பும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார்.

ஒரு நாள் மாலை நேரம் சுகயீனமுற்றிருந்த ஒரு தோழரை தஞ்சாவூர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது, என்னை நோக்கி ஓடி வந்த அழகன் இந்த ஜீப்பில் ஏறிப்போ என்றார். நான் எதற்காக என்று விசாரித்ததன் பின்னால் பாலமேட்டை சிவம் வந்து தனியாக அழைத்துச் சென்று, இதில் தளத்துக்கு திரும்புபவர்கள் இருக்கின்றார்கள் அவர்களுடன் நீயும் ஏறிச் செல்லு என்றார். வாகனச் சாரதியுடன் கதைத்து விட்டேன் என்றார். இது அவரின் தனிப்பட்ட நடவடிக்கையே. தலைமைக்கோ அன்றி அனைத்து முகாம் பொறுப்பாளருக்கோ இது தெரியாது.

அந்த ஜீப்பில் ஏறினதும் எனக்கு பயம் உண்டானது. மொட்டை மூர்த்தியின் முக்கிய நபர்களில் ஒருவரான குகன் அதற்குள் இருந்தார். இவர் "பீ" முகாமில் இருக்கும் போது அறிமுகமாகியிருந்தார். நாம் கோடியாக் கரையை அடைந்தோம். அங்கிருந்து தளத்திற்கு அனுப்பும் தோழர் எம்மை அழைத்து, எந்த ஊர் என்ன பெயர் என விசாரித்தார். அப்போது எனது ஊரை கூறியதும் அவர் சுகந்தனை தெரியுமா எனக் கேட்டார். நான் அவர் எனது உறவினர் என்றேன். தானும் சுகந்தனின் உறவினர் என்றும், என்னுடன் பின் கதைப்பதாகவும் கூறினார். எல்லோரினதும் விபரங்களை பதிவு செய்து கொண்ட பின்னர் "எமது பயணம் இளவாலையை நோக்கியதாகவிருக்கிறது. இது

மிகுந்த ஆபத்தான வழித்தடம். அதனால் அதிகமானவர் களை ஏற்றிச் செல்ல முடியாது" என்று கூறினார். மேலும் எம்மில் வந்தவர்களில் ஒருவர் கரையில் நிற்கவேண்டும் என்றும் தெரிவித்தார். அங்கு வந்திருந்தவர்கள் எல்லோருமே தாயகம் திரும்ப வேண்டும் என்ற நிலையில் நின்றதால் தாமாக ஒருவரும் முன்வரவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மதிய உணவிற்காக எம்மை கடைக்கு அழைத்து சென்ற அந்தத் தோழர், என்னுடன் உரையாடத் தொடங்கினார். நான் அவர் மூலமாக எனது வீட்டாரின் நிலையையும் அறிந்தேன். அதே நேரத்தில் எனது நிலைமை பற்றியும் அவரிடம் கூறினேன். அப்போது அவர் எனக்கு நடந்த சம்பவம் தொடர்பாக தான் ஓரளவிற்கு அறிந்திருந்ததாக கூறினார். மேலும் தான் என்னை அன்றிரவு செல்லும் படகில் எப்படியாவது அனுப்புவதாகவும் குறிப்பிட்டார். அதன்படி அன்றிரவு சென்ற படகில் நான் தளத்தை நோக்கி புறப்பட்டேன். மறு நாள் காலை எம்மை ஒரு வானில் வந்து ஏற்றிய தளத்தின் தோழர்கள், தமது முகாமிற்கு அழைத்துச் செல்லும் வழியில் நான் இடையில் இறங்கி நாளை முகாமிற்கு வருவதாகக் கூறிச் சென்றேன். இந்தியாவில் எனக்கும் சக தோழர்களிற்கும் நிகழ்ந்த கொடுமையான சித்திரவதையினையும், நான் கேள்வியுற்ற பின்தளத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும் பல தோழர்களிடம் கூறினேன். இதனால் தளத்தில் புளட் மீண்டும் என்னை துரத்தியது. இதுவே எனது புளட்டின் நாட்கள் ஆகும்.

## முடிவாக,

புளட் என்ற ஒரு அமைப்பில் அண்ணளவாக பத்தாயிரத்திற்கு அதிகமானோர் இயங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சாதராண போராளியா இருந்த எனக்கு இவ்வளவு விடையங்கள் அறிய முடிந்தது என்றால் மற்றும் பல தோழர்களிடம் உட்கட்சிக் கொலைகள், கொடுமைகள் பற்றி எவ்வளவு தெரிந்திருக்கும்? மத்திய குழு உட்பட்ட இன்று ஜனநாயகம், தேசியம், மக்கள் விடுதலை, புதிய திசையில் போராட்டம் என வாய் கிழியக் கதைப்பவர்கள், வாய்கள்

திறக்கப்பட வேண்டும். உடகட்சி மற்றும் புளோடினால் செய்யப்பட்ட கொடுமைகள், கொலைகள் பாலியல் வன்முறைகள் பகிரங்கப் படுத்தப்படவேண்டும்.

இரகுமான் ஜான், ஜென்னி, அசோக், பொன்னுத்துரை, செல்வராஜா, சுந்தரலிங்கம், சுகன், தீவகப் பொறுப்பாளர் காந்தி எனப் பலரின் மவுனம் கலைக்கப்படல் வேண்டும். குறிப்பாக மணியந்தோட்டத்திலும், வவுனியா விலும் கொலை செய்யப்பட்டு பல பெண் தோழியர்கள் புதைக்கப்பட்டனர். அவர்கள் பற்றிய உண்மைகள் வெளிவரவேண்டும். ஊர்காவற்துறையிலும் சுழிபுரத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பல கொலைகள் விடுதலையின் பேரால் புளட் அமைப்பினர் நடத்தினார்கள். இதற்குப் பின்னால் இயங்கிய சூத்திரதாரிகளின் உண்மை முகங்கள் அம்பலப்படுத்தப் பாடல் வேண்டும் .

இவற்றுடன் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட நபர்கள் இன்று புலத்திலும் தளத்திலும் தொடர்ந்தும் அரசியல் புரிகின்றனர். பலர் தமது கடந்தகால அரசியல் அடிப்படைகளை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு தமிழ் மக்களை அழிக்கும் அரசுடன் கூடடுச் சேர்ந்து இன அழிவிற்கு துணை நின்றனர். தங்களை நியாயப்படுத்த புலிகளின் கடந்தகால மக்கள் விரோத ஜனநாயக மறுப்புக்களை காரணம் காட்டுகின்றனர் சிலர். ஏனையோர் தங்களது கடந்தகால மக்கள்விரோத செயற்பாடுகளை எல்லாம் மறைத்துக் கொண்டு புதிய அவதாரம் எடுத்து மீண்டும் போராட எழுகின்ற புதிய தலைமுறையினருக்கு வழிகாட்ட முனைகின்றனர். இவர்களின் கடந்தகால மக்கள் விரோத செயற்பாடுகளை அம்பலப்படுத்தி ஓரங்கட்டி மீண்டும் எழ முயற்சிக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினை வெற்றி கொள்ள வைப்பது மக்களையும் தேசத்தினையும் நேசிப்பவர்கள் அனைவருக்கும் முன்னால் உள்ள மிகப் பாரிய பணியாகும்.

எமது தேச மக்களின் அரசியல் விடுதலைக்காக போரா டிய மற்றும் தொடர்ந்தும் போராடும் அனைவரையும் நோக்கிய எனது வேண்டுகோள்: இயக்க வேறுபாடுகளைக் கடந்து, நீங்கள் சார்ந்த ஒவ்வொரு இயக்கத்திற்குள்ளும்,

வெளியிலும் நிகழ்ந்த மக்களின் விடுதலைக்கு எதிராக அமைந்த அனைத்துச் செயற்பாடுகளையும், பொதுவில் மக்களின் முன்னால், விமர்சனம் சுயவிமர்சனத்திற்கு உள்ளாக்குங்கள். இதன் மூலம் கடந்தகால தவறுகளிற்கான பாடங்களை கற்றுக் கொண்டு, அடுத்த தலைமுறையாவது பரந்துபட்ட மக்களின் நலன்களை உயர்த்திப் பிடித்து, யாருக்கும் சரணடையாத விட்டுக் கொடுக்காத, ஒரு மக்கள் யுத்தத்தினை முன்னெடுத்து வெற்றி பெற வழி அமைத்துக் கொடுப்போம்.

படிப்பகம்

# வெல்வோம், அதற்காக...!

எத்தனையோ அராஜகங்கள்
தவறுகள்
புளாட் முகாம்களில் நடந்து கொண்டிருந்தது.
நாம் அதை புளாட்டின் வளர்ச்சிக்காக,
தவறுகளைக் களைவதற்காக
கழக உயர்மட்டத்தினருக்கு
எம் மகஜர் மூலம் முன்வைத்தோம்.
அதனால் எமது உயிருக்கு ஆபத்து வரும்
என்றும் உணர்ந்திருந்தோம்.
தீப்பொறியினரைப்போல
தமது உயிர்களுக்கு பாதுகாப்புத்தேடி,
கழகத்தில் இருந்து தப்பி ஓடியதைப் போன்று
நாம் செய்யவில்லை.
மாறாக
எமது உயிர்களைப் பணையம் வைத்ததே
அம் மகஜர்ப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.
எமது அன்றைய அரசியல் வளர்ச்சியின் அடிப்படையில்
எது எமக்குச் சரியாகப்பட்டதோ,
அதைச் செய்தோம்.
(பக்கம் 42)

படிப்பகம்